ஆகஸ்ட், 1958
விளம்பி - ஆவணி
40 நயா பைசா

மஞ்சரி

எங்கும் பரவிய சணல்

பேசும் பறவைகள்

பதவி பெற வழி

பைரியின் பாட்டு
(ருஷியக் கதை)

அழகி மரியாள்
(நாவல் சுருக்கம்)

செயலே கடவுள்

பால் பொங்கும்போது வழிந்தால் அது வீட்டுக்காரி செய்யும் தானமோ வேள்வியோ அல்ல. நீச்சல் அடிக்கும்போது ஒருவன் மூழ்கி இறந்தால் அது சமாதியல்ல; துர்மரணம். அறிவற்ற தியாகத்தினுல் விடுதலே கிடைக்காது. செம்மையாகச் செயலாற்றி, அதன் பயனைத் துறக்கவேண்டும். அப்போது மோட்சம் தேடிவரும். சாத்துவிகமான தியாகத்தினுல், செயலே கடவுள் மயமாகிறது.

—ஞானேசுவரர்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர் :

என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர் :

தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேஞபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்
கி. தாமோதரன்

ஓவியர்கள் :

ஸாமி, மகான், சுசி, சுப்பு

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-4. பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 40 நயா பைசா (6½ அணு). வருஷ சந்தா ரூ. 4/75 (ரூ. 4-12-0). சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 11] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: ஆகஸ்ட் 1958 [இதழ் 8

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

யுத்தம் வருமா? ''ஓ! அதெல்லாம் ஒன்றும் வராது'' என்கிறார் பிரிட்டிஷ் மந்திரி ஸெல்வின் லாய்டு. யுத்தத்துக்கு விதை போட்டவர்கள் பின்னே என்ன சொல்லுவார்கள்? விதையைப் போட்டுவிட்டு அது முளைக்காது என்கிறார்கள்! 'நாங்கள் விதை நட்டாலும் தண்ணீர் விட்டு எருப் போடப் போவதில்லை; இந்த ருஷியா அல்லவா அந்தக் காரியங்களைச் செய்யப் பார்க்கிறது!' என்பது போல அவர்கள் பேசுகிறார்கள். மத்தியக் கிழக்கு நாடுகளில் தேசீய சுதந்தர உணர்ச்சி பொங்கி எழுந்திருக்கிறது. ஈராக்கில் பழம்பசலியான முடி ஆட்சியைக் கவிழ்த்து, ராணுவப் புரட்சி நடந்திருக்கிறது. ஈராக் - ஜோர்டான் - பாகிஸ்தான் - துருக்கி- பிரிட்டன் இந்த ஐந்து நாடுகளும் சேர்ந்த பாக்தாது ஒப்பந்தம் சிதைந்தது. இந்த நிலையில் லெபனானைக் காப்பாற்ற அமெரிக்காவும், ஜோர்டானைக் காப்பாற்றப் பிரிட்டனும் படைகளை அனுப்பியிருக்கின்றன. அந்நியப் படைகள் எந்த நாட்டுக்குள்ளும் எந்தச் சாக்குப் போக்கைச் சொல்லியும் புகக்கூடாது என்பது இந்தியாவின் கட்சி. நடுநிலைமையும் நேர்மையும் உள்ள எவர் கட்சியும் இதுதான். பச்சையாகச் சொன்னால், அரபு தேசீய இயக்கத்தை நசுக்கிவிடப் பார்க்கின்றன மேல்நாடுகள்; அங்கே தங்கள் வசமுள்ள எண்ணெய்க் கிணறுகளை என்றென்றும் தாங்களே வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக, அங்குள்ள பிற்போக்கு ஆட்களையெல்லாம் தாங்கி நிற்கின்றன. அவசியமானால் அந்த நாடுகளை அடிமைப்படுத்தக்கூடச் சித்தமான தோரணையில் மேல்நாடுகளின் செயல் அமைந்திருக்கிறது. பால்கன் நாடுகளின் நிலை எப்படி முதல் உலக யுத்தத்துக்கு மூல காரணமாயிற்றோ, அப்படியே இப்போது அரபு நாடுகளின் நிலை அமைந்திருக்கிறது. வெளி வல்லரசுகள் போட்டியும் பொறாமையும் கொண்டு, அரபு நாடுகளுக்குள்ளே புகுந்து, பொம்மலாட்டம் ஆடத் தொடங்குவது முற்றும் அபாயமாகும். இந்த அபாய நிலையிலிருந்து மீள, ருஷியா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இந்தியா இந்த ஐந்து நாட்டு அரசாங்கத் தலைவர்களும் கூடி ஒரு மகாநாடு நடத்தலாம் என்று அழைத்திருக்கிறது ஸோவியத் ருஷியா. அது சீனாவையோ, எகிப்தையோ கூப்பிடவில்லை. அப்படியிருக்க, இந்த அழைப்பை வெறும் பிரசார தந்திரம் என்று ஏன் பிரிட்டனும் அமெரிக்காவும் எண்ணவேண்டும்? யுத்த அபாயம் ஒன்றும் இல்லை என்றுதான் ஏன் அவை தன் மயக்கம் கொள்ளவேண்டும்? தலைவர்கள் ஒன்றுகூடிப் பேசுவதிலே என்ன நஷ்டம்? ருஷியாவும் அமெரிக்காவும் மோதினாலொழிய இன்றைய நிலையில் யுத்தம் வராது. அந்த இரண்டின் தலைவர்களும் கூடிப் பேசும்போது, அதன் கூட்டாளிகளான பிரிட்டன், பிரான்ஸ் இரண்டின் தலைவர்களோடு, இரு தரப்புக்கும் நட்புக் கொண்ட நடுநிலைமை நாடான இந்தியத் தலைவரும் இருந்தால் போதும் என்

கிறது ருஷியா? இதற்குக்கூட ஏன் மேல்நாட்டு வல்லரசுகள் சம்மதிக்கக்கூடாது?

ஹிந்தி நண்பர் ராஜாஜி: இந்திய சர்க்காரின் துரைத்தன (அஃபிஷியல்) பாஷையாக ஆங்கிலமே நீடிக்கவேண்டும் என்று முன்னே சென்னையிலும், அப்புறம் வங்காளத்திலும் நடந்த கன்வென்ஷன்கள் தீர்மானித்தன. இப்போது ஹைதராபாதில் நடந்த கன்வென்ஷனும் இப்படியே தீர்மானித்திருக்கிறது. இந்த மூன்று கன்வென்ஷன்களிலும் ராஜாஜி கலந்துகொண்டார். இந்த இயக்கத்துக்கே இன்று வழி காட்டும் பெருந்தலைவர் ராஜாஜி என்பதும் உண்மைதான். எனவே, ராஜாஜியை ஹிந்தி வெறியர்கள் பெரிதும் வெறுக்கத் தொடங்கி யிருக்கிறார்கள். உண்மையில் ராஜாஜி என்ன சொல்லுகிறார் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை; ஹிந்தியின் சிறந்த நண்பர் ராஜாஜிதான் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. ஹைதராபாதுக்கு ராஜாஜி சென்றபோது, அவருக்கு ஹிந்திவெறியர்கள் கறுப்புக் கொடி பிடித்தார்கள். இதைப் போன்ற முட்டாள்தனம் வேறில்லை. ராஜாஜி சொல்லி வந்துள்ள விஷயங்களையெல்லாம் கவனித்து வந்தவர்களுக்கு அவருடைய கருத்துக்கள் நன்றாய்ப் புரியும். அவை இவைதான்: (1) இந்தியத் துரைத்தன பாஷையாக ஆங்கிலமே நீடிக்க வேண்டும்; (2) தேவையும் அவசியமும் சாத்தியமுமானபோது, பின் சந்ததி இதை மாற்றிக்கொள்ளட்டும்; (3) இந்தியாவிலே அதிகப்படியான மக்கள் பேசும் பாஷையான ஹிந்தியை, வேறு பாஷை மக்களும் கற்றுக்கொள்ளட்டும்; அவர்களுக்கு ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கினாலும்கூட நல்லதுதான். இந்தக் கருத்துக்களில் மூன்றாவதை ராஜாஜி இன்று அதிகமாக அழுத்திச் சொல்வதில்லை. ஆயினும், அதை அவர் இன்று கைவிட்டிருப்பதாய்த் தெரியவில்லை. ஹிந்தி வெறியர்கள் இதை உணராதது அவர்களுக்கே கேடாகும். ராஜாஜியின் மூன்றாவது கருத்து, ஹிந்தியை அடியோடு எதிர்க்கும் மிகப் பெரும்பாலாரான தென்னாட்டவருக்கு உடம்பாடல்ல. ராஜாஜியைக்கூட அவமதிக்கும் ஹிந்தி வெறியர்களைக் கண்டு, அவர்களுக்கெல்லாம் ஹிந்தித் திணிப்பின்மீது மேலும் ஆத்திரந்தான் உண்டாகும். இப்போதே ஹிந்தி வெறியர்கள் இப்படி நடந்துகொண்டால், ஹிந்தி துரைத்தன பாஷையாகிவிடும் காலம் வருமானால் அப்போது அவர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்!

விநோத விவாக ரத்து

மில்வாகீ நகரத்துப் பெண் ஒருத்தி மணம் செய்து கொண்டபோது எடுத்த போட்டோவில், அவளுடைய கணவன் அவளுக்கு மூக்குக் கண்ணாடியும் மீசையும் வரைந்து விட்டான். அவள் விவாக ரத்து வழக்கிட்டு வென்றாள்.

லாஸ் ஏஞ்செலஸ் நகரில் ஒருத்தியின் விவாக மோதிரத்தை விற்று, அந்தப் பணத்தைக் கொண்டு ஒரு பந்தயக் குதிரையை அவளுடைய கணவன் வாங்கினான்; அதோடு நிற்கவில்லை: குதிரைக்குத் தீனி போடுவதற்காக மனைவி ஏதாவது உத்தியோகம் பார்த்துப் பணம் சம்பாதிக்கவேண்டுமென்றான். மனைவி விவாக ரத்துக் கோரி அநுமதி பெற்றுவிட்டாள்.

டெட்ராயிட் நகரில், ஒரு பெண்ணுக்கு மண விருந்து நடந்து முடிந்தவுடனே போனவன்தானும் அவளுடைய கணவன்: அதற்கப்புறம் அவனை அவள் பார்க்கவே யில்லை: வருஷம் இருபத்தாறு ஆகியும் ஆள் அவள் கண்ணில் படவே யில்லை. அந்தப் பெண் விவாக ரத்துக் கோரியிருக்கிறாள்.

—ஃப்ரான்ஸிஸ் ராட்மான்



பரதநாட்டியம் முதல் பல கலைகளையும் ஆராய்ந்து விளக்கிய மேதை ஆனந்த குமாரஸ்வாமி-

இணையற்ற கலைத் தூதர்

ஜார்ஜ் கோல்

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டதும் 19-ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இந்தியாவில் அந்நிய மோகவெறி தலைக்கேறும்படி செய்துவிட்டார்கள் பிரிட்டிஷ்காரர்கள். இந்தியர்களின் வாழ்வில் ஒவ்வொரு துறையிலும் இந்த வெறி பரவியது நாட்டுக்கே துரதிருஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். அதிலும், கலைத்துறையில் வெளிநாட்டிலிருந்து 'இறக்குமதி'யான கருத்துக்களும் முறைகளும் தீங்கு விளைத்துவிட்டன; அதோடு நாட்டின் வாழ்வுமுறையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கும் இது பெருந்தடையாக இருந்தது. அந்தக் காலத்தில் மேல்நாட்டார் கீழ்நாட்டுக் கலைகளென்றாலே ஏதோ ஒரு மாதிரியாகத்தான் கருதிவந்தார்கள்; இது சம்பந்தமாக அவர்களுக்கு இருந்த நோக்கமே தவறானது.

சரித்திரம், பழம்பொருள் ஆராய்ச்சி இவற்றில் தேர்ந்த வின்ஸெண்ட் ஸ்மித் என்னும் அறிஞர்கூட 'இந்தியா இம்பீரியல் கெஜட்டீர்' என்ற பிரசுரத்தில், ''கி. பி. 300-க்குப் பிறகு செதுக்கிய இந்தியச் சிற்பங்களைக் கலைப் பொருள்களாகக் கருதுவதற்கில்லை; அதற்குத் தகுதியற்றவை. மனிதர், விலங்குகள் இந்த மாதிரி உருவங்கள் விறைப்பாகவும் ஏதோ ஒப்புக்கு அமைத்தவை போலவும் காண்கின்றன. இயல்பாக உள்ளதைக் கவனித்து அப்படிச் செதுக்கும் நோக்கமே போய்விட்டது. வலிமையைக் குறிப்பிட ஒழுங்கில்லாமல் ஏராளமான மனித உருவங்களைச் செதுக்கலானார்கள். பல தலைகளும், பல தோள்களும் கொண்ட தேவதேவிகளின் உருவங்கள் அநேகம் கோயில் சுவர்களிலும் மேல்பாகத்திலும் நெருக்கமாகக் காட்சியளித்தன. இவை அழகான பிம்பங்கள் என்பதற்குமில்லை; இன்னும் கேட்டால் இவைகளில் பெரும்பாலான உருவங்கள் பயங்கரமாகவும் விகாரமாகவும் இருக்கின்றன'' என்று எழுதியிருக்கிறார். இந்தியக் கலைபற்றி இருந்து வந்த தவறான கருத்தைத் திருத்தி, அதன் உண்மை மதிப்பை உலகுக்கு எடுத்துக் காட்டியவர் டாக்டர் ஆனந்த குமாரஸ்வாமிதான்.

'கலை என்றால் ஒரு முறையை அப்படியே பின்பற்றும் வழக்கம் தவறு; ஒரு நாட்டில் வழி வழியாக இருந்துவரும் கலாசாரத்தில் என்றும் நிலைத்திருக்கக்கூடிய

மூலம்: ஹிந்துஸ்தான் டைம்ஸ் (ஆங்கிலம்: 13-7-'58), கல்கத்தா.

மதிப்புடைய பண்புகளைப் பாதுகாக்கவேண்டும்' என்று முதல் முதல் கண்டறிந்தார் ஆனந்த குமாரஸ்வாமி.

கீழ்நாடுகள் தம் 'ஆத்மா'வையே பறிகொடுத்து வருவதைக் கண்டார்; இந்தமாதிரி அவலநிலை ஏற்படுவதைத் தடுத்தாகவேண்டும் என்று உள்ளூற முயன்றார். தமக்கு இயல்பான முறையில் தெளிவாக, "ஒரு நாட்டு மக்கள் சக்தி படைத்தவர்களா, அவர்களுடைய ஆத்மிகப் பண்பு இத்தகையது என்று கண்டறிவதற்கு அவர்களுடைய கலையின் - சிற்பம் சித்திரம், இலக்கியம், இசை இவற்றின் - பெருமையே அளவுகோல் ஆகும். ஒரு நாட்டின் கலை அந்த நாட்டின் பண்பை அப்படியே வெளிப்படுத்துகிறது; அதில் ஒளிமறைவுக்கே இடம் இல்லை; அந்தக் கலைப் பண்பு அழியாமல் இருப்பதற்கு ஏற்ற பரிகாரம் இந்திய ரீதியில் அதை ரசிக்கத் தெரியவேண்டும்; அதோடு, கலையின் தராதரத்தை மதிப்பிட ஏதாவது திட்டவட்டமான முறை ஒன்றை மீண்டும் வகுத்தாக வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியா சம்பந்தமான எந்த விஷயத்துக்கும் புது விளக்கம் தந்தார் குமாரஸ்வாமி. இந்திய நாடோடிப் பாடல்களை அந்த நாளில் சீந்துவார் இல்லை; கிராமக் கைத்தொழில்களும் அதே நிலையில் இருந்தன. ஆனந்த குமாரஸ்வாமி இதைக் கூர்ந்து கவனித்தார்; இந்த விஷயத்தில் அக்கறை செலுத்தினார். இவை புத்துயிர் பெற்றன. இந்தியக் கலையின் சரித்திர அம்சங்களையும் புராண வரலாறுகளையும் விளக்கமாக ஆராய்ந்து எழுதினார். உலகம் முழுவதும் இந்தியக் கலைபற்றி அறியவேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது. கலாசாரத் துறையில் இன்று இந்தியா உலகில் முன்னணியில் இருப்பதற்கு, டாக்டர் குமாரஸ்வாமி சோர்வின்றி உழைத்து வந்ததே பெரும்பாலும் காரணமாகும். அவர் இந்திய மறுமலர்ச்சியே (எல்லாத் துறைகளிலும் அது சிறந்தோங்க) உருவாய் வந்தவர் என்றாலும் பொருந்தும்.

டாக்டர் ஆனந்த குமாரஸ்வாமி 22-8-1877 அன்று பிறந்தார். அவருடைய தந்தை ஸர் முத்துக் குமாரஸ்வாமி லண்டனில் சட்டக் கல்லூரியில் மாணவராக இருந்த போது டிஸ்ரேலியின் நண்பர் ஆனார்; முத்துக் குமாரஸ்வாமியைக் கதாநாயகனாக வைத்து டிஸ்ரேலி ஒரு நாவல் எழுதினார்; லண்டனில் அந்தக் காலத்தில் இது பெரும் பரபரப்பு மூட்டியது. (டிஸ்ரேலி பின்னால் இங்கிலாந்தின் பிரதம மந்திரி ஆனார்.) ஆனந்த குமாரஸ்வாமி கேம்பிரிட்ஜில் சிறந்த மாணவர் என்று பெயர் எடுத்தார். 22-ஆம் வயதில் விஞ்ஞான ஆராய்ச்சியில் சிறப்பாகத் தேறினார். முதலில் இலங்கை அரசாங்க பூதத்துவ இலாகாவில் ஆராய்ச்சியாளராகச் சேர்ந்தார்; 1903 முதல் 1906 வரையில் தாதுப் பொருள்கள் சம்பந்தமாக ஆராய்ந்து வந்தார். ஆனால் அவருக்கு எப்போதும் கலைப்பண்பு பற்றிய விருப்பமே மிகுதியாக இருந்தது. உடனே மக்கள் சுயநாட்டுப் பண்பைக் கைக்கொள்ளாமல் அந்நிய மோகத்தில் ஈடுபட்டு வாழ்வதைக் கண்டித்துக் கிளர்ச்சி செய்யலானார். நாட்டிலே விரைவில் அழிந்து வரும் கலைகளையும் கைத்தொழில்களையும் அவற்றின் வழிமுறையையும் பாதுகாக்கவும், அவை புத்துயிர் பெற்று விளங்கவும் அரும்பாடுபட்டார். இந்த நோக்கத்துடனே - கீழ்நாட்டுக் கலையைப் பற்றி விளக்குவதற்கென்றே - கலாசாரப் பத்திரிகை ஒன்றைத் தொடங்கினார்.

இந்தியக் கலைத்துறையில் அவர் ஆராய்ச்சி செய்யாத - அதுவும், முதல்முதல் அவர் கைதூக்கி விடாத - அம்சமே கிடையாது. டாக்டர் கோட்ஸ், "கிரேக்கக் கலை அழகே சிறந்தது என்ற லட்சியம் உலகம் எங்கும் ஓங்கியிருந்த சமயம் மற்றவர்களை விடத் திறம்பட வாதித்து இந்தியக் கலைக் 'கொடி'யை உயர்த்தி அதன் பெருமையை நிலை நிறுத்தி

ஞர் ஆனந்த குமாரஸ்வாமி'' என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் பொருத்தமே. விஷயத்தை ஆழ உணர்ந்து, காலப்போக்கில் நாம் மறந்துவிட்ட இருண்ட யுகங்களின் ஊடே புகுந்து நன்கு ஆராய்ந்து, ஆசியா சீருடனும் சிறப்புடனும் விளங்கியதை நமக்கு எடுத்துக் காட்டினர் குமாரஸ்வாமி.

உண்மையிலேயே வெளிநாட்டில் இந்தியாவின் முதல் கலா சாரத் தூதராக அவர் விளங்கினர். பூர்விக இந்தியாவுடன் கலை உறவு உள்ள நாடுகளோடு மீண்டும் தொடர்பு கொண்டார்.

கலைகளைப்பற்றி எழுதும் போதெல்லாம் அவர் அந்த அந்தக் கலாசாரம், மதம், சமூகம் இவைகளை அடிப்படையாகக் கொண்டே ஆராய்வார்.

பரத நாட்டியத்தின் சிறப்பைப் பற்றி முதல்முதலாக உலகத்துக்கு எடுத்துக்காட்டிய அறிஞர் அவர் தான் என்றுகூடச் சொல்லலாம்.

அவர் பல விஷயங்களைப்பற்றி ஆராய்ந்து பல நூல்கள் வெளியிட்டிருக்கிறர். பலநாட்டுக் கலை, கைத்தொழில், சிற்பம், இசை, நாடகம், நாட்டியம் இவைகளில் தேர்ச்சி உள்ளவர் அவர். அவைகளைப்பற்றித் தம் நூல்களில் விரிவாக விளக்கியிருக்கிறர்.

பரத நாட்டியம், இந்தியக் கட்டிடக் கலை இவைகளைப்பற்றி அமெரிக்காவிலே தொகுத்த 'நேஷனல் என்ஸைக்ளோபீடியா'வில் அருமையான கட்டுரைகள் எழுதியிருக்கிறர். அவருடைய நினைவுக் குறிப்புகளும் கலைத்துறைகளில் ஒவ்வொன்றையும்பற்றிய கட்டுரைகளும் இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்காவில் மட்டுமன்றி பிரான்ஸ், ஜெர்மனி, பின்லந்து, ஹாலந்து, ருமேனியா முதலிய நாடுகளிலும் பிரசுரமாகியிருக்கின்றன.

டாக்டர் குமாரஸ்வாமியை வெறும் கலாரசிகர் என்றே, சரித்திர நிபுணர் என்றே சொல்வதற்கில்லை; அவர் செய்திருக்கும் தொண்டு அபாரமானது. கலாசாரத்தில் மேனாட்டுக்கு ஆசியா எந்த விதத்திலும் குறைந்துவிடவில்லை, சமமாகவே நிற்கிறது என்பதை எடுத்துக்காட்டியவர் அவர். அவருடைய நூல்களில் எல்லாம், ''கீழ்நாடு, மேல்நாடு இரண்டும் பரஸ்பரம் அறிந்து நடக்கப் பழக வேண்டும். மனித இனமே ஒத்து வாழவேண்டும்'' என்ற நல்வாக்குப் பொலிவதைக் காணலாம்.

அவர் மிகவும் பரந்த நோக்கம் கொண்டவர்; பிரபஞ்சமே இணைந்து வாழக் கலை அவசியம் என்பதை ஆனந்த குமாரஸ்வாமிக்கு முன்னல் எவருமே உணரவில்லை. ஏறக்குறைய முப்பது ஆண்டுகள், ''தொன்றுதொட்டு இருந்துவரும் எல்லாக் கலாசாரங்களுக்குமே அடிப்படையில் ஒற்றுமை உண்டு'' என்று வலியுறுத்தி வந்தார். பாரமார்த்திகம், புராண வரலாறு, தெய்வ வழிபாடு, நாடோடியாக வழங்கும் பழைய வரலாறு இந்தமாதிரி துறைகளில் மனித சமுதாயம் முழுவதிலும், ஆதிகாலம் முதல் ஓர் ஒற்றுமை இருந்து வருகிறது என்பதை அவருடைய நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. உண்மையில் அவர் மகா மேதை என்பது இதிலிருந்து தெரியும். கலாசாரத்துறையில் இப்படி அரும்பாடு பட்டார் குமாரஸ்வாமி. ரெவரண்டு ஜான் ஹேன்ஸ் ஹோம்ஸ் என்னும் அறிஞர், ''இந்தமாதிரி பல துறைகளில் தம் நாட்டு மக்களுக்காகவும் மனித சமூகத்துக்காகவும் உழைத்தவர் அபூர்வம்'' என்று அவரைப் பாராட்டியிருக்கிறர்.

இதுதான் காதல்

ஆணைப் பெண் முட்டாளாகச் செய்ய உதவும் உணர்ச்சிக்குக் காதல் என்று பெயர்.

—'அட்லாஸ் ந்யூஸ்'

இந்தியாவின் ஏகபோகமாயிருந்த சணல் தொழில் மீண்டும் வலுக்க நடக்கும் முயற்சி.

எங்கும் பரவிய சணல்

மஹதீ அப்பாஸ் ஹுஸைனி

பதினெட்டு அமெரிக்கர்கள் கொண்ட ஒரு கூட்டத்தார், கடந்த ஆண்டில் தென் துருவத்தில் தங்கள் கூடாரங்களை அமைத்தார்கள். தென் துருவத்தில் ஆறு மாத காலம் இரவாக இருக்கும். அந்தக் காலத்தில் அங்குள்ள சூழ்நிலை எப்படி இருக்கிறது என்பதை அவர்கள் பயில விரும்பினார்கள். தட்பநிலை—102° பாரன்ஹீட் வரைக்கும் இறங்கியபோதும் அவர்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். கூடாரங்களில் வெவ்வேறு இடங்களுக்குப் போக, அவர்கள் சுரங்க வழிகள் ஏற்படுத்தி, கம்பிவலைகளாலும் சாக்குத்துணிகளாலும் அவற்றை மறைத்திருந்தார்கள்.

சணலிலிருந்து சாக்குத்துணி நெய்கிறார்கள். அமெரிக்கர்கள் தென்துருவத்தில் பயன்படுத்திய அந்தச் சாக்குத்துணிகள் இந்தியச் சணலிலிருந்து நெய்தவை. அந்தச் சூழ்நிலையைத் தாங்குவதற்கு ஏற்ற உறுதியுள்ளனவாக இந்தச் சாக்குத் துணிகள் இருந்தன.

சில நாட்களுக்கு முன்பு, புரி ஜகந்நாதத்தில் தேர்த் திருவிழா நிகழ்ந்தது. சுமார் இருபதினாயிரம் மக்கள், நீண்ட சணல் வடத்தினால் இந்தத் தேரை இழுத்தார்கள். இந்தத் தேர்வடம் ஓர் அடி பருமன் இருந்தது. இதுவும் இந்தியச் சணலைக் கொண்டு திரித்ததுதான்.

புரி ஜகந்நாதத்துக்கும் தென் துருவத்துக்கும் இடையே எவ்வளவோ தொலைவு இருந்தாலும் இந்தியச் சணல் இரண்டு இடங்களுக்கும் பொதுவாக இருக்கிறது. இப்போது உலகம் முழுவதிலும் எளிதில் கிடைக்கக்கூடிய பொருளாக இருக்கிறது சணல். எத்தகைய தட்பவெப்ப நிலையிலும் இது உறுதியாக நிற்கும். ஆதலால், நிறைய டாலர்கள் சம்பாதிக்கும் பொருள் இது.

நம் வாழ்வில் சணல் பல உருவம் கொள்கிறது. கயிறு, வடம், சாக்குப் பை, கால்மெத்தை, சிறு பைகள், செருப்புக்குத் தேவையான துணி, துடைப்பத்துக்குப் பிடி, சாக்குத் துணி - இப்படி நமக்கு அன்றாடம் பயன்படும் பல பொருள்கள் சணலிலிருந்து உண்டாகின்றன. சாமான்களைக் கட்டி வெளியூருக்கு அனுப்ப, மிகவும் மலிவாகவும் உறுதியாகவும் இருப்பது சாக்குத் துணிதான்.

இந்தியாவில் சணல் உற்பத்தி பெரும்பாலும் வங்காளத்தில் உண்டாகிறது. இப்பொழுது ஒரிஸ்ஸா, பிஹார், உத்தரப் பிரதேசம் முதலிய வேறு ராஜ்யங்களிலும் இதைப் பயிர் செய்கிறார்

மூலம்: யோஜனா (ஹிந்தி: 6-7-'58), பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், இந்திய சர்க்கார், டில்லி-8.

கள்; உத்தரப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் துணைப்பயிராக இதை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சணலில் பருத்த இனமும் நேர்த்தியான இனமும் ஆகிய இரண்டு வகை உண்டு. சணல் செடி, ஈர்க்குச்சியைப்போல 8 முதல் 12 அடி உயரம்வரை வளருகிறது. இதைக் கரும்புபோல வெட்டுவார்கள். பிறகு இதை இரண்டு மூன்று வாரங்கள் குட்டையில் அழுகவைப்பார்கள். அதனால் இதன் தோலை எளிதில் உரிக்க முடியும். இந்தத் தோலை இடித்துத் தண்ணீரில் கழுவுவார்கள். பின்பு தரையிலோ குடிசைக் கூரையிலோ இதை வரிசையாகப் பரப்பி உலர்த்துவார்கள். குடியானவர்கள் கொஞ்சம் சணலைக் கயிறு திரிக்கத் தம்மிடம் வைத்துக்கொண்டு, மீதியைக் கட்டுகளாகக் கட்டிப் படகுகளில் கல்கத்தாவுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இந்தப் படகுகள் கங்கையில் காஜீபுரியிலிருந்து ஹூக்ளிக்கும், ஹூக்ளியிலிருந்து காஜீபுருக்கும் வந்து போனவாறு இருக்கின்றன.

பாரத நாட்டில் முதல் முதலில் 1855-இல் சணல் ஆலை ஏற்பட்டது. கல்கத்தாவுக்கு அருகில் ரிஷ்ரா என்னும் இடத்தில் ஜார்ஜ் ஆக்லண்டு என்பவர் இந்த ஆலையை நிறுவினார். அன்று முதல் இன்றுவரையில் கல்கத்தாதான் உலகிலேயே சணலுக்குரிய முக்கிய இடமாக விளங்குகிறது. (இப்போது டாக்காவும் இந்தத் துறையில் முன்னேறி வருகிறது.) இங்கிலாந்தில் டண்டி என்னும் இடத்தை மற்றொரு கல்கத்தாவாக மதித்தார்கள். இங்கே சணல் தோல்களை திமிங்கில எண்ணெயில் தோய்த்துச் சாக்குத் துணிகள் நெய்யக் கற்றுக்கொண்டார்கள்.

ஐரோப்பாவும் அமெரிக்காவும், மலிவான இந்தியச் சணலையே எப்போதும் நம்பி வந்தன. 1947-வரையில், உலகம் முழுவதற்கும் கச்சாச் சணல் ஏற்றுமதி செய்யும் ஏகபோக உரிமை இந்தியாவுக்கு இருந்தது. ஆனால், சணல் தொழில் பெயரளவுக்கு இந்தியாவினதாக இருந்ததே தவிர, அதன் ஆதிக்கம் அனைத்தும் ஆங்கிலேயரிடம் இருந்தது.

பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு இந்தியாவுக்குச் சணல் தொழிலில் பெருந்தீங்கு விளைந்தது. சணல் விளையும் நல்ல நிலங்கள் பாகிஸ்தானுக்குப் போயின; சணல் மில்கள் யாவும் இந்தியாவில் இருந்தன. இது நமக்குச் சோதனையாக இருந்தது. பாகிஸ்தானிடம் கச்சாப் பொருள்; நம்மிடம் ஆலைகள்! 1950-51 - இல் பழைய ஸ்டாக் தீர்ந்துவிட்டபின்பு, கச்சாச் சணலை ஏற்றுமதி செய்யும் நிலையில் இந்தியா இல்லை. சணல் உற்பத்தியினால் நம் நாட்டுக் குடியானவர்களுக்கு நன்மையே உண்டாயிற்று. கடந்த பத்து ஆண்டுகளில், பாகிஸ்தானிலிருந்து நாம் பெற்றுவந்த சணலின் அளவு, 75 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்துக்குக் குறைந்தது. 1954-இலிருந்து 1957 வரையில், மில்களுக்கு நாம் அனுப்



பிய கச்சாச் சணல் முடிச்சுக்களின் கணக்கு வருமாறு—

ஆண்டு: ஜூன்-ஜூலை	இந்தியச் சணல் (ஆயிரம்)	பாக் சணல் (ஆயிரம்)
1954-55	4428	1246
1955-56	4888	1470
1956-57	5629	646

சணல் உற்பத்தியைப் பெருக்கவும் அதன் தரத்தை உயர்த்தவும் இந்திய சர்க்கார் அவ்வப்பொழுது வழிதுறைகளை ஆலோசித்து வருகிறார்கள். 1953-இல் சணலின் தரத்தை உயர்த்த ஒரு கமிட்டி ஏற்பட்டது; 1954-இல் சணல் ஆராய்ச்சிக் கமிஷன் வந்தது; 1957-இல் சணல் ஆராய்ச்சிக் கமிட்டி ஏற்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 55 லட்சத்து 40 ஆயிரம் சணல் முடிச்சுக்களை உற்பத்தி செய்வதை இலக்காகக் கொண்டார்கள்.

சணல் ஆராய்ச்சிக் கமிட்டி தெரிவித்த விஷயங்களில் முக்கியமாவன:

(1) 55 லட்சத்து 40 ஆயிரம் முடிச்சுக்களுக்குச் சணல் உற்பத்தியைப் பெருக்குவது இப்போது சாத்தியமல்ல.

(2) சணலுக்குப் பதிலாக, அதைப்போலவே பயன்படும் வேறு பொருள்களை விளைத்து, அவற்றின் உற்பத்தியைப் பெருக்கலாம்.

(3) என்ன செய்தாலும், 1960-61-இல் சணல் உற்பத்தி நம் தேவையைவிட 6,40,000 முடிச்சுக்கள் அளவு குறைவாகவே இருக்கும்.

(4) வெளிநாட்டுச் சந்தைகளில் நாம் உயர்தரச் சணலையே அனுப்ப வேண்டும்; ஆதலால், சணலின் தரத்தை உயர்த்த நாம் முயல வேண்டும்.

இப்பொழுது சணல் ஆலைகளின் நிலைமை என்ன? நாட்டில் தொழில்கள் வேகமாக முன்னேறுவதனால், கச்சாச் சணலுக்குக் கிராக்கி மிகுதியாக இருக்கிறது. எனவே, சணல் விளைப்பவர்கள் நல்ல நிலையில் இருக்கிறார்கள். ஆனால் ஆலை முதலாளிகள் இப்பொழுதும் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு உற்பத்திச் செலவு ஏறிவிட்டது; ஆயினும், வாங்குகிறவர்கள் விலையேற்றத்தைத் தடுக்க விரும்புகிறார்கள். சணலின் மதிப்பு, பங்கு மார்க்கெட்டில் வீழ்ந்துவிட்டது. சணல் ஆலைகளைச் சில சமயம் மூடுகிறார்கள்; சில சமயம் திறக்கிறார்கள்; சில சமயங்களில் மீண்டும் மூடுகிறார்கள். இந்த நெருக்கடிக்குக் காரணங்கள் மூன்று.

(1) இரண்டாவது உலகப் போர்.

(2) நாட்டின் பிரிவினை.

(3) மில் முதலாளிகளின் தவறான நீதி.

உற்பத்தியாளரிடம் அவர்கள் நேர்மையாக நடந்துகொள்ளவில்லை. 1941-இல் ஒரு கோடியே முப்பது லட்சம் சணல் முடிச்சுக்கள், உற்பத்தியாளரிடம் கெட்டுப்போய்க் குவிந்து கிடந்தன. அவற்றை மிகவும் குறைந்த விலைக்கு விற்கும்படி மில் முதலாளிகள் நிர்ப்பந்தப்படுத்தினார்கள்.

கச்சாச் சணல் நிரந்தரமாகக் கிடைக்க வேண்டும், உற்பத்தி பெருக வேண்டும், வெளிநாட்டுச் சந்தைகளில் ஈடு கொடுக்கும்படியாகத் தரம் உயர்ந்திருக்க வேண்டும் - இதுதான் சணல் தொழிலின் அடிப்படை விஷயம்.

கச்சாச் சணல் நிரந்தரமாகக் கிடைக்க வேண்டுமானால், மில் முதலாளிகள் அதற்குத் தக்க விலை கொடுக்க வேண்டும். சணல் உற்பத்தியைப் பெருக்க மூன்று வழிகள் உண்டு. ஒன்று, அதிகமான நிலத்தில் சணல் பயிரிடவேண்டும்; இரண்டு, நிறையப் பயிரிட வேண்டும்; மூன்று, சணலின் தரம் உயர்வாக இருக்க வேண்டும். மயூராட்சி, தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம், ஹீராகுட் திட்டம் ஆகியவை நிறைவேறியதும் வங்காளத்திலும் பிஹாரிலும் ஒரிஸ்ஸாவிலும் ஆந்திரத்திலும் அதிக நிலம் கிடைக்கும். நெற்பயிருக்கு நடுவிலும் சணல் பயிரிடலாம்; ஏனெனில், 90 நாட்களில் சணல் முற்றிவிடுகிறது. நைட்ரஜன் எருப்போடுவதனால் ஏக்கர் ஒன்றுக்கு ஒரு முடிச்சு அதிகமாக உற்பத்தி செய்ய முடிகிறது. சணல் பயிரிடுகிறவர்களுக்கு வேண்டிய விதையை

1. சணல் செடி; 2. பூ; 3. விதையின் மேலே மெல்லிய போர்வை; 4. செடியின்மேல் போர்வை; 5, 6. கேசரம்

யும் எருவையும் கொடுத்து, பயிர் முறையை அபிவிருத்தி செய்து, கடன் கொடுக்கச் சர்க்கார் முனைந் திருப்பதனால், அவற்றை உற்பத்தி யாளர் பயன்படுத்திக்கொள்ள லாம்.

மில் முதலாளிகள் தங்கள் திறமையை வளர்த்து, சணலின் தரத்தை உயர்த்த, நவீன யந்திர சாதனங்களை உபயோகிக்க வேண் டும். தேசீயத் தொழில் வளர்ச்சிக் கார்ப்பொரேஷன் வாயிலாகச் சர்க்கார் மில் முதலாளிகளுக்குக் கடனுதவி செய்கிறது. இதுவரை இதன் வாயிலாக 2 கோடியே 28 லட்சம் ரூபாய் கடன் கொடுத் திருக்கிறார்கள்; பின்னும் மூன்று கோடி ரூபாய் கடன் கொடுக்க ஏற்பாடு நடந்து வருகிறது.

இனி நாம் புதிய சந்தைகளையும் தேட வேண்டிய நிலை ஏற்பட்டிருக் கிறது. அமெரிக்காவில் நம்முடைய சணல் விற்பனை 5 சதவீதம் குறைந் திருக்கிறது. இங்கிலாந்தில் சணலி னால் செய்த பொருள்களை மக்கள் குறைவாக உபயோகப்படுத்தத் தொடங்கியதனால் அங்கு நம் சணல் வியாபாரம் 50 சதவீதம் குறைந்து விட்டது. அர்ஜன்டைனாவுக்கும் ருஷியாவுக்கும் இப்போது நாம் சணல் அனுப்பிவருகிறோம். 1957-இல் இருந்ததுபோல மீண்டும் நாம் இந்தத் தொழிலில் ஏகபோக உரிமை பெற முடியாது; ஆயினும், எதிர்காலத்தில் இதில் நாம் சிறந்து விளங்க முடியும் என்பதில் ஐய மில்லை.

முச்சந்தியில் நின்ற கார்

ஓர் அம்மாள் ஓட்டிக்கொண்டு வந்த கார் முச்சந்தி நடுவில் நின்றுவிட்டது. அம்மாள் என்ன முயன்றும் காரைக் கிளப்ப முடியவில்லை.

போக்குவரத்துச் சமிஞ்ஞையான பச்சை விளக்குப் போய், மஞ்சள் விளக்கு வந்து, அதுவும் போய்ச் சிவப்புத் தோன்றியது. சிவப்பு மாறிப் பழையபடி பச்சை வந்து முடியும் சமயம்.

போலீஸ்காரனுக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது. அம் மாளின் அருகே சென்றான். ''அம்மா, எங்களிடம் உள்ள எந்த வர்ணமும் உங்களுக்குப் பிடிக்கவில்லையா!'' என்றான்.

—'லிபர்ட்டி,' டாரண்டோ.

தோட்டத்தில் மேயும் பசு

''அக்கா, அக்கா, தோட்டத்திலே ஏதோ ஒரு பசு வந்து மேய்கிறது!''

''அப்படியா, தங்கச்சி? அதன் பாலைக் கறந்துகொண்டு, அதை விரட்டிவிடு.''

—'க்யூரியஸ்,' ஜெனிவா.

பெண் பார்க்க வந்தவர்

தகழி

கதைகளின் மூலம் கேரள நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையை இவர் தொடர்ச்சியாகச் சித்திரித்து வருகிறார். ஒன்று இது:

கமலாட்சியைப் பெண் பார்க்க ஒருவன் வந்திருக்கிறான். ஆலப்புழைக்கு வடக்கே இருப்பவனும். பையன் நல்ல கெட்டிக்காரனும். தொழில், வியாபாரமாம். கமலாட்சியின் பாட்டி மூலமாகத்தான் இதற்கு ஏற்பாடு நடந்ததாம்.

பக்கத்து வீட்டுக்காரிகள் எல்லாரும் கீழண்டை வீட்டில் கூடினார்கள்.

''பையன் தேவலை. ஆனால் பெண்ணுக்கு ஏற்ற பையன் அல்ல'' என்று கல்யாணி அம்மை கூறினாள்.

இதை மறுக்க முடியாது என்ற கருத்தில் சிறிது நேரம் ஒருவரும் பேசவில்லை.

மேலும் தொடர்ந்தாள் கல்யாணி அம்மை: ''எப்படியானாலும் கல்யாணம் நடந்தால் போதும். பாவம், அவ்வளவு கஷ்டப்படுகிறாள்.''

அதற்குள் திரேஸ்யை என்பவள், ''அது உண்மைதான். அந்தப் பெண்தானே குடும்பத்தைப் பார்த்துக் கொள்கிறாள். அப்பனோ வேலைக்குப் போகாமல் சும்மா திரிகிறான். தாயோ வியாதிக்காரி'' என்றாள்.

அடுத்தபடி காளி அபிப்பிராயம் தெரிவித்தாள்: ''பெண் நல்ல கெட்டிக்காரி. ஆனால் பெண்ணுக்கும் பையனுக்கும் பொருத்தமில்லையே!''

திரேஸ்யை கேட்டாள்: ''பெண்ணுக்கு என்ன வயசு?''

காளி கணக்குப் போட்டாள்: ''என் கோவிந்தனுக்கு ஒரு வயசு பூர்த்தியான மாதத்தில்தான் அவள் பிறந்தாள். அவனுக்கு இப்போது இருபத்தைந்து வயசாகிறது.''

திரேஸ்யை தலையை ஆட்டிக்கொண்டு, ''அப்படியானால் பெண்ணுக்குத்தான் வயசு அதிகம். அந்தப் பையனுக்கு இருபத்துநாலு வயசிருக்கும், கல்யாணி அம்மே'' என்றாள்.

''இல்லை, அவனுக்கு இருபத்திரண்டு வயசுதான் இருக்கும்.''

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது கமலாட்சியின் தாய் கோதையே அங்கு வந்துவிட்டாள். அவள் ஏதோ அவசரமான காரியமாக வந்தாள்.

காளி சட்டென்று கேட்டாள்: ''அவர் என்னடீ சொல்லுகிறார்? பெண் பிடித்ததாமா?''

இதற்குக் கல்யாணி அம்மையே பதில் சொன்னாள்: ''அது இப்போதே தெரியுமா?'' பிறகு, அவள் கோதையிடம் கேட்டாள்:

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 6-7-'58), கோழிக்கோடு.

''அவருக்குக் காபியோ, சாப்பாடோ கொடுக்க வேண்டாமா? ஏதாவது ஆகியிருக்கிறதா?''

கோதை சொன்னுள்: ''அதற்குத்தான் நான் இங்கே வந்தேன். அவர் வந்தபோது கமலாட்சியின் அப்பா வீட்டில் இல்லை. பையனை அனுப்பி அவரை வரவழைத்தேன். தனியாக அவரிடம் இதைத் தெரிவித்தபோது, அவர் என்னைக் கடித்துத் தின்றுவிடுவார்போல் இருந்தது. பாவம், அவர் என்ன செய்வார்! கையில் காசு இருந்தால்தானே! நேற்று நாலு ராத்தல் கப்பக்கிழங்கும் நாழி அரிசியும் வைத்துக்கொண்டு ஒருவிதமாய்ப் போக்கினேம். இன்று அதுவும் இல்லை. பிள்ளை வரும்போது, குழந்தை 'பசிக்கிறது' என்று அழுதுகொண் டிருந்தது. கல்யாணி அம்மே, எனக்கு இரண்டு இடங்கழி அரிசியும் ஒரு ரூபாயும் தாருங்கள். நான் தாமதம் இல்லாமல் திருப்பித் தந்துவிடுகிறேன்.''

உடனே கல்யாணி அம்மை உள்ளே போய் இரண்டு இடங்கழி அரிசியும் ஒரு ரூபாயும் எடுத்து வந்து கோதையிடம் கொடுத்தாள்.

பெண்ணின் தந்தையும் பெண் பார்க்க வந்தவனும் அந்த வருஷத்திய புன்செய்ப் பயிர் பாழானதையும் அரசாட்சியின் குறைபாட்டையும்பற்றிப் பேசிக்கொண் டிருந்தார்கள். வந்தவரிடம், பப்பு பேசுவது சண்டையிடுவதாக முதலில் கோதைக்குத் தோன்றியது. கோதை முதல் மகனைக் கூப்பிட்டு, பப்புவை அழைத்துவரச் சொன்னுள். அதற்குள் கமலாட்சியின் தாத்தாவும் அடுத்த வீட்டுக்காரரும் வந்து சேர்ந்தார்கள். கோதைக்கு மனசு நிம்மதி அடைந்தது.

வாசலில் ஆண்கள் பேசிக்கொண் டிருந்தார்கள். கமலாட்சியின் தாத்தா கொஞ்சம் வெற்றிலை பாக்கும் பீடியும் கொண்டு வந்தார். தாய் சமையல் அறையை விட்டு வெளியே காரியமாகப் போனபோது, கமலாட்சி கதவு ஓரத்தில் வந்து திண்ணையைப் பார்த்தாள். இரண்டு பேர் சிறு வயசாக இருக்கிருர்கள். இதில் யார் பையன் என்பது தெளிவாகத் தெரியவில்லை: இருவரில் யாராளுலும் பரவா யில்லை என்று நினைத்தாள். அவளுக்குப் பிடித்துவிட்டது.

கோதை பப்புவை அழைத்துக் கொண்டு தோட்டத்தில் சென்று அவருடைய காலைப் பிடித்து வேண்டிக்கொண்டாள். ''பெண்ணுக்கு இருபத்துநான்கு வயசாகிவிட்டது. இவ்வளவு நல்ல பையன் நமக்குத் தவம் இருந்துதான் கிடைத்திருக்கிருன். சண்டை போட்டு இவனை விரட்டிவிடாதீர்கள்'' என்ருள்.

பப்புவுக்குக் கோபம் வந்துவிட்டது. கொஞ்சம் உரக்கவே, ''எனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது, வந்தவனை விரட்ட! நான் அவனை அடிக்கப் போனேனு என்ன?'' என்ருர்.

கோதை தன் கையால் அவருடைய வாயை மூடி, ''மெதுவாகச் சொல்லுங்கள். அவர்கள் காதில் விழப்போகிறது'' என்ருள்.

''நான் என்ன செய்ய வேண்டும் என்கிருய்?''

''வந்தவர்களிடம் அவர்கள் சொன்னதற்கெல்லாம் எதிர் சொல்லாமல் மரியாதையுடன் பழகுங்களேன்.''

''சரி, சரி; நான் என்ன சொல்லி விட்டேன்! வேண்டுமானல் பேசாமலே இருக்கிறேன்.''



"அப்படி இருந்துவிடாதீர்கள். அது போகட்டும். வந்தவர்களுக்குக் கஞ்சியோ காபியோ கொடுக்க வேண்டாமா?"

பப்புவின் கண்களில் நீர் சுரந்தது. "நான் என்ன செய்வது? என் கையில் என்ன இருக்கிறது? யாரிடம் நான் கேட்பது? தெய்வமே, என் தலை சாய்ந்தால் எவ்வளவு சௌக்கியம்!" என்று சொல்லித் தலையில் அடித்துக்கொண்டார். கோதை அவர் கையைப் பிடித்துக்கொண்டு தானும் அழுதாள்.

கொஞ்ச நேரம் பப்பு வாசல் பக்கமே போகவில்லை. பிறகு மைத்துனர் கூப்பிட்டார். பப்பு போனார்.

வந்தவரில் ஒருவர், "நாம் பேசு முன்பு பையன் பெண்ணைப் பார்க்க வேண்டாமா? அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்ட பிறகு தானே நாம் பேச வேண்டும்" என்றார்.

"அது உண்மைதான்" என்று கமலாட்சியின் தாத்தா தலையை அசைத்தார்.

பப்பு என்ன சொல்வது, என்ன செய்வது என்று தெரியாமல் நின்றார்.

பக்கத்து வீட்டுக்காரன், பப்புவிடம், "அவளை இங்கே வரச் சொல்லுங்களேன்" என்றான்.

உடனே கமலாட்சியின் மாமா, "கூப்பிட்டால் வருவாளா! கட்டி இழுத்தாலும் வரமாட்டாளே!" என்றார்.

பக்கத்து வீட்டுக்காரன், "பின்னே என்ன செய்வது?" என்றான்.

"பையன் சாமர்த்தியமாகத் தோட்டத்தில் உலாவுவதுபோல் போக வேண்டும். பெண் கிணற்றிலிருந்து தண்ணீர் சேந்த வரும்போது பார்க்க வேண்டும்" என்றார் மாமா.

இங்கே இந்தச் சம்பாஷணை நடக்கும்போது, சமையல் அறையில் தாயும் பெண்ணும் பெருங்கவலையில் ஆழ்ந்தார்கள். கமலாட்சிக்கு அவள் உடுத்திருந்த துண்டும் ஜம்பருந்தான் உள்ளவை. துண்டு சமையல் அறைக் கரி ஏறி இருந்தது. ஜம்பரோ கரியேறியதோடு கிழிந்தும் இருந்தது.

கமலாட்சி சொன்னாள்: "நல்ல வேளையாகச் சலவைக்குப் போட்ட அம்மாவின் முண்டு உள்ளே இருந்தது. ஜம்பருக்கு என்ன செய்வது? எதிர்வீட்டுப் பவானியின் ப்ளவ்ஸ் எனக்குச் சரியாயிருக்கும்; அவள் தரவும் தருவாள்."

கோதை உடனே எதிர்வீட்டுக்கு ஓடினாள். அவள் ப்ளவ்ஸ் வாங்கிக்கொண்டு வரும்போது, பையனும் அவனுடைய நண்பரும் கிணற்றடியில் சுமார் இருபது கஜம் தள்ளி நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்துக் கோதை சிரித்தாள். அந்தச் சிரிப்பில், 'என் பெண்ணைத் தண்ணீர் சேந்த வரச் சொல்லுகிறேன்' என்ற குறிப்பு இருந்தது.

சற்று நேரத்துக்கெல்லாம் வெள்ளை முண்டும் ஜம்பரும் அணிந்து குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு, கமலாட்சி கிணற்றங்கரைக்கு வந்தாள். தென்னமரத்தடியில் நின்ற பையன் பெண்ணைப் பார்த்தான். ஒரு சடங்கு நிறைவேறியது.

பிறகு அனைவரும் சாப்பிட்டார்கள். சாப்பாடு நன்றாயிருந்தது. கமலாட்சியின் மாமா கேட்டார்: "கோதே, இன்று யார் சமையல்?"

உள்ளே இருந்தபடியே கோதை, "கமலாட்சியின் சமையல்" என்றாள்.

மாமா வந்தவர்களைப் பார்த்து, "நீங்கள் பெண் பார்க்க வந்ததாலும், அவள் என் மருமாள் ஆனதாலும் நான் இப்படிச் சொல்லவில்லை; கமலாட்சி கையால் எதைத் தொட்டாலும் அது அமிர்தந்தான்" என்றார்.

சாப்பாட்டுக்குப் பின் கோதை தனியே தன்

அண்ணாவைப் பார்த்து, ''அவர்கள் பெண்ணைப் பார்த்தார்களே; ஏதாவது சொன்னார்களா?'' என்று கேட்டாள்.

''அவர்கள் அந்தப் பக்கமாக நின்று யோசிக்கிறார்கள்'' என்று அண்ணா பதில் சொன்னார்.

இதற்குள் தென்புறம் பேசிக் கொண்டிருந்தவர்கள் திரும்பிவந்து வெற்றிலை போட்டுக்கொண்டார்கள். பையனோடு வந்தவர் பிறகு சொன்னார்: ''இனிமேல் நாம் வந்த காரியத்தை யோசித்துத் தீர்மானிக்க வேண்டும். எங்களுக்கு அவசர ஜோலி இருக்கிறது. பையன் கடையைப் பூட்டிவிட்டு வந்திருக்கிறான். சாயங்காலந்தான் ஏதாவது வியாபாரம் நடக்கும்.''

மாமா சொன்னார்: ''நீங்கள் சொல்லுங்கள். எங்களுக்கு நீங்கள் பந்துக்களாக வரவேண்டும் என்றுதான் ஆசை.''

வந்தவர், ''முதலில் பையனுக்குப் பெண்ணைப் பிடித்ததா இல்லையா என்றல்லவா அறிய வேண்டும்?'' என்றார்.

''அவசியம்'' என்றார் மாமா. கமலாட்சியின் கழுத்தும் கோதையின் கழுத்தும் சற்று நீண்டன. அந்தப் பதிலில்தானே எல்லாம் அடங்கியிருக்கிறது.

வந்தவர் ஆற அமர, ''பையனுக்குப் பெண்ணைப் பிடித்திருக்கிறது. இனிமேல் அடுத்த சமாசாரம்: பையனுக்கு வியாபாரமல்லவா தொழில்? அதிலும் நாட்டுப்புறத்து வியாபாரம். அவ்வளவு பெரிய வியாபாரமா என்றால், இல்லை. ஆனால் சிறியதும் இல்லை. அவன் நிலைக்கு அவன் அழைத்துப் போகும் பெண் அவ்வளவு மோசமாக இருக்கக்கூடாது'' என்றார்.

''அப்படியென்றால்?'' என்று மாமா கேட்டார்.

''பெண் ஒருவிதமாக இருக்க வேண்டும் என்று கருத்து. ஆறு பவுன் தங்க நகை வேண்டும்'' என்றார் வந்த தோழர்.

கோதை நடுங்கினாள்.

வந்தவர் தொடர்ந்தார்: ''இந்த நாளில் கல்யாணச் செலவுக்கு இருநூற்றைம்பது ரூபாய் வேண்டும். வியாபாரத்திலிருந்து எடுத்தால்

வியாபாரம் கெட்டுவிடும். உங்களிடமிருந்தே அந்தப் பணமும் கிடைக்க வேண்டும்.''

கோதை மீண்டும் ஒருதரம் நடுங்கினாள்.

இப்போது மாது அண்ணா வாய் திறந்து, ''பப்பு அண்ணா என்ன சொல்லுகிறார்?'' என்றார்.

பப்பு அண்ணாவைக் காணவேயில்லை. எங்கே என்று எல்லாரும் பார்த்தார்கள். அவர் எங்கே போனாரோ?

''அவன் எங்கே போய்விட்டான்? இப்பொழுது இங்கே இருந்தானே!'' என்றார் பக்கத்து வீட்டுக் கிழவர்.

பிறகு அவர் பாய்ந்தோடிப் பப்புவைத் தேடினார். பப்பு தோட்டத்தின் ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்தார்.

''டேய் பப்பு, இங்கே வா!'' என்று கிழவர் கூப்பிட்டார்.

பப்பு பதற்றத்தோடு, ''வருகிறேன், வருகிறேன்'' என்றார்.

மாது அண்ணா, மீண்டும் ஒருமுறை ஏற்பாடுகளை விவரித்தார். பப்பு தலை குனிந்து மெதுவாக உலாத்திக்கொண்டிருந்தார்.

''மற்றொரு விஷயம்: கல்யாணம் நடப்பதானால் அடுத்த மாதத்திலேயே நடத்த வேண்டும்''

என்று மாது அண்ணு சொல்லி முடித்தார்.

பக்கத்து வீட்டுக் கிழவர், "வாஸ்தவம். தவிர, ஜாதகம் பார்க்க வேண்டாமா?" என்ருர்.

"அதெல்லாம் வேண்டாம், தாத்தா. அது பழங்காலச் சம்பிரதாயம்" என்று பையன் தன் கருத்தை வெளியிட்டான்.

கோதை தன் அண்ணுவோடு வெகு நேரம் யோசித்தாள். அவர் சொன்ஞர்: "என்னவாஞலும் நம் மாப்பிள்ளைக்குப் பெண் பேரில் அபிமானம் இல்லை" என்ருர்.

"பாவம், நெருப்பைத் தின்று கொண்டிருக்கிருர் அவர். அதனுல்தான் கோபமும் எவர் கண்ணிலும் படாமல் மறைவாக நடப்பதும். எங்கே போவார் அவர் இவ்வளவு பணத்துக்கு? பெண்ணிடம் அபிமானம் இல்லாமல் போகுமா?" என்று கணவரின் நிலையை விளக்கிஞள் கோதை. பக்கத்து வீட்டார் ஒன்று சேர்ந்து பேசி மீண்டும் பப்புவைக் குற்றவாளியாக்கிஞர்கள்.

கதை முடிந்தது.

கமலாட்சி கோதையிடம் கேட்டாள்: "அம்மா, கீழ் வீட்டில் கடன் வாங்கிய அரிசியையும் ரூபாயையும் திருப்பிக் கொடுக்க வேண்டாமா?"

இரண்டு கடிதங்கள்

மனநோய் நிபுணர் ஒருவரிடம் ஓர் ஆளை, அந்த ஆளின் நண்பர்கள் சிலர் கொண்டு வந்தார்கள். "இவனுக்கு ஒரு பிரமை பிடித்திருக்கிறது. தான் ஏதோ ஒரு கோடீசுவரஞகப் போகிருஞம். அதற்குச் சுமாத்ரா தீவிலிருந்து இரண்டு கடிதங்கள் வரவேண்டுமாம். அங்கே உள்ள ஒரு ரப்பர்த் தோட்டம், சில சுரங்கங்கள் இவற்றின் கிரய சாசன விவரங்கள் அந்தக் கடிதங்களில் இருக்குமாம். 'கடிதங்கள் வரவில்லையே, வரவில்லையே' என்று எப்போது பார்த்தாலும் புலம்புகிருன். இந்தக் கடிதப் பிரமையை நீங்கள்தான் தீர்த்து வைக்கவேண்டும்" என்ருர்கள்.

இந்த ஆளுக்கு அந்த வைத்தியர் சிகிச்சை செய்து குணப்படுத்திய விவரத்தைச் சில நாளைக்கெல்லாம் தம் சகாக்களுக்குத் தெரிவித்தார்: "அது ரொம்பக் கடுமையான கேஸ். வெகு கஷ்டப்பட்டு, அந்த ஆளின் பிரமையை ஒழித்துவிட்டேன். பாருங்கள், அந்தச் சமயம் பார்த்து, அந்த இரண்டு கடிதங்களும் வந்துவிட்டன" என்ருர். —'திஸ் வீக்'

டைப் மெஷினில் 2863 எழுத்து!

ஜப்பானிய டைப் அடிக்கும் மெஷினில் 2863 எழுத்துக்கள் இருக்கின்றன. லைனே மெஷினே ஜப்பானிய பாஷையில் கிடையாது. அச்சுக் கோப்பதெல்லாம் கையாலேயே செய்யவேண்டியதுதான். அச்சுக் கோக்கும் தொழிலாளி 3500 எழுத்துக்களை வைத்துக்கொண்டு போராட வேண்டியிருக்கிறது.

ஜப்பானிய பாஷையில் சொற்பொருள் கூறும் எந்தப் புஸ்தகத்தையும் அகராதி வரிசை செய்யவே முடியாது. வேறு பாஷைக்காரர்கள் சொல் அகராதி ஒன்றைப் புரட்டிப் பத்தே செக்கண்டில் ஒரு வார்த்தையைக் கண்டுபிடித்தால், ஜப்பானியன் ஒரு சொல் பட்டியல் புஸ்தகத்தை இருபது நிமிஷம் புரட்டியே ஒரு வார்த்தையைக் கண்டுபிடிக்கிருன்.

—'ஜர்னீ பை ஜங்க்'

பதவி பெற வழி

'பதவி தேடி வரும்' என்பது பொய். இதற்கு உதாரணமாகப் பழைய யுத்த மந்திரி காமிரான் எனக்கு இந்த நிகழ்ச்சியைச் சொன்னார்:

காமிரான் தம்முடைய நாட்டுப்புற வீட்டில் வசித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனிடமிருந்து காமிரானுக்கு ஒரு தந்தி வந்தது.

உடனே வாஷிங்டன் நகருக்குச் சென்று லிங்கனைக் காமிரான் சந்தித்தார்.

''காமிரான், என்னைச் சுற்றி உள்ளவர்கள் நான் இரண்டாவது தடவை ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட வேண்டும் என்கிறார்கள். நான்தான் நாட்டைக் காப்பாற்று வேணும். இதற்கு என்ன வழி?'' என்று கேட்டார் லிங்கன்.

''அப்படியா? இருபத்தெட்டு வருஷங்களுக்கு முன், ஜனாதிபதி ஜாக்ஸனும் இப்படித்தான் காகிதமெழுதி என்னைக் கூப்பிட்டு இதே மாதிரி கேட்டார். 'புயல் வீசும் இந்த நாளில் ராஜாங்கக் கப்பலை அதன் மாலுமி கைவிட்டு ஓடக் கூடாது' என்று எந்த மாகாணத்துச் சட்டசபையாவது முதல்முதல் ஒரு தீர்மானம் நிறைவேற்றச் செய்ய வேண்டும்; உடனே மற்ற மாகாணங்களும் தாமே பின்பற்றி விடும் - இந்த யோசனையை அவருக்குச் சொன்னேன். அவரும் சரி என்றார். நான் ஹாரிஸ்பர்க்குக்குச் சென்று, இப்படியே தீர்மானம் தயாரித்து நிறைவேற்றச் செய்தேன். நான் எதிர் பார்த்தபடியே மற்ற மாகாணங்களும் பின்பற்றின. ஜாக்ஸன் மீண்டும் ஜனாதிபதியானார்'' என்றார் காமிரான்.

''இப்போதும் அதே மாதிரி செய்வீரா?''

''முடியாது. நான் உங்களுக்கு மிகவும் நெருங்கியவனாக இருக்கிறேனே. ஆயினும், வேறு யாரையாவது பிடிக்கிறேன்.''

அப்படியே ஃபாஸ்டர் என்ற நண்பரைக் காமிரான் பிடித்தார். ஜாக்ஸன் தீர்மானத்தைப் புதிய நிலைமைகளுக்கு ஏற்றபடி சற்று மாற்றி அதை ஒரு சட்டசபையில் நிறைவேற்றச் செய்தார்கள். முன் மாதிரியே பலன் விளைந்தது.

சில நாளைக்கெல்லாம் லிங்கனுக்கு ஒரு வரவேற்பு நடந்தது. பெருங் கூட்டத்துக்கு நடுவே அவர் இருந்தாலும், நெட்டையாளான காமிரான் எட்ட வருவதைக் கண்டார். உடனே கைகளை ஆட்டிக்கொண்டு, ''காமிரான், இன்றைக்கு இன்னும் இரண்டு, இரண்டு'' என்று லிங்கன் கத்தினார். அதாவது, மேலும் இரண்டு சட்டசபைகளின் தீர்மானங்கள் வந்து சேர்ந்தனவாம்!

இப்படியாக, இரண்டு ஜனாதிபதிகள் ஒரே வழியால் மறு முறை பதவி பெற்றார்கள்.

—கோடீசுவரர் கார்னிகீ, 'சுயசரிதை.'



பேசும் பறவைகள்

சொன்னவர்: ஓ. ஹோகார்ட் மௌரர்
எழுதியவர்: ஜான் கோர்ட் வேஜ்மான்

மனிதர்களின் பேச்சு, பிரமாதமான சாதனை. ஆயினும் குழந்தைகள் அது என்னவோ சகஜமான விஷயம் போலப் பேசக் கற்றுவிடுகின்றன. குழந்தைகளைத் தவிர (முதியவரையும் தவிரத்தான்), பறவைகள் மட்டுமே மனிதர் பேசும் வார்த்தைகளைத் திரும்பவும் சொல்ல முடிகிறது. இப்படியிருந்தும், இந்த விஷயத்தைப்பற்றி யாரும் ஆராயாதது விந்தையாயிருக்கிறது. நான் ஒரு மனத்தத்துவ சாஸ்திரி என்ற முறையில் மொழிபற்றி வெகு காலமாய் எனக்குச் சிரத்தை உண்டு. ஆகவே, சில வருஷங்களுக்கு முன் 'பேசும் பறவை'களைப்பற்றி ஆராயத் தீர்மானித்தேன். மனிதர்களின் பேச்சை எவ்வளவு கவனித்தாலும், பேச்சைப்பற்றிய சில ரகசியங்கள் நமக்குப் பிடிபடவில்லை. இந்தப் 'பேசும் பறவை'களை ஆராய்ந்தால், அந்த ரகசியங்கள் புரியலாம் என்று நம்பினேன். இதே சமயம் இந்த அசாதாரணமான பிராணிகளை ஆராய்வதற்கு, ஹார்வர்டு சமூக உறவு ஆராய்ச்சிச்சாலை (ஸோஷல் ரிலேஷன்ஸ் லேபரட்டரி) நிர்வாகிகளும் எனக்கு ஒரு மான்யம் அளித்தார்கள். அது எனக்குப் பெருமகிழ்ச்சி அளித்தது.

என்னிடம் பயின்ற கிராஜுவேட் மாணவர்கள், இதில் என்னோடு உழைத்தார்கள். ஆராய்ச்சிச்சாலைக் கட்டிடத்தை அமைத்துக்கொண்டோம். எங்களுடைய முதல் பறவைக் கோஷ்டியின் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தோம். ஆனால், அந்தப் பறவைகள் வந்ததும், எங்களுக்கு ஏமாற்றமாய்ப் போயிற்று. இந்தியக் குன்று மைனா மிகவும் கோழையாய் மௌனம் சாதித்துவிட்டது. மெக்ஸிக்கோ இரட்டை மஞ்சள் தலைக் கிளி, எங்களைப் பார்த்துக் குரூரமாய்ச் சப்புக் கொட்டியது. அழகான ஆப்பிரிக்கப் பழுப்பு நிறக் கிளி, தன் தக்காளிச் சிவப்பு வாலை நீட்டிக்கொண்டு, நடுநடுங்கிக் கோரமாய்க் கீச்சிட்டது. நம்முடைய கொண்டைக் கிளி முட்டையிடவே மறுத்துவிட்டது. பேசும் குருவிகள் வாய் மூடி மௌனமாயின. நம் நாட்டுக் காக்கை நோயுற்றுத் தைரியம் இழந்து நலிந்தது. அவையெல்லாம் இந்த நிலையில் இருந்தவரையில், அவை எங்களிடமிருந்தோ, நாங்கள் அவற்றிடமிருந்தோ எதுவும் கற்க வழியில்லை. எனவே, என் மாணவர்களும் நானும் அவரவருடைய வீட்டுக்குச் சில பறவைகளை எடுத்துச் சென்றோம்.

இப்படி எடுத்துச் சென்றோமோ இல்லையோ, பிரமாதமான மாறுதல் ஏற்பட்டது. எங்கள் அநுபவத்திலிருந்து ஒரு விஷயம் புலனாயிற்று. வார்த்தைகளையும் மனிதரின் பிற ஒலிகளையும் கற்பதற்குக்

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்)
சிக்காகோ 39, இல்லிநாய்ஸ்,



குழந்தைகளோ பறவைகளோ பேசக் கற்பதன் ரகசியம் என்ன? அன்பிலே அடங்கியிருக்கிறது அந்த ரகசியம்.

காரணம், அதிலே ஓர் இன்பமும் ஆறுதலும் உண்டாவதுதான். அன்போடு கவனித்துப் பராமரிப்பதன் அடையாளம் அந்த வார்த்தைகளும் ஒலிகளும். தாய்மார்கள் அறியாத புதுமை அல்ல இது. ஆனால், பாஷை கற்பதுபற்றி இதுவரைக்கும் புரியாமல் பெருங் குறையாயிருந்த ஒரு விஷயம், இதிலிருந்து மனத்தத்துவ ஆராய்ச்சியாளருக்குப் புலனாயிற்று.

நாங்கள் இந்தப் பேசும் பறவைகளை ஆராய்வதற்குமுன், சில நிபுணர்கள் ஒன்று சொல்லி வந்தார்கள். குழந்தைகள் ஏதோ தம்மை அறியாமல் யந்திரம்போல மனிதரின் பேச்சைக் காப்பியடித்து விடுகின்றன என்று அவர்கள் சொன்னார்கள். வேறு சிலரோ அதிருஷ்டமே பேச்சுக்குக்காரணம் என்றார்கள். அதாவது, குழந்தை உளறிக் கொண்டேயிருக்கும்போது தற்செயலாக ஒலிக்கும் ஏதாவது ஓர் ஒலி, அதன் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுமாம். உடனே குழந்தையிடம் பெற்றோர் அதிகப்படியாகக் கவனம் செலுத்துவார்களாம். இப்படி அந்த ஒலிக்காகக் குழந்தைக்குப் பரிசு கிடைத்துவிடுகிறதாம். ஆனால், குழந்தையைச் சீராட்டவோ பாராட்டிப் போஷிக்கவோ ஏதோ அர்த்தம் கொண்ட ஒலிக்குறிப்பு ஒன்றை அது செய்யும் வரைக்கும் எந்தத் தாயும் காத்திருக்க மாட்டாள். இது எல்லாருக்கும் தெரியும். இந்த மாதிரி ஒரு கொள்கையைத் தாய்மார்கள் மட்டும் கடைப்பிடித்திருப்பார்களானால், பாஷை என்பதே வெகு காலத்துக்கு முன்பு மறைந்து போயிருக்கும்.

வீட்டிலே வைத்துப் பராமரித்த போது, பறவைகள் நன்றாக முன்னேறின. மைனாவுக்கு 'ஸ்பைக்' என்று பெயர் வைத்து, என் படிப்பறையில் வைத்துக்கொண்டேன். கொஞ்சங் கொஞ்சமாக அது பேச ஆரம்பித்தது. சிப்பாய்கள் கவாத்துப் பழகும்போது ஸார்ஜெண்ட் கட்டளை போடுவானே, அந்த மாதிரி குரலில் அது பேசியது. நெருங்கிய ஒரு தோழனோடு பேசுவதுபோல் இருந்தது எனக்கு. நான் தன்னந் தனியே வெகு நேரம் என் மேஜைக்கு முன்னே உட்கார்ந்து எழுதிக்கொண்டிருப்பேன். அப்போதெல்லாம் என் சிந்தனை ஓட்டத்துக்குத் தடையில்லாமல், மைனாவோடு நான் பேசிக்கொண்டிருக்க முடிந்தது. ''ஹல்லோ!'' என்று நான் கூப்பிட்டால், ''சௌக்கியமா?'' என்று அது உடனே விசாரிக்கும். ''சௌக்கியந்தான்'' என்பேன். ''விசேஷம் ஏதாவது உண்டா?'' என்று அது கேட்கும். மனிதர் மாதிரி தோரணையில் அது பேசிக்கொண்டு போகும். ரொம்பத் தெரிந்தது போல, ''சரி, சரி'' என்றும், அநுதாபப்படுவதுபோல், ''நிஜமாகவா?'' என்றும் இடையிடையே சொல்லும்.

ஒரு பறவைக்கு எப்படிப் பேசக் கற்றுக்கொடுப்பது? உணவுக்கும் அன்புக்கும் ஒரு மனிதனை அது சார்ந்திருக்கும்படி செய்யவேண்டும். இதுதான் முதல் காரியம். இதற்கப்புறம் அந்தப் பறவை,

பிப்ரவரி '58), 4600, டைவெர்ஸி அவென்யூ, ஐக்கிய அமெரிக்கா.

தன் இனமான பிற பறவைகளை விட்டு மனிதர்களிடமே அதிக மாய்ப் பழக விரும்புகிறது. மனிதர்களிடம் பறவை கொள்ளும் இந்தப் பற்றுதல் சில சமயம் மிகவும் வலுவாகிவிடுவதால், தன் இனப்பறவைகளை இது லட்சியமே செய்யாமல் போவதுண்டு. அவற்றோடு காதல் சம்பந்தங்கூட வைத்துக்கொள்ளுவதில்லை!

எங்கள் காக்கைக்கு ரூபென் என்று பெயர். அதை நியூ ஹாம்ஷயர் கிராமத்தில் உள்ள எங்கள் கோடைவாசஸ்தலத்தில் ஒரு வருஷ காலம் வைத்திருந்தோம். அங்கே அதைச் சுதந்தரமாய் விட்டிருந்தோம். சுற்றிலும் இருந்த புலங்களிலிருந்தும் காடுகளிலிருந்தும் 'கா, கா' என்று கரைந்துகொண்டு பறந்து திரிந்த காக்கைக் கூட்டத்தோடு எந்த நேரமும் சேர்ந்து கொள்ள அதற்குத் தடை ஏதும் இல்லை. ஆயினும், அதுவோ நேர் மாருக நடந்துகொண்டது. மற்றக் காக்கை எதுவாவது எங்கள் எல்லைக்குள் வந்தால், அதை எங்கள் ரூபென் அடித்து விரட்டியது. பறவை இனத்தை விட்டு மனிதரிடம் அதன் விசுவாசம் எப்படி வலுவாக மாறிவிட்டது என்பதற்கு இன்னும் ஓர் உதாரணம், அது எங்கள் குழந்தைகளுக்குக் காவல் புரியத் தொடங்கியதுதான். மாலை நேரத்தில் எங்கள் கைக்குழந்தை சற்றுத் தூங்குவதற்காக, முற்றத்தில் அதன் தொட்டிலில் குழந்தையை நாங்கள் போடுவோம். உடனே எங்கள் ரூபென் வந்து தொட்டில் சட்டத்தில் உட்கார்ந்து, பாரா கொடுக்கத் தொடங்கிவிடும். தொட்டிலை விட்டுக் குழந்தையை எடுக்கும் வரையில் காக்கை நகராது.

நாம் ஒரு பறவையை எவ்வளவுக்கெவ்வளவு தாங்கிச் சீராட்டுகிருேமோ அவ்வளவுக்கவ்வளவு அது குழந்தைபோல நம் கையையே எதற்கும் எதிர்பார்த்து வாழ்கிறது; பழக்குகிறவனைத் தனக்கு ஒருவகைச் 'செவிலித்தாய்' போல் ஆக்கிக்கொண்டு விடுகிறது. பழக்குகிறவனிடம் பறவைக்கு ஆழ்ந்த அன்பு ஏற்பட்ட பிறகுதான் - அப்போது மாத்திரமே - அது பேசக் கற்கிறது. இதனுல்தான் நாம் அதற்குப் பயிற்சி அளிக்கும்போது, மற்றப் பறவைகளிடமிருந்து அதைப் பிரித்து வைக்கவேண்டியிருக்கிறது. பார்க்கப் போனுல், அதன் தாயும் தந்தையும் பறவைகள்தானே. ஆகவே, தன் இனமான பறவைகளோடேயே அதைச் சேர்த்துவைத்தால், அவற்றையே பார்க்கவும், அவற்றின் ஒலிகளையே கேட்கவும் அது ஆசைப்படுவது சகஜம். இப்படி இல்லாமல் ஒரு பறவை சகல தேவைகளுக்கும் மனிதன் கையையே முற்றும் நம்பியிருக்கும்படி செய்தால், அந்தப் பறவை தன் சொந்தக்காரனேடு கூடியிருக்கவே ஆவல் கொள்ளும். 'குட்-பை' (விடைபெறுகிறேன்) என்ற சொல்லைவிட, 'ஹல்லோ' (வருக, வருக) என்ற சொல்லையே பறவைகள் அதி சீக்கிரம் கற்றுவிடுவதற்கு ஒருவேளை இதுவே காரணமோ என்னவோ!

எங்கள் மெக்ஸிக்கோ கிளியைப் பார்ப்பதற்காக ஒரு சமயம் அயல் குழந்தைகள் எங்கள் வீட்டு முற்றத்துக்கு வந்தன. அன்றைத் தினம் நல்ல குளிராயிருந்தது. கிளி மிகவும் சிடுசிடுப்பாயிருந்தது. குழந்தைகளிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. ஆயினும், குழந்தைகள் புறப்படச் சித்தமானபோது, கிளி மிகவும் தெளிவாக, ''டோண் கோ'' (போகாதீர்கள்) என்று சொல்லியது. இந்த வார்த்தைகளை ஒருபோதும் நாங்கள் அதற்குச் சொல்லிக் கொடுக்கவில்லை. எங்கள் வீட்டுக்கு வந்த விருந்தாளிகள் போகும்போது, ''போகாதீர்கள்'' என்று என் மனைவி சொல்வதை எப்போதோ கிளி கேட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

என் நண்பர்கள் சிலர் பெர்முடா நகரப் பார்க்கில் உள்ள ஒரு கிளியைக் காணச் சென்றுர்கள். பேசுவதில் பெருங் கீர்த்தி பெற்றது அந்தக் கிளி. நண்பர்கள் அதைப் பார்த்தபோது ஏமாந்தார்கள். அதன் கூட்டுக்குமுன் வெகு நேரம் நின்று, அதைப் பேச்சுக்கு

இழுக்க அவர்கள் எவ்வளவோ முயன்றும் பயன் இல்லையாம். என்றாலும், அவர்கள் அதை விட்டுக் கிளம்ப ஆயுத்தமானார்களோ இல்லையோ, கிளி மளமள என்று பொரிந்து தள்ளிவிட்டதாம். புத்திசாலியான கிளி! அவர்கள் அதன் கூட்டுக்குமுன் நின்று வேடிக்கை காட்டிக்கொண்டிருந்த வரையில், கிளி எதற்காகத் தன்னைச் சிரமப்படுத்திக்கொள்ள வேண்டும்? ஆனால், அவர்கள் புறப்படத் தொடங்கியபோதோ, அது தன் வேலையைக் காட்ட ஆரம்பித்துவிட்டது.

யாரும் துணையில்லாமல் தனியே இருப்பதென்றால், பறவைகளுக்குக் கஷ்டமாயிருக்கிறது. தவிர, மனிதரைப் போலவே, பறவைகளுக்கும் பொறாமை உண்டாகிறது. தனிமைமீது உண்டாகும் ஒருவித அச்சந்தான் பொறாமையாக உருவெடுக்கிறது. தனக்குப் போட்டியாக வேறு ஒரு பறவையோ மனிதனோ தன் சொந்தக்காரனின் கவனத்தைக் கவர வந்தால், பழகிய பறவை பெருங் கோபம் கொள்ளுகிறது. சகோதரக் குழந்தைகளுக்குள் உண்டாகும் பொறாமையைப் போன்றதுதான் இது என்று தோன்றுகிறது. தன் சொந்தக்காரனைத் தன் பக்கமே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை, பறவை பேசக் கற்பதன் முக்கியமான நோக்கங்களுள் ஒன்று.

தனக்கு யாரிடம் ஆசையோ அவரைப் போலவே தானும் ஆக வேண்டும் என்ற முயற்சியால் குழந்தை கற்கிறது; பறவை கற்பதும் இப்படித்தான். பறவைக்குப் பயிற்சி அளிக்கும்போது, அதற்கு மிக இன்பமாகவும் ஆறுதலாகவும் சில வார்த்தைகளை நாம் சொல்லுகிறோம்; அந்த வார்த்தைகளைத் திரும்பச் சொல்ல அவை பிரியப்படுகின்றன. நம்முடைய பறவை தனிமையிலே பட்டினியாய்க் கிடக்கும். அப்போது நாம் வந்து, அதற்கு இரை கொடுத்துக் கொஞ்சுகிறோம். அதற்குத் தீனித் துணுக்கு ஒன்றைப் போடுவோம்; அதன் கழுத்தைத் தடவிக் கொடுப்போம். "என்ன சங்கதி!" என்று இங்கிதமாய்க் கேட்போம். இது நல்ல ஒலியா யிருக்கிறது. பறவை இதைத் தானும் திருப்பிச் சொல்கிறது. முன்பு நாம் இதைச் சொன்னதைக் கேட்டபோது தனக்கு உண்டானது மாதிரி சிறிது சந்தோஷத்தை, இப்படியாகப் பறவை மீண்டும் அடைகிறது.

சொல் ஒலியைக் கொண்டு தனிமையின் கஷ்டத்தைப் போக்கிக்கொள்ளப் பறவைகள் மட்டுமா முயல்கின்றன? நாமுந்தான். சுற்றிலும் கலகல என்று மனிதர்கள் பேசிக்கொண்டிருந்தால், உலகமே நம் பக்கத்தில் இருப்பதுபோல் நாம் உணர்ச்சி அடைகிறோம். ஏதாவது கொண்டாட்டமான பார்ட்டி நடக்கும்போது, அந்த அறைக்குள் புகுமுன் வாயிற்படியிலே சற்று நின்று பாருங்கள். அங்கேயுள்ள மனிதக் குரல்களின் ரீங்காரம் என்னவோ உங்களைத் தாலாட்டுவதுபோல் இன்பமாயிருக்கக் காண்பீர்கள். பலர் கூடிய கொண்டாட்டங்களில் மனிதர்கள் சொல்லும் வார்த்தைகள் முக்கியம் அல்ல. அப்படிக் கூடுவதே ஓர் ஆறுதல் கொடுக்கிறது; "நாம் எல்லாரும் கூடியிருக்கிறோம்; நீ மட்டும் தனியாக இல்லை" என்று தைரிய மூட்டுகிறது.

நீங்கள் எப்போதாவது அயல் நாட்டுப் பிரயாணம் செய்திருந்தால், அங்கே யாராவது உங்கள் சொந்த பாஷையைப் பேசும்போது எவ்வளவு இன்பம் உண்டாகிறது என்று அறிந்திருப்பீர்கள். இது உண்மையிலே உங்கள் 'தாய்ப் பாஷை (தாயின் பாஷை)'. இதன் ஒலியே, நீங்கள் பத்திரமாயிருப்பதாக - சொந்த வீட்டிலே நண்பர்களிடையே இருப்பதாக - உங்களுக்கு உணர்ச்சி ஊட்டுகிறது. கிளிகளும் மைனாக்களும் காக்கைகளும் தொட்டில் குழந்தைகள்போல் தங்களுக்குத் தாங்களே வார்த்தைகளை உளறிக்கொண்டிருப்பதை அடிக்கடி நான் கண்டிருக்கிறேன். தங்களுக்கு வேண்டிய மனிதரின்

துணையை இப்படித் தாங்களாகவே அவை படைத்துக்கொள்கின்றன!

நாம் குறித்த முறையில் ஒலிகளை, அதாவது வார்த்தைகளைத் திருப்பி உச்சரிக்கக் குழந்தைகளோ பறவைகளோ கற்ற பிறகு, ஒரு விஷயத்தை அவை அறிந்து கொள்ளுகின்றன: அவை இன்பம் கொடுப்பது மட்டும் அல்ல, உங்களுக்குக் கட்டளை இடவும் பயன் படும் என்று தெரிந்துகொள்ளுகின்றன. ஆப்பிள், கொட்டைபோன்ற பல தீனிகளையும் கேட்கக் கிளிகளுக்குக் கற்றுக்கொடுக்க முடியும் என்பதை நான் கண்டேன். கிளிகள் வைத்திருக்கும் சிலர், தங்கள் கிளிகள் இந்த விஷயத்தில் கண்டிப்பாய்க் கட்டளையிட்டுக் கேட்கின்றன என்று என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தக் கட்டம்வரையில் குழந்தைகளும் சரி, பறவைகளும் சரி, ஒரே வகையான ஒலிப்பழக்கங்களையே (வோக்கல் ஹாபிட்ஸ்) கற்கின்றன. ஆனால், குழந்தைகளுக்குப் பதினெட்டு மாதமோ இரண்டு வருஷமோ ஆகிவிட்டால், பறவைகளிடமிருந்து அவை பெரிதும் வேறுபட்டு விடுகின்றன. மிகவும் சாமர்த்தியமான பறவை கூட இதற்கப்புறம் குழந்தைகளுக்கு இணையாக முடியாது. வார்த்தைகளை இணைத்து, புதிய பொருள் உள்ள வாக்கியங்களைக் குழந்தைகள் அமைக்கத் தொடங்கிவிடுகின்றன. மனித சாதனையிலே இது பிரமாதமான வெற்றியாகும். ஆயினும், இது சர்வசகஜமாய் நடப்பதால், இயற்கையான விஷயமாக எண்ணிவிடுகிறோம். வார்த்தைகளைக் குழந்தைகள் கற்பதும் ஓர் அற்புதந்தான். ஆனால், அது இதற்கு அடுத்தபடியே ஆகும்.

பட்சிகளும் வாக்கியங்களைத் திருப்பிச் சொல்லும். ஆனால், புதிய புதிய வாக்கியங்களை அமைத்துச் சொல்ல அவற்றுக்குத் தெரியாது. மாலையிலே வீட்டுக்கு அப்பா திரும்பி வந்தால், தளர் நடைக் குழந்தை எப்படியோ இரண்டு மூன்று வார்த்தைகளை இணைத்து, அன்றைய விசேஷ நிகழ்ச்சி ஒன்றைப்பற்றி அவருக்குச் செய்தி சொல்லிவிடுகிறது. வாக்கியங்களின் மூலம் இடத்தையும் காலத்தையும் இந்தக் குழந்தை கடந்துவிடுகிறது. குழந்தையின் உலகம் அற்புதமாய் விரிந்துவிடுகிறது. உங்கள் செல்லப் பறவை எவ்வளவுதான் சாமர்த்தியமாயும் கவர்ச்சியாயும் இருந்தாலும், அதற்கு இந்த நிலை ஏற்படுவதில்லை!

கார்டினல் என்ற கொண்டைக் குருவி ஜோடி ஒன்று எங்கள் முற்றத்தில் சில சமயம் கூடு கட்டுவதுண்டு. பூனை வந்தால், அதை முதல்முதல் கண்ட குருவி விசித்திரமாய்த் தொடர்ந்து ஒருவித ஒலி கொடுக்கும். பயமும் ஆத்திரமும் கலந்து அது கீச்சிடுவதாய்த் தோன்றுகிறது. மற்றக் குருவியும் குஞ்சுகளும் உடனே நாலு புறமும் கவனித்துப் பூனையைக் கண்டு கொள்கின்றன. பெரிய குருவிகள் கீச்சிடுவதன் மூலம் தங்கள் குஞ்சுகளுக்கு, ''..அபாயம்!..அருவருக்கத் தக்கது!..'' என்று தெரிவிக்கின்றன. இது பயனிலை மட்டுமே உள்ள ஒரு வாக்கியமாகிறது. ஆனால், குஞ்சுகள் உடனே அடையும் தங்கள் சொந்த அநுபவத்தால், எழுவாயைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டியிருக்கிறது. 'பூனை' என்று குறிக்கக் குருவிப் பெற்றோர்களிடம் வார்த்தை இல்லை. ஆகவே, பூனையால் தங்கள் குஞ்சுகளின் எதிர்கால வாழ்க்கையில் நேரக்கூடிய அபாயங்களைக் குஞ்சுகளுக்கு ஒரு நாள் மாலை நேரத்தில் சாவகாசமாக அவை தெரிவிக்க முடியாது. நல்லதையும் கெட்டதையும் பற்றித் தான் அறிந்த விஷயங்களை மற்றவருக்கு அறிவிக்கக்கூடிய இணையற்ற மொழித்திறன் மனிதனுக்கு மட்டுமே உண்டு. விலங்கின் அறியாமையிலிருந்து மனிதன் உயர்ந்தெழுந்தது இதனால்தான்; படைக்கவும், கண்காணிக்கவும், தான் வாழும் உலகத்தைப் புரிந்து கொள்ளவும் புதியதொரு தெய்விகத் திறமையை அவன் பெற்றிருப்பது இந்த மொழித்திறனால்தான்.

பேசும் பறவைகள் இந்தக் கணத்தில் இந்த இடத்திலே வாழ்

கின்றன. இதோடு சரி. ஆயினும் அவற்றின் பேச்சுக்கெல்லாம் அர்த்தமில்லை என்றாகாது. அவை சொல்லும் சொற்கள் தங்களுக்குத் தாங்களே ஆறுதல் செய்துகொள் வதற்காக இருக்கலாம்; தங்களுடைய குறிப்பிட்ட தேவைகளைப் பிறருக்குத் தெரிவிக்கும் குறிப்புகளா யிருக்கலாம். பறவைகள் சில பொருள்களை அல்லது சில மனிதர்களைச் சொற்களோடு இணைத்துக் கொள்ளுகின்றன என்று தெளிவாய்த் தெரிகிறது. மெயின் என்ற ஊரிலிருந்து பறவை அன்பர் ஒருவர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அவருடைய பால்காரனிடம் அவருடைய கிளிக்கு மிகுந்த நட்பாம். பால்காரன் எப்போது வந்தாலும் சரிதான்; கிளி உடனே, ''இன்றைக்கு ஐந்து புட்டி (குவார்ட்ஸ்) போதும், ஸார்'' என்று கத்துமாம். வேறு யாரிடமும் அது இப்படிச் சொல்வதில்லையாம். யாராவது சமையலறைக் கதவைத் திறந்து வைக்க, அதனால் காற்று வீசுமானால், ''மூடு அந்தக் கதவை!'' என்று அந்தக் கிளி கூச்சலிடுமாம்.

மொழி என்பது அநுபவத்தைப் பகிர்ந்துகொள்ளும் கருவியாகும். உணர்ச்சி உறவுகளிலிருந்துதான் மொழி உண்டாயிற்று. பிறந்த இரண்டு மூன்று வருஷ காலம் தாயின் அன்பையும் ஆதரவையும் பெறாத குழந்தைக்குப் பேச்சு வருவது தடைப்படுகிறது.

டாக்டர் மார்ஜோரி ஸாங்கர் என்பவள் என்னுடைய மாணாக்கருள் ஒருத்தி. தாய் அன்பு மிகுந்த தாய் எவளும் நாள் முழுவதும் தன் குழந்தைகளை ஒலி வெள்ளத்தில் முழுகடிப்பதாக அவள் சொல்லுகிறாள். அந்தத் தாய் அடுத்த அறைகளுக்குச் செல்லும்போதுகூட, பாடியோ அழைத்தோ தன் குழந்தைக்குக் குரல் கொடுக்கிறாள். நன்றாய் உருவான வார்த்தைகளைச் சொல்லுவதற்குப் பதிலாக, கூ, கா என்று அவள் கூவிக் கொஞ்சுகிறாள். தாயைப் போலவே குழந்தையும் ஒலி செய்ய இதனால் வசதியாகிறது.

எங்கள் பறவை ஆராய்ச்சியின் முக்கியமான அம்சத்தை இங்கே சொல்லுகிறேன்: இளம் பெற்றோர் இருவர் தங்கள் மகளான பாட்ஸி என்பவளை என்னிடம் அழைத்து வந்தார்கள். தங்கள் பெண் ஒரு நாளும் பேசக் கற்க மாட்டாளோ என்று அவர்கள் பயந்தார்கள். பாட்ஸிக்கு இரண்டு வயசாகியும், மற்றக் குழந்தைகள் மாதிரி மழலை கூடப் பேசவில்லை. அவள் செவிடோ என்று அவர்கள் சந்தேகப்பட்டார்கள். சமீபத்தில் பரீட்சித்தபோது, அந்தச் சந்தேகம் ஊர்ஜிதம் ஆகிவிட்டது. என்றாலும், சில ஒலிகள்மட்டும் அவளுக்குக் காதில் விழுந்ததாகத் தாய் நிச்சயமாய் அறிந்தாள். தீக்குச்சிகளை வைத்துக்கொண்டோ, சமையலறையிலே மண்ணைப் பிசைந்து உருட்டியோ அவள் விளையாடுவதைத் தாய் தடுப்பது வழக்கம். இந்த ஆட்சேபமான விளையாட்டுக்களை அவள் விளையாடினால், ''வேண்டாம்'' என்று தாய் கத்துவாள். அப்போது பாட்ஸி முதுகுப்பக்கம் திரும்பியிருந்தால்கூட, விளையாட்டை நிறுத்திவிடுவாள். அவளைப் பரீட்சையெல்லாம் செய்த டாக்டர் 'ஹீயரிங் எய்டு' என்ற செவிக்கருவி ஒன்றை அவளுடைய காதில் மாட்டச் சொன்னார். என்றாலும், பாட்ஸி அதை எப்போதும் கழற்றி எறிந்துவிடுவாள். பெற்றோர் மறுபடியும் மாட்டிவிட்டால், பெருங் கூச்சல் போடுவாள்.

பேசும் பறவைகளிடம் நாங்கள் பெற்ற அநுபவத்திலிருந்து, பாட்ஸியின் கோளாறு என்ன என்பதை இப்படி ஊகித்தேன்: எதையாவது 'செய்யாதே' என்று தாய் தடுக்கும்போது எழும் கடோரமான இங்கிதமில்லாத ஒலிகள் மட்டுமே பாட்ஸியின் காதில் விழுந்தன. இந்த ஒலிகளைத் திருப்பிச் சொல்ல-கேட்கக் கூடத்தான்-அவள் விரும்பவில்லை. இது இயற்கை. அவள் செவிக்கருவியைக் கழற்றி எறிந்ததற்கும், ஒரு போதும் பேசாததற்கும் இதுவே காரணம். தாயின் குரலைக்

கொண்டே தாயின் அன்பைப் பாட்ஸி அளந்துகொண்டாள்.

இதைப் பாட்ஸியின் தாயிடம் தெரிவித்தேன். எங்கள் புது முறையைப் பரீட்சை செய்து பார்க்க அவள் இசைந்தாள். பாட்ஸியைக் கட்டுப்பாடு செய்யமட்டும் தன் குரலைக் காட்டாமல், அவளைப் புகழவும் அன்பு பொழிந்து பாராட்டிச் சீராட்டவும் தொடங்கினுள். இது சுலபமாயில்லை. இனிய மிருதுவான குரலிலேதான் அன்பு வெளிப்படும். ஆயினும், தாயின் கடோரமான குரலிலுங்கூட அன்பு வெளிப்படுவதைப் பாட்ஸி உணர்ந்தாள்.

தாயின் குரலை இன்னும் அதிகமாகக் கேட்கச் சீக்கிரத்திலேயே பாட்ஸி விரும்பினுள். செவிக் கருவியை வேண்டாமென்று தள்ளியதற்கு மாருக, இப்போது தூக்கத்தில்கூட அதை அணிந்துகொண்டாள். நாலே மாதத்தில் அவள் பேச ஆரம்பித்தாள். இது இரண்டு வருஷங்களுக்கு முன் நடந்த விஷயம். பாட்ஸியின் தகப்பனுரிடம் சமீபத்தில் அவளைப்பற்றி விசாரித்தேன். அவர் சிரித்துக்கொண்டே, ''நீங்கள் அவள் பேச்சைக் கேட்கவேண்டும்; கடகட என்று கொட்டுகிருள்'' என்ருர்.

அன்பைப் பெற்றும் அன்பு சொரிந்துமே மொழியைக் கற்கிருேம். ஆதியிலே எல்லாப் பேச்சும் அன்புப் பேச்சாகவே இருந்திருக்கிறது. இது எனக்கு எப்படித் தெரியும்? ஒரு குருவி சொல்லியது; இல்லை, பல குருவிகள் சொல்லின.

மாலையிட்ட காட்சி

ஆலப்புழையில் 'மனேகரா' நாடகம். அதில் நான்தான் கதாநாயகி விஜயா. மனேகரனுக நடித்தவர் காலஞ் சென்ற நடிகர் பி. எஸ். வேலு நாயர்.

போரில் வெற்றி மாலை சூடித் திரும்பிய மனேகரன் தன் காதலியைச் சந்திக்க வரும் காட்சி வந்தது. நான் மாலையும் கையுமாக நின்றுகொண் டிருந்தேன். மனேகரன் வந்ததும் நான் அவருக்கு மாலையைப் போடவேண்டும்.

மனேகரன் (வேலு நாயர்) வந்துவிட்டார். அவரோ ஆஜாநுபாகுவாக இருப்பார். ஆறடி உயரம். போதாததற்குத் தலையில் ஓர் அடி உயரத்துக்குத் தலைப்பாகை கட்டியிருந்தார்.

நாலடி உயரமே இருந்த நான் அவருக்கு மாலை போடுவது எப்படி? கையில் மாலையுடன், தவியாய்த் தவித்தேன். ''மாலை போட வேண்டும்; குனியுங்கள்'' என்று கெஞ்சலாகவும் கொஞ்சலாகவும் சொன்னேன்.

அவரோ, ''இந்த மனேகரன் இதுவரையில் யாருக்குமே தலை வணங்கி அறியாதவன்; கேவலம் ஒரு பெண்பிள்ளைக்கு முன்னலா தலை குனிவான்!'' என்று ஒரே பிடிவாதமாகத் தலை குனிய மறுத்துவிட்டார்.

எனக்கோ அழுகையே வந்துவிடும் போல் ஆகிவிட்டது. என்னுடைய அப்போதைய நிலை அவருக்கு என்மீது இரக்கம் ஏற்படச் செய்திருக்க வேண்டும். ''விஜயா, இரு; இதோ வருகிறேன்'' என்று உள்ளே போனுர்.

அடுத்த நிமிஷம் மேடைக்குத் திரும்பி வந்தார். தாம் தூக்கிவந்த நாற்காலியை என் அருகே வைத்தார். ''உம்.. இதில் ஏறி நின்றுகொண்டு என் கழுத்தில் மாலையைப் போடு'' என்ருர்.

நான் நாற்காலிமீது ஏறி அவருக்கு மாலையிட்டேன்.

சபையோரின் கைதட்டலில் கொட்டகையே அதிர்ந்தது.

—எஸ். டி. சுப்புலட்சுமி, 'குமுதம்'.

அற்புத எதிரொலி தரும் கோல்கும்பாஸ் உள்ள நகரம் இது.

மசூதி நிறைந்த பிஜாபுர்

என். வி. ஆர். ஸ்வாமி

தென்னிந்தியாவில் உள்ள பல பெரிய ஊர்களில் சில புண்ணிய க்ஷேத்திரங்களாகவும், சில சரித்திர ரீதியாகவும் பிரசித்தி பெற்றிருக்கின்றன. இவைகளில் அநேக இடங்களுக்கு ஜனங்கள் அடிக்கடி விசேஷ காலங்களில் சென்று வருவதால், அந்த ஊர்களைப்பற்றி, மற்ற ஊர் மக்களுக்கு நன்றாகத் தெரிய வருகிறது. ஆனால் சில பெரிய ஊர்கள் அநேகருக்கு அதிகமாகத் தெரிந்திருக்கவில்லை. காரணம்:

அந்த இடங்களைப்பற்றிய முக்கியத்துவம் தெரியாததால், அந்த இடங்களைப் பார்ப்பதற்கு ஜனங்கள் அடிக்கடி போய்வராததுதான். அப்பேர்ப்பட்டவைகளில் பிஜாபுரும் ஒன்று. இது தட்சிண ரெயில்வேயிலுள்ள 'கதக்' (Gadag) என்ற ஜங்ஷனிலிருந்து, ஷோலாப்புர் செல்லும் மார்க்கத்தில் 134-ஆம் மைலில் அமைந்திருக்கிறது. வட இந்தியாவிலிருந்து வருகிறவர்கள் 'ஹோட்கி' (Hotgi) என்ற ஜங்ஷனில் இறங்கி வேறு ரெயில் மூலம் 56- ஆம் மைலில் இந்த ஊரை அடையலாம். சரித்திர காலத்தில் பிஜாபுர் மிகவும் முக்கிய நகரமாக விளங்கிவந்தது. ஆதிகாலத்தில் இதற்கு 'விஜயபுரி' என்று பெயர். 11-ஆம் நூற்றாண்டில் சாளுக்கிய மன்னர்கள் இந்தப் பக்கம் ஆட்சி செய்து வந்தபோது, பிஜாபுர் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. பிறகு 12-ஆம் நூற்றாண்டுக் கடைசியிலும், 13-ஆம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் தேவகிரியை ஆண்டுவந்த யாதவர்களின் கைக்கு இது மாறியது. அல்லாவுத்தீன் கில்ஜி வம்சத்தைச் சேர்ந்த மாலிக் காபுர், 1310-ஆம் வருஷம் படையெடுத்த பிறகு அவருடைய குமாரர் கரிமுத்தீன் கவர்னராக வந்ததும் பிஜாபுரைத் தலைநகரமாக்கிக் கொண்டார். வெகுநாள் வரையில் பாமினி அரசர்களின் ராஜ்யத் தலைநகர்களில் ஒன்றாகப் பிஜாபுர் இருந்து வந்தது. ஆனால் 15-ஆம் நூற்றாண்டு இறுதியில், பாமினி அரசாங்கத்தின் ராணுவத் தலைவர்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்படவே ஒவ்வொருவரும் தாங்கள் ஆண்டுவந்த ராஜ்யத்தைத் தங்களுடையதாகப் பிரகடனம் செய்து கொண்டு விட்டார்கள். அதிலிருந்து பாமினி ஆட்சி சீர்குலைய ஆரம்பித்தது. இப்படித் தங்கள் ராஜ்யங்களை ஸ்தாபித்துக் கொண்டவர்களுள் பிஜாபுரை ஆண்டு வந்த அலி அடில்ஷா, அகமத் நகரை ஆண்டு வந்த நைஜாம்ஷா, கோல்கொண்டாவை ஆண்டு வந்த குலி குதுப்ஷா என்ற மூவரும் முக்கியமானவர். இப்படி 1400-



அதிசய எதிரொலி எழுப்பும் கோல்கும்பாஸ்

காப்பிரைட்: தினமணி சுடர் (தமிழ்: 20-10-'57), சென்னை.

இலிருந்து பிஜாபுரை அடில்ஷா வம்சத்தினர் ஆண்டு வந்தார்கள். நைஜாம்ஷா, தம் மகள் சாந்த் பீபியை அடில்ஷாவுக்கு மணம் புரிவித்து, தம் வசம் இருந்து வந்த 'பகல்காட்' (Bagalkot) என்ற ஜில்லாவையும் மருமகனுக்குச் சீராகக் கொடுத்தார். அதன் பிறகு சுமார் 200 வருஷம் பிஜாபுர், தென்னிந்தியாவிலுள்ள ஒரு முக்கியமான நகரமாக வளர்ந்தோங்கியது. அதற்கு மேல் அடில்ஷா வம்சம் நிலைத்திருக்க முடியவில்லை. 1686-ஆம் வருஷம் மொகலாய சக்கரவர்த்தி ஔரங்கசீப் படையெடுத்த போது, அந்த நாளில் ஆண்டு வந்த சிக்கந்தர் தோல்வியுறவே அதிலிருந்து பிஜாபுர் ஔரங்கசீபின் ஆளுகைக்கு வந்தது. சிக்கந்தருக்குப் பிறகு அடில்ஷா வம்சம் சீரழிந்து விட்டதென்றே கூறலாம். இப்படி மொகலாய அரசரின் ஒரு ராஜ்யத் தலைநகராக இருந்துவந்த பிஜாபுரை, 1724-இல் ஹைதராபாதை ஆண்டு வந்த நைஜாம், தம் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்து அப்படியே பிரகடனமும் செய்துகொண்டார். பிறகு மகாராஷ்டிரர் கைக்கு மாறி, அப்புறம் சாதாராவை ஆண்டுவந்த அரசர்களிடம் சேர்ந்தது. பிஜாபுர் இப்படிப் பலருடைய ஆட்சிக்கு உட்பட்டு, 1818-இல் வெள்ளைக்காரர் ஆளுகையின்கீழ் வந்தது. 1885-ஆம் வருஷம் பம்பாய் சர்க்கார், பிஜாபுரை ஒரு ஜில்லாவாகச் செய்தார்கள்.

இங்கே வரும் ஒவ்வொருவருடைய மனத்தையும் கவர்பவை பெரிய பெரிய மசூதிகள். 1489 முதல் 1686 வரையில் இங்கே ஆண்டு வந்த அடில்ஷா வம்சத்து அரசர்களில் ஒவ்வொருவரும் தம் தம் ஆட்சியின் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு பெரிய மசூதியைக் கட்டி வைத்தார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கு முந்தியிருந்த அரசர்கள் கட்டியவைகளைக் காட்டிலும் சிறந்ததாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் கட்டியிருப்பதால், ஒவ்வொரு மசூதியும் சிறந்து விளங்குகிறது. இந்தக் கட்டிடங்களிலுள்ள வேலைத் திறமையையும் நுட்பத்தையும், இந்தக் காலத்தில் எங்கும் காண முடியாது என்பது திண்ணம்.

எல்லா மசூதிகளையும் சுற்றி நான்கு புறத்திலும் சுவர்கள் அமைந்திருக்கின்றன. இந்தச் சுவர்களின் நீளம் கிழக்கு மேற்கில் சுமார் 19,000 அடி; அகலம் தெற்கு வடக்கில் 1650 அடி. கோட்டையைச் சுற்றி நான்கு புறங்களிலும் பெரிய வாயில்கள் இருக்கின்றன. இவைகளில் மிகவும் முக்கியமானது தென்புறத்தில் இருக்கும் ஃபட்டே வாயில் (Fateh gate). மொகலாய சக்கரவர்த்தி ஔரங்கசீப் இதன் வழியாகத் தான் கோட்டைக்குள் புகுந்தார் என்று சொல்லுகிறார்கள்.

வட இந்தியாவிலுள்ள கோல்கொண்டா மாதிரி பிற கோட்டைகளைப் போலவே, பிஜாபுரிலுள்ள கோட்டையின் வாயில் கதவுகளிலும் பெரிய கூரிய முனைகளையுடைய இரும்புக் கம்பிகள் (Iron Spikes) பொருத்தியிருக்கிறார்கள். கோட்டை வாயில்களை எதிரிகளின் படைகளைச் சேர்ந்த யானைகள் தகர்க்க முயல்வதால், அவற்றின் தலைகளில் இந்தக் கூரிய முள் குத்த வேண்டும் என்று இப்படிப் பொருத்தினார்களாம்.

கோட்டைக்குள் இருக்கும் மசூதிகளில் மிகவும் பெரியது 'கோல் கும்பாஸ்.' இங்கே வருகிறவரில் அதைக் கண்டு மயங்காதவர் எவரும் இல்லை. 1626 முதல் 1656 வரையில் ஆட்சி புரிந்த அடில்ஷா அதைக் கட்டினார். இதன் உயரம் 198 அடி. இந்தக் கட்டிடத்தின் மேல் இருக்கும் மண்டபம் (டோம்) சுமார் 30 அடி உயரம் இருக்கிறது. மண்டபத்தின் குறுக்களவு 124 அடி. சுற்றளவு சுமார் ஒரு பர்லாங்கு இருக்கும். இதிலிருந்து மண்டபம் எவ்வளவு பெரியது என்பதைச் சுலபமாக ஊகித்துக்கொள்ளலாம். இந்தக் கோல் கும்பாஸ் மண்டபந்தான் உலகத்திலேயே மிகப் பெரியதென்று சொல்லுகிறார்கள். இதற்கு அடுத்தது ரோமாபுரியிலுள்ள 'பாந்தியன்' மண்டபம் என்கிறார்கள்.

இதில் மொத்தம் ஏழு மாடிகளும், ஒவ்வொரு மாடியிலும் ஏராளமான அறைகளும் இருக்கின்றன. மண்டபத்தின் நான்கு மூலைகளிலும், மேலே ஏறிச் செல்ல மாடிப்படிகள் இருக்கின்றன. ஆனால் ஒரு மூலையில் உள்ள மாடிப்படிகள்தான் இப்போது உபயோகத்தில் இருந்து வருகின்றன. மண்டபத்திலுள்ள ஏதாவது ஓர் அறையிலிருந்து நாம் இரைந்து பேசினால் அந்தக் குரல் ஏழு முறை பிரதிபலித்து, அதற்கு நேர் எதிரிலுள்ள அறையில் நன்ருகக் கேட்கிறது. ஓர் அறைக்கும் அதன் எதிரிலுள்ள அறைக்கும் இடையே உள்ள தூரம் 124 அடி தான். எந்த அறையில் இருந்து கொண்டு இப்படிப் பேசினாலும் எதிர் அறையில் கேட்பது இங்கே வரும் எவரையும் ஆச்சரியப்படச் செய்கிறது.

இந்தக் 'கோல் கும்பாஸ்' மண்டபத்தின் எதிரில் ஒரு பெரிய அறையில் பழைய காலத்தைச் சேர்ந்த நாணயங்கள், கத்திகள், கேடயங்கள், பிற போர்க் கருவிகள், அந்த நாளில் மக்கள் உபயோகித்த பலவித எழுதுகோல்கள் இவற்றையெல்லாம் கண்காட்சியாகச் சேகரித்து வைத்திருக்கிருர்கள்.

'கோல் கும்பாஸ்' மண்டபத்துக்கு அடுத்தபடி முக்கியமானது 'ஜும்மா' மசூதி. தட்சிண பீட பூமியிலுள்ள அநேகம் மசூதிகளில் மிகப் பெரியது இதுதான்.

'ககன் மஹல்' என்ற இடம் அடில்ஷா வம்சத்தினர் காலத்தில் தர்பார் நடத்தும் இடமாக இருந்து வந்தது. இதே இடத்தில்தான், ஔரங்கசீபிடம் சிக்கந்தர் சரணுகதியடையவே, அடில்ஷா வம்சத்துக்கு முற்றுப்புள்ளி ஏற்பட்டது.

'சாத் மன்ஸில்' என்ற கட்டிடத்தில் ஏழு மாடிகள் இருக்கின்றன. ஆனால் ஐந்து மட்டுந்தான் இப்போது உபயோகத்தில் இருந்து வருகின்றன. இதன்மீது நின்று கொண்டு பார்த்தால், பிஜாபுரின் முழுத் தோற்றமும் தெரிய வரும்.

பார்ப்பவரைப் பிரமிக்கச் செய்பவை இரண்டு பெரிய பீரங்கிகள். ஒன்று 22 அடி நீளமும், மற்ருென்று 14 அடி நீளமும் இருக்கின்றன. நீளத்தையும் உள் கூட்டையும் கூர்ந்து கவனித்தால், அந்தக் காலத்தில் இவைகளுக்கு இலக்கான எதிரிகள் என்ன பாடு பட்டிருப்பார்களோ என்ற நினைப்பு வந்து மயிர்க் கூச்சிடுகிறது.

அநேக மசூதிகளில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை இப்ராஹீம் ராஜா, மேத்தார் மஹல், ஆனந்த மஹல் முதலியவை. பிஜாபுரிலுள்ள மண் கறுப்பாகவும், தண்ணீரைத் தன்னிடத்தே இருத்தி வைத்துக்கொள்ளும் தன்மை வாய்ந்ததாகவும் இருப்பதால், இங்கேயும் சுற்றுப் புறமுள்ள கிராமங்களிலும், பருத்தி பயிர் செய்து எல்லாவற்றையும் பிஜாபுருக்குக் கொண்டு வந்து அடக்கம் செய்து பம்பாய் போன்ற மற்ற ஊர்களுக்கு அனுப்பி வருகிருர்கள். பிஜாபுர் ஜில்லாவின் வழியே நான்கு நதிகள் பாய்கின்றன. அவை கிருஷ்ணு, பீமா, கடப்பிரபா, மலப்பிரபா என்பவை.

பிஜாபுரிலிருந்து நான்கு மைல் தூரத்தில் 'தரவி' என்ருெரு கிராமம் இருக்கிறது. கன்னடத்தில் ராமாயணம் எழுதிய குமார வால்மீகி என்ற ஆசிரியர் இங்கே தான் அவதரித்ததாகச் சொல்கிருர்கள். இந்த ஊரில் அழகிய நரசிம்ம ஸ்வாமி கோயில் ஒன்று இருக்கிறது.

ஆதி காலம் முதல் இப்படிச் சரித்திரத்தில் பிரசித்தியடைந்து, அநேகரின் ஆட்சிப் பீடமாய் அமைந்து, சிக்கந்தர், ஔரங்கசீப் முதலிய பெரிய அரசர்கள் ஆட்சி செய்துவந்த இடமான இந்தப் பிஜாபுரிலுள்ள மாளிகைகளையும் கட்டிடங்களையும், நுட்பமான வேலைப்பாடமைந்த மசூதிகளையும், அங்கே காட்சியில் வைத்திருக்கும் கணக்கற்ற பழம் பொருள்களையும் ஒவ்வொருவரும் பார்க்க வேண்டியது மிக அவசியம்.

மீன் சிற்பங்களே நிறைந்திருக்கும் குளமும் கோயிலும் பாண்டியன் கட்டியவையா? அல்லது....

காரைமடைக் கோயில்கள்

பிலோ இருதயநாத்

கோவையிலிருந்து மேட்டுப்பாளையத்துக்குப் பஸ் மார்க்கமாகச் செல்லும் வழியில், காரைமடை என்ற கிராமம் இருக்கிறது. இது அவிநாசித் தாலூகாவைச் சேர்ந்தது. மேட்டுப்பாளையத்திலிருந்து ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. இந்தக் கிராமத்தில் மூன்று தேவாலயங்கள் உண்டு.

ஒன்று ஸ்ரீ ரங்கநாதர் கோயில். இதன் சுற்றுப்புறங்கள் இன்றுகூடக் காடுகளாகவும் மலைகளாகவும் இருக்கின்றன. இதைவிடப் பயங்கரமான மரங்களும் புதர்களுமாக இருந்த முன் காலத்தில், ஆடு மாடு மேய்த்த ஒருவன் தன் பசு ஒவ்வொரு நாள் மாலையிலும் மடியில் பால் இல்லாமல் வீடு திரும்புவதைக் கண்டு, ‘பாலைத் திருடும் பயல் எவனோ?’ என்று கோபங்கொண்டு, ஒரு நாள் மாட்டைத் தொடர்ந்து சென்றானாம். பெரிய காடு ஒன்றில் மாடு செல்வதைக் கண்டான். மாடு ஒரு புதரை அடைந்ததும், அங்கே நின்று, தானாகவே புதரில் பால் சொரியவே, அந்தப் புதரை அழிக்கத் தொடங்கினான். புதரின் மத்தியில் ஒரு கல் உருவத்தைக் கண்டான். கோபத்துடன் அதைக் கத்தியால் வெட்டினான். வெட்டுண்ட இடத்தில் ரத்தவெள்ளம் ஆறாகப் பெருகியது. இதைக் கண்ட ஆயன், மூர்ச்சையாகிக் கீழே விழுந்தான். மாடு மேய்த்த மற்றச் சிறுவர்கள் அவனைத் தூக்கிச் சென்றார்கள். அன்றிரவு அந்த ஆயனின் கனவில் கடவுள் தோன்றி, ‘‘நானே கல்லுருவாய் வந்தவன்’’ என்று கூறினாராம். பிறகு பட்டர் வம்சத்தாரின் தலைமையில் ஊரார் கூடிச் சிறு



ரங்கநாதர் கோயில்

கோவில் ஒன்று கட்டி, வழிபடலானார்கள். கோயில் சிலையின் ஒரு பாகம் வெட்டுண்டிருப்பதைக் காணலாம். இந்தத் தேவாலயத்தின் தேரில் அரிய செதுக்கு வேலைப்பாடுகளைக் காணலாம். இது மிகவும் அழகாகவும் ஆறு சக்கரத்தோடும் இருக்கிறது. பிப்ரவரி மாதத்தில் தேர்த் திருவிழா நடைபெறும். எட்டாம் நாள் தேர் பவனி வருவதைக் காணலாம்.

அடுத்தது நஞ்சுண்டேசுவரர் கோயில். ஸ்ரீ ரங்கநாதர் கோயிலுக்குத் தெற்கே, கிழக்கு நோக்கி இந்த ஆலயம் இருக்கிறது. உலகநாயகி அம்மை இதில் குடிகொண்டிருக்கிறாள். கோயிலைச் சுற்றிலும் துதிக்கை கொண்ட ஆறு யானைத்

காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்: 18-1-’58), சென்னை-2.

தலைகளின் அழகிய சிற்பங்கள் அமைந்திருக்கின்றன. ஏற்கனவே எட்டு யானைச் சிற்பங்கள் இருந்தன என்றும், இரண்டை அந்நியர்கள் படையெடுப்பில் கொண்டு சென்றுர்கள் என்றும், மீதியை மக்கள் இரவுக்கிரவாக இந்த ஆலயத்தில் வைத்துக் கட்டினுர்கள் என்றும் சொல்லுகிறுர்கள். கோயிலைச் சுற்றிலும் சுவரெல்லாம் அழகிய சிலைகள் இருக்கின்றன. கோயிலுக்குள் இருக்கும் ஆதாரபீடம் ஒரே கல்லில் செய்தது. அதன் கீழே ஒரு பெரிய சுரங்கம் இருக்கிறது. இது சுமார் இருபது அடி தூரம் போகிறதாம்.



யானைத் தலைக் கோயில் என்ற நஞ்சுண்டேசுவரர் கோயில்

மூன்றுவது ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி கோயில். ஸ்ரீ ரங்கநாதர் கோயிலுக்கு மேற்கில் இது இருக்கிறது. கோயில் வெகு சிறியதாக இருந்தாலும், உள்ளே இருக்கும் சுவரிலும் வெளிச் சுற்றுப்புறத்துச் சுவரிலும் பல மச்ச வடிவங்கள் இருக்கின்றன. வெளிச் சுவரில் உள்ள மச்சங்களைக் கூர்ந்து கவனித்தால், நீரில் நீந்துவதுபோல் பிரமை ஏற்படும். சிற்பியின் கைத் திறமையை எப்படித்தான் புகழ்வது!



ரங்கநாதர் கோயில் சுவரில் உள்ள ஒரு சிற்பம்

இந்த மூன்று ஆலயங்களுமே உபயோகிப்பதற்காக, தோலம் பாளையம் ரஸ்தாவில் பல படிகளுடன் பாறைகளால் கட்டிய ஒரு தெப்பக்குளம் இருக்கிறது. குளத்துப் படிகளில் சுமார் நூறு மச்ச உருவங்களைச் செதுக்கியிருக்கிறுர்கள். இந்த மச்ச உருவங்களின் அளவுகளையும் சிற்பத்தின் பாணியையும் கூர்ந்து கவனித்தால், ஸ்ரீ ரங்கநாதர் கோயிலில் இருக்கும் மச்சங்களும், ஸ்ரீ நஞ்சுண்டேசுவரர் கோயிலில் இருக்கும் மச்சங்களும், ஸ்ரீ வேணுகோபாலர் கோயிலில் இருக்கும் மச்சங்களும், ஒரே சிற்பியால் ஒரே காலத்தில் ஒரே அளவில் ஒரே உளிமுனையின் திறமையால் செதுக்கியவை என்று தெரியும். மற்ற உருவங்களைவிட, மச்சங்களை மட்டும் சுமார் இருநூற்றுக்கு மேல் ஓரடி அல்லது முக்காலடி நீளத்தில் செய்த காரணத்தைக் கவனிக்கும்போது, மச்சக் கொடியுடைய பாண்டிய மன்னனை நாம் நினைவு கூரவேண்டியிருக்கிறது.

மேலும், கண்ணகிக்குச் சிலை செய்ய இமயத்துக்குக் கல்லெடுக்

கத் தென்னுட்டு மன்னன் செங்குட்டுவன் போனபோது, நீலகிரியில் தங்கிச் சென்ருன் என்று சரித்திரம் கூறுகிறது. அப்படிப் போகும் வழியில் இவற்றைக் கட்டியிருக்கலாம். பாண்டியனும் இமயத்தில் மச்சக் கொடியை நாட்டியதாகச் சரித்திரம் கூறுவதால், சேர, சோழ, பாண்டியர் காலத்தில் இந்த மூன்று கோயில்களையும் கட்டியிருக்கலாம்.

இவ்வளவு புகழ்பெற்ற இந்த மூன்று கோயில்களையும் பற்றி இனி யாவது சற்று அக்கறை எடுத்து ஆராய்ச்சி செய்தால், இந்தக் கோயில்களின் சுவரில் இருக்கும் சாசனங்களிலிருந்து பல விஷயங் கள் நமக்கு விளங்கக்கூடும்.

பழைய கார் மகிமை

ஒன்பது கை மாறிய மிகப் பழைய கார் ஒன்றில் சவாரி செய்துகொண் டிருந்தார் ஒரு பிரயாணி. கார் சட்டென்று நின்றது. ''என்ன விஷயம்?'' என்று பிரயாணி கேட்டார். ''ஒன்றும் இல்லை; சில ஆடுகள் வந்து குறுக்கிட்டுவிட்டன'' என்று டிரைவர் விளக்கினர்.

சிறிது தூரம் சென்றதும் கார் மறுபடியும் சட்டென்று நின்றது. டிரைவர் தாமாகவே, ''அட சனியன்களா! மறுபடியும் அதே ஆடுகள் வந்து குறுக்கிட்டுவிட்டனவே!'' என்று சலித்துக்கொண்டார்.

—'ஃபெமினு', தென் ஆப்பிரிக்கா.

எது கொசு?

'இதைவிட ஈ எவ்வளவோ மேல்' என்று நம்மை நினைக்கச் செய்யும் கடவுளின் படைப்பான சிறு ஜந்து எதுவோ அதுதான் கொசு. —'அட்லாஸ் நியூஸ்'

வீணுகும் சாயம்

பெண்கள் ஒரு வருஷ காலத்தில் உபயோகிக்கும் 'லிப் - ஸ்டிக்'கைக் கொண்டு நாற்பதாயிரம் களஞ்சியங்களுக்குப் பெயிண்ட் அடிக்கலாம். களஞ்சியத்துக்கு அதை அடித்தால், அழகாகவும் இருக்கும். —'டேல் - லைட்ஸ்'

ஞான ஒளி

ஞான ஒளியை எங்கும் பரப்புங்கள். எல்லோரும் இந்த ஞானச் சுடரைப் பெற்று விளங்கட்டும். எல்லோரும் கடவுளை அடையும்வரை, இந்தப் பணி முடிவடையாது. ஏழை மக்களுக்கு இந்த ஒளியை அளியுங்கள்; அதைவிட அதிகமாகப் பணக்காரர்களுக்குக் கொடுங்கள். ஏனெனில், அவர்களது அகங்காரத்தின் காரணமாக அவர்களுக்கு இது ஏழைகளைவிட அதிகத் தேவையாக இருக்கிறது. கல்லாதவர்களுக்கு இந்த ஒளியை அளியுங்கள்; அவர்களைவிட அதிகமாகக் கற்றவர்களுக்குக் கொடுங்கள். ஏனெனில், அவர்களுக்குத் தற்காலப் படிப்பினுல் உண்டாகியிருக்கும் அகந்தை மிக அதிகமானது.

இப்படி ஞானவொளியை எல்லோரிடமும் பரப்புங்கள். அதற்குமேல் பலனை ஆண்டவனுக்கு அர்ப்பணமாக விட்டுவிடுங்கள். ஏனெனில், பகவான் கீதையில் சொல்லுகிறபடி 'உன் கடன் பணி செய்து கிடப்பதே; அதன் பலனைப் பற்றிக் கவலைப்படாதே; வேலைகளின் பலனுல் கட்டுப்படாதே; வேலை செய்யாமலும் இராதே.'

—சுவாமி விவேகானந்தர்

செலவை மதிப்பிடும் கணக்கு

ச. த. பட்கம்பர், பி. காம்., ஏ. ஸி., ஏ.

இன்று பெரிய தொழிற்சாலைகளில் 'காஸ்ட் அக்கவுன்டிங்' இன்றியமையாத தேவை. அதைப்பற்றிய விவரங்களைத் தெளிவாகக் கூறும் கட்டுரை இது.

ஏராளமான சரக்குகளைத் தயார் செய்யும் பெரிய தொழிற்சாலைக்கு, செலவை மதிப்பிடும் திட்டமான கணக்கு (காஸ்ட் அக்கவுன்டிங்) மிகவும் தேவை. சாதாரணமாகச் சரக்குகளை வாங்கி விற்கும் வியாபாரிகளுக்கு இது அவ்வளவாகப் பயன்படுவதில்லை. தொழிற்சாலையில் ஒரு பொருளை உற்பத்தி செய்ய, கச்சாப் பொருள், ஊதியம், நேர்முகமும் மறைமுகமுமான வேறு செலவுகள் ஆகியவை எல்லாம் சேர்ந்து எவ்வளவு செலவாயிற்று, எந்த முறையில் செலவாயிற்று என்பதைத் திட்டமாக மதிப்பிடுகிறது இந்தக் கணக்கு. சாமானியமான வரவு செலவுக் கணக்கிலிருந்து, இன்ன பொருளை உற்பத்தி செய்ய இவ்வளவு ரூபாய் செலவாயிற்று என்ற தகவல் கிடைக்காது. ஆனுல் சாமானியக் கணக்குடன் காஸ்ட் அக்கவுன்டும் வைத்துக்கொண்டால், பொருளுற்பத்திக்குத் தேவையாகக் கச்சாச் சரக்கு எவ்வளவு பிடித்தது, மற்றச் சாமான்களின் விலை என்ன ஆயிற்று, ஊதியம் எவ்வளவு கொடுத்தோம், மின்சாரம் எண்ணெய் முதலிய எரி பொருள் செலவு எவ்வளவு, மற்றும் பல செலவுகள் எவ்வளவு ஆயின என்பவையெல்லாம் பளிச்சென்று விவரமாகத் தெரியும்.

இதிலிருந்து, எந்த இனத்தில் செலவு குறைந்தது, எதில் அதிகமாயிற்று, எதில் சிக்கனம் பிடிக்கலாம், எந்த முறையில் பின்னும் லாபகரமாக உற்பத்தி செய்யலாம், எந்த மெஷின்கள் பின்னும் லாபத்தைத் தருபவை முதலியவற்றைக் கணக்காளர் ஆராய்ந்து, பொருளை வாங்குவது, உற்பத்தி செய்வது, விற்பது, தொழிலாளர் சம்பந்தமான கொள்கை ஆகியவற்றில் எப்படி நடந்துகொள்வது நலம் என்றெல்லாம் மானேஜ்மென்டாருக்கு ஆலோசனை கூற முடியும். ஆலை அதிகாரிகள் அவ்வப்பொழுது வெளியிடும் அறிக்கைகளையும், வருஷவாரிக் கணக்குகளையும் இந்தக் கணக்காளர் பயன்படுத்திக் கொள்வார். செலவை மதிப்பிடும் கணக்கு (காஸ்ட் அக்கவுன்டிங்) என்ருல், வெறும் செலவுகளை மட்டுமே கூட்டிக் கழித்துச் சொல்வது அல்ல; பொருளின் உற்பத்திச் செலவைப்பற்றிய சரித்திரத்தையே எழுதுவது போன்ற வேலை அது. ஆதலால் முன்னேற்றத்தை விரும்பும் ஆலைகளில் இது இன்றியமையாத தேவை. இந்தக் கணக்கிலிருந்து வந்த முடிவுகளுக்கேற்ப, மானேஜ்மென்டார் உற்

காப்பிரைட்: உத்யம் (மராட்டி: ஜுலை '58), நாக்புர்-1.

பத்திச் செலவைக் குறைத்திருக்கிருர்களா, உற்பத்தியைப் பெருக்கியிருக்கிருர்களா என்று கவனிப்பதும் கணக்காளரின் கடமை.

செலவை மதிப்பிடும் இந்தக் கணக்கிலிருந்து, ஓர் ஆலேயில் ஒவ்வொரு பிரிவிலும், ஒவ்வொரு மெஷினே ஓட்டவும், குறிப்பிட்ட ஒரு காலத்தில் எவ்வளவு செலவாகியிருக்கிறது என்பதைக் கண்டு பிடிக்க முடியும். ஆதலால் ஒவ்வொரு பொருளே உற்பத்தி செய்யவும் இன்ன இன்ன டிபார்ட்மென்டில் இன்ன செலவு பிடித்தது; இன்ன காலம் பிடித்தது, சரக்கு வாங்குதல், ஊதியம், எரி செலவு முதலியவற்றில் என்ன என்ன சிக்கனம் செய்யலாம் என்ற தகவல்கள் கிடைக்கும். இதனுல் ஒவ்வொரு விஷயத்தின் மேற்பார்வையிலும், ஒவ்வொரு பொருளேயும் பயன்படுத்துவதிலும் திட்டமான ஒழுங்கும் சிக்கனமும் இருக்கும். உற்பத்திக்குத் தேவையான பல பொருள்களேப்பற்றியும், அவற்றை வாங்குவதுபற்றியும், தயாரான சரக்குகளேப்பற்றியும் ஸ்டோர்ஸ் டிபார்ட்மென்டில் சரியாகக் கணக்கு வைத்திருக்கிருர்களா, பொருள்களே வாங்கும் போதும் கொடுக்கும்போதும் அதிகாரிகளிடம் அநுமதி பெற்றுச் செய்கிருர்களா என்பவற்றையும் இதனுல் கண்டிப்பாகக் கவனிக்க முடியும்; தொழிலாளிகளேப்பற்றிய அநுபவமும் வளரும். அவ்வப்பொழுது அவர்களுக்குக் கொடுக்கும் ஊதிய விவரத்தைக் கணக்கிட்டு வைப்பார்கள். மெஷின்கள், கட்டிடங்கள் ஆகியவற்றின் தேய்மான மதிப்பையும் கணக்கில் எடுத்துக்கொள்வார்கள்.

உற்பத்தி செய்த ஒரு பொருளுக்கு எவ்வளவு சாமான்கள் பிடித்தன, எவ்வளவு ஊதியம் கொடுத்தோம் என்று கண்டுபிடிப்பது சுலபம். ஆனுல், வீட்டு வாடகை, அதிகாரிகளின் செலவு, ஆபீஸ் நடத்தும் செலவு, தேய்மான மதிப்பு முதலியவற்றைத் தோராயமாகத்தான் சொல்வார்கள். இவற்றை வேறுபடுத்திக் கணக்கிட வேண்டும் என்று பெரும்பாலும் நினைப்பதில்லே. ஆனுல் காஸ்ட் அக்கவுன்டின்படி இதில் ஒவ்வொரு விவரத்துக்கும் முக்கியத்துவம் உண்டு. அதனுல், எந்தப் பொருளின் உற்பத்திச் செலவையும் திருத்தமாகச் சொல்ல முடியும்.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ, ஆறு மாதங்களுக்கு ஒரு முறையோ, வருஷத்துக்கு ஒரு முறையோ ப்ட்ஜெட் தயாரிப்பதற்கும் இந்தக் கணக்கு முறை பயன்படுகிறது. இன்னும் கேட்டால், பட்ஜெட் தயாரிக்கும் முழுப் பொறுப்பும் இந்தக் கணக்காளரைச் சேர்ந்ததுதான். பொருளுற்பத்தி எவ்வளவு செய்ய வேண்டும், எப்படி எவ்வளவு நேரத்துக்குள், எவ்வளவு செலவுக்குள் செய்ய வேண்டும், பொருள்களே எப்படி, எங்கே வாங்குவது, விற்பது ஆகியவை பற்றிய உண்மை நிலேயை இந்தக் கணக்காளர் கூறுவதனுல், பட்ஜெட் தவறில்லாதபடி அமையும்.

செலவை மதிப்பிடும் இந்தக் கணக்கு முறையில் வெவ்வேறு வகைகள் உண்டு. இவற்றில் முக்கியமானவை இரண்டு: ஒன்று, ஜாப் காஸ்டிங்; மற்றென்று, யூனிட் காஸ்டிங். இஞ்சினீரிங் தொழிற்சாலேகள், கப்பல் கட்டும் தொழிற்சாலேகள், கட்டிடங்கள் கட்டும் காண்டிராக்டு வேலேகள், அச்சுக்கூடங்கள் முதலியவற்றுக்கு ஜாப் காஸ்டிங் பயன்படுகிறது. ஒரே வகையான பொருளே உற்பத்தி செய்யும் இடத்தில் யூனிட் காஸ்டிங் பயன்படுகிறது. நெசவாலேகள், சர்க்கரை ஆலேகள், மின்சார மோட்டார்கள் தயாரிக்கும் தொழிற்சாலேகள், செங்கற்சூளேகள், காகிதத் தொழிற்சாலேகள் ஆகியவற்றுக்கு இது பயன்படும். கச்சாப் பொருள்கள் விற்பனேக்கு உரிய பொருளாகச் செய்யப்படும் வரையில் நடுவே பல நிலேகள் - பிராஸஸ் - உண்டு. இதைப்பற்றிய கணக்கு முறைக்கு, 'பிராஸஸ் காஸ்ட் அக்கவுன்ட்' என்று பெயர். எந்த ஆலேக்கு எந்த முறையைக் கடைப்பிடிப்பது

என்பது, உற்பத்தியையும் உற்பத்தி முறையையும் பொறுத்தது.

காஸ்ட் அக்கவுன்ட் இவ்வளவு பயனுடையதாக இருந்தபோதிலும் இந்தியாவில் தொழில் முதலாளிகள் இதைப் பெரும்பாலும் புறக்கணிக்கிறார்கள். இதற்குச் சில காரணங்கள் உண்டு. முதலாவது, எவ்வளவுதான் ரகசியமாக வைத்துக்கொண்டாலும் இந்தக் கணக்கு முறையினால் பொருளின் உற்பத்திச் செலவு தெரிந்துவிடுகிறது; லாபத்தை மறைக்க முடிவதில்லை. அதனால் சர்க்கார் வரிகளை ஏமாற்ற இயலாது. தொழிலாளிகளுக்கு லாபத் தொகை தெரிந்துவிடுவதனால் அவர்கள் ஊதிய உயர்வு கேட்கிறார்கள்; அதிருப்தியும் வளருகிறது. இரண்டாவது, 'எப்படியும் தோராயமாகச் செலவின் மதிப்புத் தெரிந்துவிடுகிறது. அதைத் திருத்தமாகக் கணக்கிட்டு என்ன ஆக வேண்டும்?' என்ற மனப்பான்மை. மூன்றாவது, தனியாக இந்தக் கணக்காளரை வைத்துக்கொள்வதனால், அதிக ஆட்களை வைத்துக்கொண்டு நிறையச் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனால் நேர்முகமான லாபம் ஏதும் இல்லை.

இதனால் ஏற்படும் பயன்கள்: (1) அவ்வப்பொழுது கிடைக்கும் தகவல்களிலிருந்து, பொருளுற்பத்திச் செலவைத் திட்டமாக அறியலாம். (2) செலவை அவ்வப்பொழுது ஒப்பிட்டுப் பார்த்துத் தேவையான சீர்திருத்தங்கள் செய்யலாம். (3) கச்சாப் பொருள், ஊதியம், மெஷின்கள் அல்லது பிற செலவுகளில் என்ன சிக்கனம் செய்ய முடியும் என்று கவனிக்கலாம். (4) உற்பத்தி முறையில் சரியான வழி காணலாம். (5) மூலதனம் வீணாகாதபடி தேவையான சமயத்தில் கச்சாப் பொருளை வாங்கிப் பயன்படுத்தலாம். (6) மாதந்தோறும் அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை லாப நஷ்டக் கணக்குத் தெரியும். (7) தொழிலாளர்களிடையே ஒழுங்கும் சிக்கனப் பழக்கமும் ஏற்படும்; செயல் திறமை வளரும்.

பெருத்த அளவில் தொழில் நடத்தும் வியாபார ஸ்தாபனங்களுக்கு இந்தக் கணக்கு முறை மிகவும் பயன்படுகிறது. சித்தரஞ்சன் எஞ்சின் தொழிற்சாலை, டாடா இரும்பு எஃகுத் தொழிற்சாலை முதலியவை போன்ற சில ஸ்தாபனங்கள், செலவை மதிப்பிடும் கணக்காளர்களை வைத்துக்கொண்டிருக்கின்றன. வியாபாரத்தை ஒழுங்காக நடத்தி, வெளிநாட்டுச் சரக்குகளின் தரத்தோடும் விலையோடும் போட்டியிட்டு லாபங் காண, இந்தக் கணக்கு முறை உபயோகமாக இருக்கிறது. நாளடைவில் நம் நாட்டில் இந்தக் கணக்காளர்களுக்குத் தேவை அதிகப்படும். நாட்டின் முன்னேற்றத்துக்கு இந்தக் கணக்கு முறை இன்றியமையாதது.

ஒன்றே தெய்வம்

அடையக் கருதும் பொருள் குறித்து யாதொரு பேதமும் இல்லை. ஒன்றே தெய்வம்; வேதமும் ஒன்றே. யோகம், பக்தி, புண்ணியம் இவை எல்லாம் எல்லா மதத்துக்கும் பொதுவே. அருளும் அன்பும் எல்லாருக்கும் ஒன்றே. மனித தேகமெல்லாம் ஒரே அச்சில் வார்த்தவை. சகல மனிதர்களின் நரம்புக் குழாய்களிலும் ஓடிக்கொண்டிருப்பது ஒரே சிவப்பு நிறமான ரத்தமே. மதங்களும், மார்க்கங்களும் வேறு வேறாக இருந்தாலும், அவற்றால் அடையும் பொருள் மாத்திரம் ஒன்றே. ஆகவே, கப்பலிலாயினும் சரி, ரெயிலிலாயினும் சரி, ஏறிப் போக வேண்டிய இடத்தைப் போய் அடைய எல்லாரும் முயலவேண்டும்.

—ஒரு வங்கக் கவி



காகிதத்தை நெடுக்காகக் கத்தரித்தல்

காகிதப் பூ

ஸ்ரீமதி எஸ். ராமகிருஷ்ண

ஓய்வு நேரங்களில் குறைந்த செலவில் வீட்டையும் அறைகளையும் மேஜைகளையும் பூத்தொட்டிகளையும் அலங்கரிக்க வித விதமான வர்ணங்களிலும் மோஸ்தர்களிலும் அளவுகளிலும் அழகான காகிதப் பூக்களை வீட்டிலேயே செய்யலாம். இவை கொடிகளாகச் சுவரையும், கொத்துக்களாகப் பூத்தொட்டிகளையும் அலங்கரிக்கும். இவைகளைச் செய்ய முக்கியமான உபகரணங்கள்: கத்தரிக்கோல், பலவர்ண ஜவ்வுத் தாள்கள் (டிஷ்யூ பேப்பர்), வர்ண நூல்கள், 6-5 கஜ நீளம் உள்ள மெல்லிய கம்பிகள், மற்றும் துடைப்பத்திலிருந்து எடுத்து வழ வழப்பாகச் சீவிய சில மெல்லிய குச்சிகள்.

ஜவ்வுத் தாள்களில் பல வகைகள் உண்டு. இவைகளில் நம் வேலைக்கு முக்கியமாக உபயோகப்படுத்த வேண்டியது 'கிரேப்' தான். இந்தக் காகிதம் கெட்டியாக நிற்பதோடு, இலை, பூ இவைகளின் மிருதுத் தன்மையையும் சுருக்கங்களையும் எடுத்



சேர்த்துப் பிடித்தல்



நூலைக் காகிதத்தில் ஏற்றல்



காகிதத்தைக் குறுக்காகக் கத்தரித்தல்

காப்பிரைட்: சுதேசமித்திரன்

வீட்டிலே பெண்கள் கைக்கொள்ளக்கூடிய அலங்கார வேலைகளிலே இதுவும் ஒன்று.

துக் காட்டும். இந்த மாதிரி செய்த பூக்கள், தத்ரூபமாகச் செடியில் உள்ளவை போலவே காட்சியளிக்கும்.

இந்தப் பூக்களைத் தயாரிக்கும் முறையை இனி ஆராய்வோம். ஒரு பெரிய 'கிரேப்' காகிதத்தை எடுத்துக்கொண்டு அதை இரண்டாக மடித்துக்கொள்ள வேண்டும். பிறகு, குறுக்கே திருப்பிக்கொண்டு, இரண்டிரண்டாக மடித்துக்கொண்டே சென்று ஓர் அங்குல அகலம் வரும்போது நிறுத்திக் கொள்ள வேண்டும். பிறகு கத்தரிக்கோலால் வேண்டிய அளவு நீளத்தில் ஒரு சாவி வடிவத்தில் கத்தரிக்கவேண்டும்; அதாவது, மேலே உருண்டையாகவும், கீழே நீண்ட சதுர வடிவமாகவும் படத்தில் காட்டியபடி கத்தரிக்க வேண்டும். ஒரு பூவில் ஓர் இதழ் மற்றோர் இதழுக்கு மேலோ கீழோ இருக்க வேண்டியிருப்பதால், இந்த மாதிரி துண்டுகளை ஓர் அங்குலத்திலிருந்து இரண்டங்குலம் வரையில் பலவித அளவுகளில் கத்தரிக்க வேண்டும். ஒரு முழு 'கிரேப்' காகிதத்தில் இந்த மாதிரி சுமார் நூறு துண்டுகள்



'பாட்டர்ன்' குட்டையைக் கையால் இழுத்துத் தேய்த்தல்



காகிதப் பூக்கள்



'பாட்டர்ன்' மீது கை



இலை சேர்ந்த காகிதப் பூங்கொத்து

(தமிழ்: 13-4-'58), சென்னை-2.

வெட்டலாம். இப்படிப் பலவித வண்ணத்தாள்களிலிருந்து பல விதத் துண்டுகளைக் கத்தரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாகப் பூத்தொட்டியை அலங்கரிக்கும் பூங்கொத்துக்கள் செய்யும் முறையைப் பார்க்கலாம். இந்த மாதிரி பூங்கொத்துக்கள் கொண்ட தொட்டி, அதாவது 'வேஸ்' என்ற சிறு பூக்கிண்ணம் வைத்து நடுக்கூடத்தின் மேஜையை அலங்கரிக்கலாம்.

கத்தரித்த ஒரு துண்டை எடுத்து, ஏற்கனவே சீவி வைத்த குச்சியின்மேல் கெட்டியாக ஒரு முறை சுற்றி, மறுபடியும் பிரித்து விடவேண்டும். இப்படிச் செய்வதால் இதழில் உள்ள வளைவு காகிதத்தில் தென்படும். இந்த மாதிரியே கத்தரித்த துண்டுகள் எல்லாவற்றையும் பதப்படுத்திக்கொள்ள வேண்டும்.

பிறகு பூத்தொட்டியில் வைக்க நடுத் தண்டும் முக்கியமான பெரிய பூவும் தயாராக வேண்டும். தண்டு செய்வதற்குச் சுமார் 10 அங்குல நீளமுள்ள வழவழப்பான மூங்கில் குச்சியைத் தண்டு கனத்துக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். இதன்மேல் தண்டுபோல் தோன்றக்கூடிய பச்சைத்தாளை ஒட்டவேண்டும். நடுப் புஷ்பத்தின் அளவுக்கும் அழகுக்கும் தக்கபடி முன்பு கத்தரித்து வளைத்துத் தயாராக்கிய காகித இதழ்களை எடுத்துக்கொள்ள வேண்டும். சிறிய துண்டிலிருந்து ஆரம்பித்து, மேல் மேலாக அளவுக்குத் தகுந்தபடி இதழ்களை வைத்து, தகுந்த வர்ண நூல் கொண்டு கெட்டியாகக் கட்ட வேண்டும். காகிதங்களைச் சிறு துண்டுகளாக வெட்டிக் குச்சியின் முனையில் பூவுக்கு நடுவில் வரும்படி கட்டவேண்டும். இவை பூவின் கேசரம்(பிஸ்டில்)போல இருக்கும். இப்படியே நடுப் பூவை உருவாக்கலாம்.

புஷ்பம் செய்து முடித்தவுடன், ஒரு சிறிய பித்தான் அளவுக்கு மெல்லிய அட்டை ஒன்றை வெட்டி, பூவின் அடியில் ஒட்டிவிட வேண்டும். இதழ்கள் நலுங்காமலும் கிழியாமலும் வளையாமலும் இந்த அட்டை பார்த்துக்கொள்ளும். இதன் மேலும் ஒரு சிறிய பச்சைக் காகிதத்தை ஒட்டிவிடவேண்டும். இப்போது நடுப்பூவும் தண்டும் தயாராகிவிட்டன.

அப்புறம் இலைகளும் சுற்றுப்புறச் சிறு பூக்களும் உருவாக வேண்டும். சிறு பூக்கள் செய்வதும் முன் மாதிரியே. ஆனால் குச்சிக்குப் பதிலாக மெல்லிய கம்பிகளை உபயோகிக்க வேண்டும். ஏனென்றால், அவைகளை எந்த விதமாக வேண்டுமானாலும் வளைத்துக்கொள்ளலாம். முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், ஒவ்வொரு பூவின் இதழ்களும் ஒரே வர்ணத்தில் இருக்கவேண்டும். அதற்குத் தக்கபடியே கேசரத்தையும் தயார் செய்துகொள்ள வேண்டும். பூங்காவில் உள்ள பூக்களை அடிக்கடி கவனிப்பது நலம்.

புஷ்பங்கள் தயாரானதும், இலைகளைத் தயார் செய்ய வேண்டும். முன்போலவே 'கிரேப்' காகிதத்தை இலைப் பச்சை நிறத்தில் எடுத்துக் கொண்டு மடித்துக்கொள்ள வேண்டும். பிறகு, பலவிதமான இலைகள் போல் நீளமாகவும் குட்டையாகவும் கட்டையாகவும் புஷ்பத்துக்குத் தக்கபடி கத்தரித்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக இலைகளின் மிருதுத்தன்மையும் நரம்புகளும் காகிதத்தில் பிரதிபலிக்க வேண்டும். இதற்குப் பின்னல் சவுக்கம் (ஹனீ கோம்ப் டவல்) ஒன்று எடுத்துக்கொள்ள வேண்டும். சவுக்கத்தைக் கீழே வைத்து அதன்மீது இரண்டாக மடித்த காகிதத்தை வைத்து மூடிப் படத்தில்காட்டியபடி இடது உள்ளங்கையால் அழுத்திக் கொண்டு சவுக்கத்தைத் முறுக்கிச் சுற்றி இழுக்கவேண்டும். இப்படிச் செய்வதால், சவுக்கத்தின் கரடுமுரடான நூல் இழைகள் காகிதத்தில் பதிந்துவிடும். இப்போது இதை எடுத்துப் பார்த்தால், இலை மாதிரியே இருக்கும்.

இந்த மாதிரியே பல இலைகள் செய்து பூவுடன் பொருத்திக் கொள்ளலாம். பூத்தொட்டியில் குரோட்டன்ஸ் இலைகள் மாதிரி இலைகளைச் சேர்க்க வேண்டுமானுல் நீளமாகப் பலவித வர்ணங்களில் இலை வடிவத்தில் கத்தரித்துக் கொண்டு, இரண்டு துண்டுகளை எடுத்து, நடுவில் நரம்புக்குப் பதிலாகக் கம்பியில் ஒட்டிவிட வேண்டும். இந்த மாதிரி இலைகள் வரும்போது சவுக்கத்தில் இரண்டு காகிதங்களை வைத்து முறுக்க வேண்டும். பிறகு, வர்ண மை (கலர் இங்கி) கொண்டு புள்ளிகளாகவும் கோடுகளாகவும் தெளித்து விட வேண்டும். இவை குரோட்டன்ஸ் இலைகள்போல் காட்சியளிக்கும். இது போலவே அவரவர் யோசனைக்கும் வசதிக்கும் தக்கபடி பலவிதமான தண்டு, பூ, இலை, கேசரம் இவற்றைத் தயார் செய்யலாம்.

கடைசியாகப் பூத்தொட்டி அலங்காரத்தைக் கவனிப்போம். முன்பு செய்த தண்டையும் பூவையும் நடுமத்தியில் வைத்துக் கொண்டு, பிறகு கம்பியில் செய்த பூக்களையும் இலைகளையும் தண்டில் சுற்றி ஓர் அழகான மலர்க்கொத்துச் செய்ய வேண்டும். கொத்தை அப்படியே வாய் குறுகலாக உள்ள பூத்தொட்டிகளில் செருகிவிட வேண்டும். அழகான வர்ணப் பூத்தொட்டிகள் பீங்கானிலும் மரத்திலும், உலோகங்களிலும் கண்ணுடிகளிலும் எங்கும் கிடைக்கும்.

இந்த மாதிரியே புஷ்பக்கொடிகளை, காகிதத்தில் நீளமாகக் கம்பியின் உதவி கொண்டு செய்து, வீடு முழுவதும் பரவவிட்டு, சுவரை நவராத்திரி காலத்தில் விசேஷமாக அலங்கரிக்கலாம். பல பெண்கள் சேர்ந்து செய்தால், பூக்கள் வெகு சுலபமாக உருவாகும்.

பாஷை தெரியாத காரணம்

அயல் நாட்டுக் கப்பலில் வந்த சிப்பந்திகள் இரண்டு பேர், நகரத்துக் கடைத்தெருவுக்குப் போனுர்கள். சீட்டுக் கட்டு வாங்க அவர்களுக்கு ஆவல். ஆனுல், உள்ளூர்ப் பாஷை தெரியவில்லை. ஒரு சிப்பந்தி ஒரு யுக்தி செய்தான்.

விற்பனைக் கவுண்டருக்குப் போய் ஒரே ஒரு சீட்டை வைத்தான்; அதன் பக்கத்திலே ஒரு வெள்ளிப் பணத்தை வைத்தான்.

கவுண்டரில் நின்றவனுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பிறகு அவன் முகம் மலர்ந்தது. ஒரு சீட்டுக் கட்டிலிருந்து கைக்கு வந்த சீட்டை உருவினுன். அதை நிமிர்த்திப் போட்டான். ''சரி; உன்னுடையது ராஜா. என்னுடையது அதை விடப் பெரிய ஏஸ்'' என்று சொல்லி, அயல் நாட்டானின் வெள்ளிப் பணத்தை எடுத்து, ஜேபியில் போட்டுக்கொண்டு போய்விட்டான்.

—'ரெய்னுல்ட்ஸ் ந்யூஸ்'

வெற்றிகரமான தம்பதிகள்

வெற்றிகரமான ஆண் யார்? தன் மனைவி செலவழிக்கக் கூடியதைவிட அதிகமான பணத்தை எவன் சம்பாதிப்பானே அவன்தான்.

வெற்றிகரமான பெண் யார்? அப்படிப்பட்ட ஆளைக் கண்டு பிடித்து மணந்துகொள்கிறவள் எவளோ அவளே.

—'இல்லினுய்ஸ் ஸெண்ட்ரல் மகஸீன்'

பாசுபதாஸ்திரம் பெற்றது

★



வியாச முனிவர் கூறியதை ஏற்றுக்கொண்டு பாண்டவர் காம்யக வனத்தில் வசிக்கலானார்கள். ஒரு நாள் தர்மர் அர்ஜுனனைத் தனிமையில் அழைத்தார். அன்புடன் கைகளால் அவனைத் தடவினார். புன்னகை செய்து இனிய முறையில் அவனிடம் கூறினார்:

''வில்வித்தை இப்போது பீஷ்மர், துரோணர், கர்ணன், அசுவத்தாமன், கிருபர் இவர்களிடந்தான் இருக்கிறது. இவர்களுக்கு எல்லா அஸ்திர வித்தையும் தெரியும். துரியோதனன் இவர்களைக் கௌரவிக்கிறான். சமயம் வந்தால் அவனுக்குத்தான் இவர்கள் உதவி செய்வார்கள். படைவீரர் அனைவரையும் அவன் அன்புடன் நடத்துகிறான். இந்த நன்றியைப் போர்க்காலத்தில் அவர்கள் மறக்கமாட்டார்கள். இப்பொழுது உலகம் முழுவதும் துரியோதனனுக்கு வசப்பட் டிருக்கிறது. நாங்களோ உன்னைத்தான் நம்பியிருக்கிறோம். நம் கட்சியின் பாரம் முழுவதும் உன்பேரில்தான் சுமந்திருக்கிறது. இந்தச் சமயத்தில் நீ செய்யவேண்டியதைச் சொல்லுகிறேன்; கேள்.

''வியாச முனிவரிடமிருந்து நான் கற்ற 'பிரதிஸ்மிருதி' என்னும் வித்தையை உனக்கு உபதேசிக்கிறேன். அதை நீ ஜபித்துக் கடுந்தவம் செய்து வந்தால் தேவர்களின் அருள் உனக்குக் கிடைக்கும். வில், கவசம், கத்தி இவற்றை எடுத்துக் கொண்டு மனவுறுதியுடன் எதிரில் வருபவருக்கு இடங் கொடாமல் வடதிசை சென்று தவம் செய். முன் ஒரு காலத்தில் விருத்திராசுரனிடம் பயந்த தேவர்கள் தம் அஸ்திரங்களை இந்திரனிடத்தில்தான் ஒப்படைத்தார்கள். நீ இந்த மந்திரத்தால் இந்திரனை

மகாபாரதத்தில் வரும் உபாக்கியானங்களும் சரி, பாத்திரங்களும் சரி, பல வகை. ஒவ்வொரு கதையிலும் ஒரு பேருண்மையைக் கண்டறியலாம்; ஒவ்வொரு பாத்திர வர்ணனையும் தனித் தனிக் குணசித்திரம் ஆகும்.

வழிபட்டால் எல்லா அஸ்திரங்களையும் பெற்றுவிடலாம். நீ இப்பொழுதே தேவேந்திரனைப் பார்க்க உறுதி கொண்டு புறப்படு.''

பிறகு அவர் தமக்குத் தெரிந்த அந்த மந்திரத்தை உபதேசித்தார்; விடையும் கொடுத்தனுப்பினர். அர்ஜுனன் காண்டீவத்தையும் வற்றாத அம்பறாத் தூணிகளையும் எடுத்துக்கொண்டு உடலுக்குக் கவசம், கைவிரல்களுக்கு உறை முதலியவற்றை அணிந்துகொண்டு புறப்பட்டான். புறப்படுவதற்கு முன் அக்கினியில் ஹோமம் செய்தான். பெரியோர்களை வணங்கி ஆசி பெற்றான். கௌரவரை எண்ணிப் பெருமூச்சு விட்டான். மேலே பார்த்தான். ஆகாயத்தில் செல்லும் சித்தர், சாரணர் முதலியோர் அவனுடைய விருப்பம் நிறைவேறும் என்று ஆசி கூறினர்கள்.

அர்ஜுனன் கைகூப்பிப் புரோகிதருக்கு வணங்கினன். தர்மருக்கும் பீமனுக்கும் நமஸ்காரம் செய்தான். நகுலனும் சகதேவனும் அர்ஜுனனை வணங்கினர்கள். ''நீங்கள் விரும்பும் அஸ்திரங்கள் எல்லாம் கிடைக்கும். உங்களைப் போன்றவரைத்தான் தேவர்களும் காணவேண்டும். தேவர்களுக்கு இந்திரன் இருப்பதுபோல் உங்கள் நண்பர்களுக்கும் சகோதரர்களுக்கும் நீங்களே கதி. பதின்மூன்றும் ஆண்டு முடிந்தவுடன் நாங்கள் அனைவரும் உங்கள் தோள்வலியைத்தான் நம்பிப் புகல் அடைவோம். உங்கள் தந்தையாகிய தேவராஜனை அடைந்து எல்லா அஸ்திரங்களையும் பெற்றுத் திரும்புங்கள். காண்டவ வனத்தை எரித்தபொழுது, 'நீ தேவலோகம் வந்து தேவர்களால் கௌரவிக்கப் பெற்று, எல்லா அஸ்திரங்களையும் அடைந்து திரும்பி வருவாய்' என்று தேவராஜன், அனைவரும்

கேட்கும்படி சொல்லவில்லையா? இப்பொழுது அது உண்மையாகும்படி செய்யுங்கள். எங்காவது ஓர் இடத்தில் அமர்ந்து தவம் செய்யுங்கள். இந்திரனைக் கட்டாயம் பார்ப்பீர்கள்'' என்றார்கள்.

திரௌபதி தக்க வார்த்தைகள் கூறி அர்ஜுனனை வாழ்த்தினாள்:

''தேவர்கள் அனைவரும் உங்களைக் காக்கவேண்டும். ஆகாயம், பூமி இரண்டிலும் இருக்கும் தேவதைகள் உங்களைக் காக்கவேண்டும்: அந்தப்புரத்திலே துகில் உரித்ததும், காட்டில் வாழ்வதும், சொத்தைப் பறிகொடுத்ததும், பெற்ற பிள்ளைகளைப் பிரிந்து வாழ்வதுங்கூட எனக்குச் சிரமமாகத் தோன்றவில்லை. உங்கள் பிரிவுதான் என்னை வாட்டுகிறது. இனி ஆயுதத்தால் வாழும் க்ஷத்திரிய குலப் பிறப்பு எனக்கு வேண்டாம். தாயார் குந்திதேவி உங்களுக்கு என்ன நலம் எல்லாம் ஏற்படவேண்டும் என்று விரும்புவாரோ அவை யாவும் உங்களுக்குக் கிட்டவேண்டும். நீங்கள் இப்படிப் போயிருக்கும் சமயம் உங்கள் சகோதரர்கள் ஊண் உறக்கமின்றி உங்களைப் பற்றியே பேசிக்கொண் டிருப்பார்கள். நீங்கள் அஸ்திரங்களைப் பெற்று க்ஷேமமாகத் திரும்பி வர வேண்டும்.''

அர்ஜுனன் பெரியோர்களை வலம் வந்து மகிழ்ச்சியோடு வட திசை நோக்கிப் புறப்பட்டான். வழியில் எதிர்ப்பட்ட மரம் செடி கொடிகளை வெட்டிக்கொண்டே நேராகச் சென்றான். பிராணிகள் வழியில் அவனைப் பார்த்துப் பயந்து வழிவிட்டன. ஒரே நாளில் காற்றைப்போல் வேகமாக இமாலயத்தை அடைந்தான். அதைக் கடந்து கந்தமாதன மலையை அடைந்தான். பிறகு சிரமமான பல இடங்களைக் கடந்து இந்திரகீல மலையை அடைந்தான். ஆகாயத்தில், ''நில்'' என்ற சொல் கேட்டது. இப்படி ஆறு நாள் பிரயாணம் செய்து ஏழாம் நாள் இந்திரகீலத்தின் சிகரத்தில் தவம் செய்யத் தொடங்கினான். கைகளை மேலே தூக்கிக்கொண்டு மனசை அடக்கி, உடல் அசையாமல் தியானத்தில் ஈடுபட்டான்.

அப்பொழுது மரத்தடியில் ஒரு முனிவர் இருப்பதை அர்ஜுனன் கண்டான். பிரம்மதேஜஸ் அவரிடம் ஜொலித்தது. மஞ்சள் சடை தரித்த முனிவர், அர்ஜுனனைப் பார்த்து, ''அப்பா நீ யார்? எதற்காக இங்கே வந்திருக்கிறாய்? வில்லையும் கவசத்தையும் பாணங்களையும் வைத்துக்கொண்டு க்ஷத்திரிய ரீதியில் வந்திருக்கிறாயே. இதுவோ கோபத்தை அடக்கிய முனிவர்களுக்குத்தான் ஏற்ற இடம். இங்கே உன்னுடன் போரிடுபவரே இல்லை. இவற்றை எறிந்துவிடு'' என்றார். அர்ஜுனன் பேசவில்லை. முன்போலவே இருந்தான். முனிவர் திருப்பித் திருப்பிச் சொல்லியும் அவன் அசையவில்லை. அப்பொழுது முனிவர் சிரித்துக்கொண்டே, ''நான் தேவேந்திரன்; நீ வேண்டிய வரத்தைக் கேள்'' என்றார்.

அப்பொழுது அர்ஜுனன் கை கூப்பி வணங்கி, ''எனக்குத் தங்களிடம் இருக்கும் எல்லா அஸ்திரங்களையும் செலுத்தும் வித்தையை அறிய விருப்பம். அந்த வரத்தைக் கொடுத்து உதவுங்கள்'' என்றான்.

அதற்கு இந்திரன், ''உனக்கு இங்கே அஸ்திரங்களால் பயன் என்ன? சிறந்த உலகங்களையும், மற்றும் விருப்பமானவற்றையும் கேள்; தருகிறேன்'' என்று கூறினான்.

அர்ஜுனன், ''என் சகோதரர்கள் காட்டில் கஷ்டப்படுகிறார்கள். அவர்களைக் கவனியாமல், பகைவரை வெல்லாமல், எங்களுக்கு நேர்ந்த அபகீர்த்தியையும் அகற்றாமல் நான் சிறந்த உலகங்களுக்குப் போக விரும்பவில்லை. எனக்கு அஸ்திரம் பெறுவது தவிர வேறு எந்த விருப்பமும் இல்லை'' என்றான்.

இந்திரன், ''நீ சிவபெருமானை நேரில் பார்த்தால் உனக்கு எல்லா அஸ்திரங்களையும் கொடுக்கிறேன்'' என்று கூறி மறைந்தான்.

அர்ஜுனன் காண்டீவத்தையும் கத்தியையும் எடுத்துக்கொண்டு இமாலயத்தின் சிகரத்துக்கு வந்

தான். அப்பொழுது சங்கு, பறை முதலியவற்றின் ஒலி கேட்டது. பூமாரி பொழிந்தது. அங்கிருக்கும் இயற்கை அழகைக் கண்டு அவன் மகிழ்ச்சியுற்றான். தர்ப்பைப் புல் ஆடையை உடுத்து, தண்டம் ஏந்தி, மான் தோல் அணிந்து, மூன்று நாட்களுக்கு ஒரு முறை பழங்களை உட்கொண்டு ஒரு மாதம் தவம் செய்தான். ஆறு நாட்களுக்கு ஒரு முறை பழத்தை உண்டு இரண்டாவது மாதத்தைக் கழித்தான். மூன்றும் மாதத்தில் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை உலர்ந்து கீழே விழுந்த இலையை உட்கொண்டான். நான்காம் மாதம் வந்தவுடன் காற்றைப் புசித்துக் கைகளைத் தூக்கிக் கட்டை விரலை ஊன்றி நின்றபடி தவம் செய்தான். தவ வலிமையால் அவனிடம் தோன்றிய பொலிவைத் தாங்க முடியாமல் முனிவர் முதலியோர் ஒன்று சேர்ந்து சிவபெருமானிடம், ''அர்ஜுனனுடைய தவத்தின் உஷ்ணம் தாங்கவில்லை. அவனுடைய தவத்தை நிறுத்தச் செய்ய வேண்டும்'' என்று முறையிட்டார்கள்.

சிவபெருமான், ''அவன் கருத்து இன்னதென்று எனக்கும் தெரியும். அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்கிறேன். கவலை வேண்டாம். போய் வாருங்கள்'' என்று சொல்லி முனிவர்களை அனுப்பினார்.

சிவபெருமான் வேடனுடைய உருவம் எடுத்துக்கொண்டார். பார்வதி தேவியும் அதற்கேற்ற வடிவம் பூண்டாள். பிரமத கணங்கள் பற்பல உருவங்களை எடுத்துக்கொண்டன. அனைவரும் அர்ஜுனன் இருக்கும் இடம் வந்து கொண்டிருந்தார்கள். மூகன் என்ற அசுரன் பன்றியின் உருவம் எடுத்துக்கொண்டு அர்ஜுனனை எதிர்த்துச் சென்றுகொண்டிருந்தான். அசுரனைச் சிவபெருமான் பார்த்தார். அர்ஜுனன் அவனைக் கொல்வதற்காகக் காண்டீவத்தை நாண் ஏற்றிப் பாணங்களை எடுத்தான். ''என்னைக் கொல்ல வரும் உன்னை உடனே யமன் உலகுக்கு அனுப்பி விடுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே பாணங்களைப் பொழியச் சித்தமானான். வேடனுடைய வேஷம் பூண்ட சிவபெருமான், ''நான் முதலிலேயே நீருண்ட மேகம்போன்ற இந்தப் பன்றியைத் தொடர்ந்து வருகிறேன். நீ அடிக்காதே'' என்று தடுத்தார். அர்ஜுனன் அதைப் பொருட்படுத்தாமல் பன்றியின் மேல் பாணம் தொடுத்தான். பகவானும் அதே சமயத்தில் அதன்மேல் பாணத்தை வீசினார். இரு பக்கத்திலும் பாணங்களால் தாக்குண்ட அந்தப் பன்றி, அரக்கனின் உருவம் எடுத்துக்கொண்டு இறந்தது.

தங்கம்போல் ஒளிரும் மேனி கொண்டு மனைவியுடன் தோன்றிய வேடனைப் பார்த்த அர்ஜுனன் புன்னகை செய்து, ''நீ யார் இந்தக் காட்டில் இந்தப் பெண் பிள்ளையுடன் சுற்றுகிறாய்? உனக்குப் பயமில்லையா? நீ ஏன் அடித்தாய்? நீ நடந்துகொண்ட முறை வேட்டைக்கு ஏற்றதல்ல. உன்னை நான் உயிருடன் விடப்போவதில்லை'' என்றான்.

சிவபெருமான், ''நான்தான் இதை முதலில் குறி வைத்தேன். இந்தப் பன்றி என்னுடையதுதான். தவறு உன்மேல் இருக்க, மற்றவர்களைக் குறை கூறுவானேன்? நான் உன்னை விடமாட்டேன். போருக்குத் தயாராக நில். பாணங்களை விடு'' என்றார்.

இருவரும் போருக்குத் தயார் ஆனார்கள். வேடனான சிவபெருமானின்மேல் அர்ஜுனன் பாணங்களைப் பொழிந்தான். பகவான் அவற்றை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு புன்னகை பூத்த முகத்துடன் நின்றார். தன் பாணங்களை ஏற்றும் ஒருவன் கலக்கமின்றி நிற்கிறானே என்ற வியப்பு அர்ஜுனனுக்கு உண்டாகியது. ஒருவேளை கைலாசத்தில் வாழும் சிவபெருமான்தானோ இந்த வேடன் என்று சந்தேகமுற்றான். மீண்டும் நூற்றுக்கணக்கில் சூரியன் கிரணங்களைப் பொழிவது போல் பாணங்களைப் பொழிந்தான். அக்கினி பகவான் கொடுத்த வற்றாத அம்பறாத் தூணியிலும் சற்று நேரத்துக்கெல்லாம் பாணங்

கள் ஆகிவிட்டன. அர்ஜுனன் சற்று நடுங்கினுன். பிறகு கோபம் அடைந்து, காண்டீவத்தின் நுனியால் பகவானுடைய நெற்றியில் அடித்தான். பகவான் அந்த வில்லையும் அவனிடமிருந்து பறித்துவிட்டார். வேடனுக வந்த கடவுளை அர்ஜுனன் தன் வாளால் தலையில் அடித்தான். வாள் முறிந்துவிட்டது. மரங்களாலும் கற்களாலும் பகவானை அடித்தான். பகவான் அவற்றையும் பேசாமல் ஏற்றுக்கொண்டார்.

உடனே அர்ஜுனன் முஷ்டியுத்தம் தொடங்கினுன். அவன் முஷ்டியால் அடிக்கும்பொழுது புகை கிளம்பியது. பகவானும் அவனை முஷ்டியால் இடித்தார். பிறகு இருவரும் கட்டிப் புரண்டார்கள். பகவான் அவனை இறுக்கிக் கட்டி மூர்ச்சை அடையும்படி செய்தார். அவன் கீழே விழுந்தான். சற்று நேரம் கழித்து நினைவு வந்தவுடன் தான் வழிபடும் தெய்வமாகிய சிவபெருமானைச் சரணம் அடைந்தான். மண்ணுல் லிங்கத்தைப் பிடித்து வைத்துப் பூமாலைகளால் பூஜை செய்தான். தான் லிங்கத்தின் தலையில் இட்ட பூமாலையை அர்ஜுனன் வேடனின் தலையில் பார்த்தான். உடனே வேடனுடைய காலில் விழுந்து வணங்கினுன். பகவான் மகிழ்வுற்றுத் தம் சுய உருவத்தைக் காட்டினுர். பார்வதியுடன் சிவபெருமானை நேரில் கண்ட அர்ஜுனன், தான் அவரை எதிர்த்துப் போர் செய்த பிழையைப் பொறுத்தருளும்படி வேண்டினுன். பகவான் அவனைக் கட்டி அணைத்துக்கொண்டு, ''மன்னித்தேன்'' என்று கூறி, அவனுடைய பாணங்களையும் காண்டீவத்தையும் திருப்பிக் கொடுத்தார். ''நீ மகா விஷ்ணுவின் அம்சம்'' என்று அவனைக் கொண்டாடி, ''உனக்கு வேண்டிய வரம் கொடுக்கிறேன்'' என்றுர்.

அர்ஜுனன், பகைவரை வெல்லப் பாசுபதாஸ்திரம் கொடுத்து அருளவேண்டும் என்று வேண்டினுன். பகவான், ''நீதான் அதைப் பிரயோகம் செய்யத் தகுந்தவன். சாமானிய மனிதரிடம் பிரயோகித்தால் அது உலகை எரித்துவிடும். தக்க சமயத்தில் உபயோகித்துக்கொள்'' என்று கூறிப் பாசுபதாஸ்திரத்தைக் கொடுத்து அவனுடைய உடலைத் தடவினுர். உடலில் இருந்த வலி, காயம் முதலியன உடனே மறைந்துவிட்டன. பகவான் அர்ஜுனனைத் தேவலோகம் போகும்படி கூறிவிட்டு இமாலயத்தின் குகை ஒன்றில் மறைந்தார்.

கிழப் பிரம்மசாரி

வேலைக்காரக் கிழவனுக்கு 75 வயசு; இதுவரைக்கும் கலியாணமே ஆகாதவன்.

''பிப்ரவரி மாதம் 23-ஆம் தேதி உங்கள் காரைக் கொஞ்சம் இரவல் தருவீர்களா?'' என்று மிராசுதாரை அவன் கேட்டான்.

''தருகிறேன். ஆனுல், அன்று என்ன விசேஷம்?'' என்று மிராசுதார் விசாரித்தார்.

''அன்று எனக்குக் கலியாணம்.''

''அப்படியா! யார் அந்தப் பாக்கியசாலிப் பெண்?''

''இன்னும் நான் எந்தப் பெண்ணும் பார்க்கவில்லை. ஆனுல், எல்லா வசதிகளையும் முன்னதாகவே ஆயத்தம் செய்து வைத்துக்கொள்ள எண்ணுகிறேன்'' என்றுன் கிழ வேலைக்காரன்.

—'ஆபர்ன் ப்ளேன்ஸ்மான்'

'ஆடையே ஆள் அழகைக் காட்டும்'
என்று நம்பும் மக்கள்

திபேத்தியர் வாழ்வு

★

தலாய் லாமா திபேத்துக்கு ராஜா. அந்த நாட்டு மக்களுக்கோ அவர் தெய்வத்தின் அவதாரம். அவர்களின் பிரதான தெய்வம் சென்ரெஸி. அந்தக் கடவுள் தான் தலாய் லாமாவாகவும் ராஜாவாகவும் அவதரிக்கிறார் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

திபேத்தியர் ஆழ்ந்த மதப் பற்றுள்ளவர்கள். இமயத்தைக் கடந்து திபேத்தைச் சேரும்போது, போடாலா மாளிகையைக் காண்கிறோம். குளிர்காலத்தில் தலாய் லாமா இங்கே வந்து தங்குவார். க்யி ஆற்றங்கரையில், பழைய காலக் கோட்டை ஒன்றின் அருகில், முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு இதை நிறுவினார்கள். இன்றும் சில திபேத்தியர் இந்த மாளிகையைத் தேவதைகள் நிர்மாணித்ததாகவே நம்புகிறார்கள். ஆனால் உண்மையில், இதை ஆரம்பித்த வருஷம் கி. பி. 1641ல் ஐந்தாம் தலாய் லாமா இந்த வேலையைத் துவங்கினார். ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்பு அரண்மனை பூர்த்தியாயிற்று.

தலாய் லாமாவின் குடும்பத்தோடு சுமார் 250 துறவிகள் போடாலாவில் வசிக்கிறார்கள். துறவிகள் செந்நிற அங்கி அணிந்திருப்பார்கள். அரசருக்கு மந்திரியாக ஆலோசனை கூறுவோர் இவர்களே. அரண்மனைக்குள் நுழையும் போது, ஒரு பெரிய சக்கரத்தை மன்னரின் ஆட்கள் சுற்றுவதைப் பார்க்கலாம். இதைப் பிரார்த்தனைச் சக்கரம் என்கிறார்கள். ஒவ்வோர் அதிதியும் அங்கே நின்று, திபேத்தியரின் பல தெய்வங்களுள் ஒன்றுக்கு, ஒரு பிரார்த்தனை செலுத்திச் சக்கரத்தைச் சுழற்று



வார். இந்தமாதிரி சிறிய சக்கரங்களை ஒவ்வொரு திபேத்தியரின் வீட்டிலும் பார்க்கலாம்.

போடாலாவிலிருந்து கீழே நோக்கினால் திபேத்தின் தலைநகரான லாஸா தெரியும். அங்கே நாம் சென்றால், சில மக்களைச் சந்திக்கலாம். திபேத்தியருக்குள் வகுப்பு வேறுபாடு அதிகமுண்டு; எல்லாரோடும் எல்லாரும் கலந்து உறவாட மாட்டார்கள். படத்தில் இருக்கும் பெண் ஒரு மந்திரியின் மனைவி. பெயர்: ரகஷார் லாசாம் குஷோ. 'ஆடையில் ஆள் அழகும், இலையில் மரத்தழகும் தெரியும்' என்பது திபேத்தியப் பழமொழி. இந்தப் பெண் அணிந்துள்ள தலைப்பாகை விநோதமானது. மூங்கில் வளைவுகளில் சிவப்புத் துணி போர்த்து, அதில் முத்துக்களும் விலைமிக்க நவமணிகளும் தைப்பார்கள். கூந்தலை நன்றாகச் சீவி, இறுக்கமான இரு பின்னல் போட்டிருக்கிறாள். தலைப்பாகையின்

மூலம்: வித்யாதனம் (தமிழ்: ஜூலை '58),
1-டி, ரிதெர்டன் ரோடு, வேப்பேரி, சென்னை-7.



அடிப்பகுதியோடு பின்னலைப் பிணைத்திருந்தாலும், முதுகுப்புறச் சரிகை உடையில் அது தவழ்ந்து விளையாடுகிறது. அவளுடைய கழுத்தில் ஒரு தாயத்துத் தொங்குகிறது. அது இருந்தால், பேய் பிசாசோ, நோய் நொடியோ, சாக்காடோ அணுகாதாம். கணவன் வகிக்கும் பதவிக்கு ஏற்றபடி அணிகள் அணிய வேண்டுமென்று பெண்கள் விரும்புகிறார்கள். விசேஷ சமயங்களில், மந்திரியின் மனைவி சுமார் லட்ச ரூபாய் மதிப்புள்ள நகைகளை அணிவதுண்டு.

தோற்ற அலங்காரத்திலிருந்தே ஒருவன் அந்தஸ்துள்ள குடிமகனா என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அவனுடைய அங்கியின் கைகள் வெகு நீளமாயிருக்கும். கைகளுக்கும் கீழாக விழும்படி தைத்திருப்பார்கள். சாதாரணக் கூலியைப்போல் அவன் கைகளால் உழைத்துச் சாப்பிடவேண்டுவதில்லை என்பதைக் காட்டவே அப்படி அவனுடைய அங்கிகளைத் தயாரிக்கிறார்கள்! இன்னும் ஓர் அடையாளம் காதணி. பொன்னாலும் நீலமணியாலும் செய்த குண்டலத்தை ஒரு காதில் மட்டுமே அணிந்திருப்பான். தலை உச்சியில் குடுமி இருக்கும். எல்லா அரசியல் பரீட்சைகளிலும் தேறினவனே அப்படிக் குடுமி வைத்துக்கொள்ளலாம்!

எருது ஓட்டிக்கொண்டு செல்லுகிறான் ஒரு குடியானவன். நம்மைக் கண்டதும் நாக்கை நீட்டிச் சீழ்க்கை அடிக்கிறான். 'இதென்னடா காட்டுமிராண்டித்தனம்!' என்று நாம் ஆச்சரியப்படுவோம்; ஆனால் அப்படித்தான் அவர்கள் ஒருவரையொருவர் வரவேற்பது. தம்மைக் காட்டிலும் மேலான பதவியிலுள்ளவர்களைச் சந்தித்தால் திபேத்தியர் இப்படித்தான் அவர்களை வாழ்த்துவார்கள். நாக்கை நீட்டுவது மரியாதையைக் குறிக்கும். பெரியவர்களைச் சுற்றியுள்ள காற்றைத் தாங்கள் தீட்டுப்படுத்த விரும்பவில்லை என்பதைக் காட்டவே அந்தச் சீழ்க்கை ஒலி.

லாஸாவின் பிரதான வீதியின் நடுவில், 'சக்லாக் காங்' என்ற பெரிய கோவில் இருக்கிறது. வீடுகளை ஒட்டினாற்போல் வரிசை வரிசையாகக் கடைகள் உண்டு. அங்கே விற்பனையாகும் பொருள்கள் உங்களை வியப்பில் ஆழ்த்தும். ஒரு கடையில் தேயிலை; இன்னொரு கடையில் சீனத்திலிருந்து வந்த பட்டும் சரிகையும். அமெரிக்காவிலிருந்து வந்த முகப்பவுடர், உதட்டுச் சாயம், பேனா முதலியவையும் அங்கே கிடைக்கும். மிகச் சிறப்பான குளிர்கால அங்கிகளும் சுவிட்சர்லாந்து கைக் கடிகாரங்களும் கிடைக்கும். இந்தியாவிலிருந்து தருவித்த அலுமினியச் சாமான்களும் பித்தளைச் சாமான்களும் ஒரு மூலைக்கடையில் இருக்கின்றன. மறு கோடியில் ஒரு ஸ்திரீ திபேத்துப் புத்தகங்களை விற்பனை செய்கிறாள். திபேத்திய மொழியில் எழுதிய தாள்களை மர அட்டைகளில் பொருத்தியிருப்பார்கள். மற்றக் கடைகளில் நுழைந்தால், காதணிகளும் சரப்பளிகளும் மோதிரங்களும்



வளையல்களும் காணலாம். இவை அந்த நாட்டில் கிடைக்கும் பொன்னால் செய்தவை. கருடபு மான்கள் இங்கே உண்டு. அவற்றின் கொம்புகளைத்தான் நிலத்தில் புதைந்துள்ள பொன்னைத் தோண்டியெடுக்கப் பயன்படுத்துவார்கள். திபேத்துக்கு இறக்குமதியாகும் பொருள்களை எல்லாம் மலையின் கணவாய்கள் வழியாக எருதுகளே சுமந்துவரும்.

சரித்திரத்துக்கு முற்பட்ட காலத்தில் திபேத்துப் பிரதேசத்தைப் பனி மூடிக்கொண்டிருந்தது. இன்றும் இங்கே குளிர் அதிகம். அதனால்தான் இங்கே நாலு லட்சம் மக்களே வசிக்கிறார்கள். தென் திபேத்தில் ஓடும் சேங்போ நதி மிகவும் முக்கியமானது. இதைச் சூழ்ந்த இடம் வளம் உடையது; வால்கோதுமை, சாய்கறி, பழம் முதலியவை இங்கே விளைகின்றன. தேசத்தின் பல பாகங்களில் பனி பெய்தவண்ணம் இருக்கும். மழை சொற்பமே.

இந்த மக்கள் எருமை இறைச்சியையும் வால்கோதுமையையும் தேயிலையையும் உணவாகக் கொள்கிறார்கள். இவர்களில் அநேகர் ஒரு நாளில் 30 முதல் 50 கோப்பை வரையில் தேநீர் பருகுவதும் உண்டு. சீனத்திலிருந்து வந்த தேயிலையை நீரில் கொதிக்க வைக்கும்போது, சிறிது சோடா மாவும் சேர்ப்பார்கள். ஒரு பெரிய கலத்தில் வடிகட்டிய தேநீரில் பெருங்கட்டி வெண்ணெயும் வாசனைப் பொருளும் சேர்த்து, இந்தக் கலவை ஒன்று சேரும் வரையில் நன்றாய்க் கடைவார்கள்.

இவர்களுக்குப் பல மூட நம்பிக்கைகள் உண்டு. கல்வி வாசனை பலருக்கு இல்லை; அதனாலேயே இந்த நம்பிக்கைகள் நிலைத்திருக்கின்றன. திபேத்தில் பள்ளிக்கூடங்களே இல்லை. பணக்காரர்கள் மட்டும் தங்கள் குழந்தைகளுக்கும் தங்களுடைய பணியாட்களின் குழந்தைகளுக்கும் கல்வி போதிக்கத் தனியாக ஓர் ஆசிரியரை அமர்த்தியிருப்பார்கள். வெட்ட வெளியில் தான் அவர் இவர்களுக்குப் பாடம் போதிப்பார். மூங்கில் பேனாவை வைத்துக்கொண்டு வழவழப்பான பலகைகளில் பிள்ளைகள் பாடம் எழுதுவார்கள்.

இவர்களுடைய மதம் பௌத்த மதத்தின் ஒரு பிரிவு. அதற்கு லாமா என்று பெயர். கி. பி. ஏழாவது நூற்றாண்டில் இந்த மதம் திபேத்தில் ஸ்தாபிதமாயிற்று. தேவர்கள் மனிதப் பிறவி எடுப்பார்கள் என்று இவர்கள் நம்புகிறார்கள். இப்போதுள்ள தலாய் லாமாவுக்கு வயசு 22-க்கு மேல் ஆகிறது. இவர் பதவிக்கு வந்ததுபற்றி ரசமான கதை ஒன்று சொல்கிறார்கள்.

13-ஆம் தலாய் லாமா இறந்த பிறகு, ராஜப் பிரதிநிதியாக இருந்தவர் ஓர் ஏரிக்குச் சென்றார். வருங் காலத்தைப்பற்றிய காரியங்கள் அந்த ஏரியின் நீரில் பிரதிபலிக்குமாம். பொன் கூரை வேய்ந்த மடத்துக்கு அருகில், ஒரு குடியானவனின் குடிசை இருப்பது தண்ணீரில் தெரிந்ததாம். தேசத்தின் பல மூலைகளுக்கும் ஆட்கள் அனுப்பினார்கள். அப்படிச் சென்ற பரிவாரங்களில் ஒன்று மேலே கூறிய மடத்தை அடைந்தது. ஓர் எளிய குடிசையின் அருகில் அது அமைந்திருப்பது கண்டு அந்தக் குழுவினர் வியப்புற்றார்கள். குடிசையில் இரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் இருப்பதைக் கண்டார்கள். பல நாள் அந்தக் குழந்தையைப்

பற்றிப் பேசி, விவாதித்து, பிரார்த்தனைகள் பல செய்த பின்பு, அந்தச் சிறுவனைத்தான் 14-ஆம் தலாய் லாமாவாக நியமிக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார்கள். எனவே, அவனைப் போடாலாவுக்குத் தூக்கிச் சென்று, வருங்கால அரசனுவதற்கான பயிற்சிகளை அவனுக்கு அளித்தார்கள்.

திபேத்தில் புது வருஷக் கொண்டாட்டம் இரண்டு வாரங்கள் வரையில் நடைபெறும். தேசத்தில் நடக்கும் மிகப் பெரிய கேளிக்கை இதுவே. அந்த நாளில் போடாலாவுக்கு எந்த நிலையிலுள்ள மனிதனும் வந்து தலாய் லாமாவின் ஆசீர்வாதத்தைப் பெறலாம். நூற்றுக்கணக்கான யாத்திரிகர் விலையுயர்ந்த வெகுமதிகளோடு தம் அரசரைக் கண்டு கொள்ள வருவதுண்டு. 'கடா' என்ற ஒரு மஃப்ளரையாவது ஏழைகள் தம் மன்னருக்குக் காணிக்கையாக அளிப்பது வழக்கம். திபேத்தில், வரவேற்புச் சமயங்களில் சாதாரணமாக அளிக்கும் பரிசு 'கடா'.

சில யாத்திரிகர், லாஸாவிலுள்ள தலாய் லாமாவின் மாளிகை வரை ஊர்ந்தே செல்லுவார்கள். இப்படிச் செல்வது பெரிய புண்ணியமாம். அடியில் இரும்புத் தகடு அடித்த மர உறைகளைக் கையிலும், தோல் கச்சைகளை முழங்காலிலும் போட்டுக்கொண்டு இப்படி ஊர்ந்து போவார்கள். கையும் முழங்காலும் தேயாதிருக்கவே இந்தப் பாதுகாப்பு. இது மாளாத பிரயாணமாயிருக்கும். ஆகவே, உலர்ந்த வால் கோதுமை மாவை உணவுக்காகச் சுமந்து செல்வார்கள். அவர்களுடைய முகம் எப்போதும் போடாலாவை நோக்கியபடியே இருக்கும். வாயோ தேவதேவர்களைத் துதிக்கும் ஜபங்களை முணுமுணுத்தபடி இருக்கும். தங்களுக்காக இப்படிப் பிரயாணம் செய்யக் கூலி கொடுத்து ஏழைகளைப் பணக்காரர் அமர்த்துவதும் உண்டு. ஆயினும், அது அவ்வளவாகப் புண்ணியம் இல்லையாம்.

ஸினிமா விமர்சகர்

பெண்கள் சங்கம் ஒன்றில் ஸினிமா விமர்சகர் ஒருவர் பிரசங்கம் செய்து இப்படி முடித்தார்: ''சகோதரிகளே, உங்களுக்கு வேண்டிய படம் இதுதானு? தப்பியோடிய கைதி, பிறர் வீட்டில் புகுந்து, வீட்டுக்காரியையும் அவள் மகளையும் சிறைப்பிடித்துச் சென்று, மீட்புப் பணம் கேட்கிறுன்; ஒரு தொழிலாளி தன் முதலாளியைக் கொள்ளையடித்து, மாண்டி கார்லோவுக்குச் சென்று சூதாடி, பணத்தையெல்லாம் இழந்து, பாறைமீது ஏறிக் கடலிலே குதிக்கிறுன்; ஒரே பெண்ணை இரண்டு வாலிபர் காதலித்து, ஒருவனை மற்றவன் சுட்டுக் கொல்கிறுன்; அழகி ஒருத்தியின் வீட்டுக்குள்ளே துராகிருதமாகப் புகுந்த ஒருவன், மற்றவரையெல்லாம் அடித்து நொறுக்கிவிட்டு, அழகியைத் தூக்கியோடிக் காரிலே வைத்து, மலையிலிருந்து மணிக்கு எண்பது மைல் வேகத்தில் அடிவாரத்தை நோக்கிப் பாய்கிறுன்—இன்னும் இப்படி எவ்வளவோ சொல்லிக்கொண்டே போகலாம். இது தானு? உங்களுக்கு வேண்டிய படம் இதுதானு? இனிமேல் சகோதரிகளே, உங்களில் யாராவது, என்னை ஏதாவது கேள்வி கேட்க விரும்பினுல் கேட்கலாம்.''

அந்தக் கணத்தில் சொக்கிப் பரபரப்படைந்த ஒரு குரல், ''ஓ, நான் கேட்க விரும்புகிறேன்: இந்தப் படம் எங்கே ஓடுகிறது?'' என்று விசாரித்தது.

—'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்'

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

ராமமூர்த்தி, தஞ்சாவூர்.

கேள்வி: என் வயசு 20. இதற்குள் என் தலை கிட்டத் தட்ட நரைத்து விட்டது. இதற்கு என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. 'லோமா தடவலாம்' என்கிறார்கள். வைட்டமின் 'டி' இஞ்செக்ஷன் செய்யலாம் என்கிறார்கள் வேறு சிலர். இவை குணம் தருமா? இல்லாவிட்டால் வேறு மருந்து உண்டா? இதற்காக நான் எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யத் தயாராக இருக்கிறேன்.

விடை: சிறு வயசில் நரை கண்டால் அது மாறித் திரும்பவும் கறுக்கலாம். இதற்கென்று மருந்துகள் பயன்படுவதில்லை என்பது என் அபிப்பிராயம். இந்த நரையால் உடல் ஆரோக்கியத்துக்கு ஒரு வகைக் கேடும் உண்டாகாது. அயம் கலவையான டானிக்குகள் பயன் படலாம்.

துரை முருகேசன், காரைமடை.

கே: குளிர்ந்த நீர் பட்டால் பல் கூசுகிறது. இதற்குப் பரிகாரம் என்ன? அடிக்கடி பல்லில் ரத்தம் வருவதைத் தடுக்கப் படிகாரத் தண்ணீரை உபயோகிப்பது நல்லதா?

வி: பல் தேய்ந்துபோனாலும் சொத்தையாய்ப் போனாலும் நரம்பு வெளியாகும். அதனால் பல் கூசும். படிகாரத் தண்ணீர் நச்சுக் குணமுடையதாகையால், அதை அருந்தி விடலாகாது; கொப்புளிக்க உபயோகப்படுத்தலாம். பச்சைக் கறி காய்களை அதிகமாக உபயோகித்துக் கனிவகையையும் சாப்பிட்டால், பல்லிலிருந்து ரத்தம் வருவது குறையும். எந்த ஆகாரத்தையும் நன்றாய்ச் சுவைத்துச் சாப்பிட்டால், பல்லுக்கு வலிமை ஏற்படும்; ரத்தம் சுரப்பது குறையும்.

புருஷோத்தமன், பெரியநாயகன் பாளையம்.

கே: - 1: எண்ணெய் ஸ்நானம் செய்த பிறகு அன்று பகலில் தூங்கக் கூடாது என்று சிலர் சொல்கிறார்கள். அப்படித் தூங்குவதால் என்ன கெடுதல்?

வி: எண்ணெய் தேய்த்து நீராடிய பிறகு, உடம்பு தளர்ந்திருக்கும். பகலில் தூங்கும்போது



வேர்க்கும். எண்ணெய் தேய்த்துக் குளித்தால் சருமத் துவாரங்களை எண்ணெய் அடைத்திருக்கும். அப்போது வேர்வை வெளியாகாமல் உடம்பில் வெப்பம் அதிகமாகி ஜுரமும் உண்டாகலாம்.

கே-2: இந்த ஜூன் மாத 'மஞ்சரி'யில் 'மேனி அழகு' என்ற தலைப்பில் 'சரும சுத்தமே மேனி அழகுக்கு அடிப்படை' என்று எழுதிவிட்டு, பின் பகுதியில், 'குளித்துவிட்டு உடலுக்கு டாய்லட் பவுடர் போட்டுக்கொள்வது நல்லது' என்று கட்டுரையாளர் சொல்லியிருக்கிறார். டாய்லட் பவுடர் சருமத் துவாரங்களை அடைத்துக்கொண்டு வேர்வை வெளியாவதைத் தடுத்து விடாதா? ஆகவே, குளித்தபின் உடல் முழுவதும் பவுடர் போட்டுக்கொள்ளுவது நல்லதா?

வி: நண்பர் கேள்வியைக் கேட்டு விட்டு, விடையையும் சொல்லி விட்டார். சருமத் துவாரங்களைப் பவுடர் அடைத்துவிடும் என்பது உண்மையே. அதனால் வேர்வை தடைப்படும். பவுடர் சாதாரணமாக முகத்திலும் வேறு சில இடங்களிலுந்தான் போட்டுக்கொள்வார்கள் சிலர். உடம்பெங்கும் போட்டுக் கொள்வது அபூர்வம். அந்தக் கட்டுரையாளர், 'கிணற்று நீர் உப்பாயிருந்தால் அதில் குளித்த பிறகு டாய்லெட் பவுடர் போட்டுக் கொள்ளலாம்' என்றுதான் சொல்லியிருக்கிறார்.

சீதாராமன், தேவம்பாளையம்.

கே-1: இரவில் நேராகப் படுத்தாலும் காலையில் படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்குள், இரவில் படுத்த நிலைக்கு மாறாக வெவ்வேறு திசைகளில் காலும் தலையும் மாறிக் கிடக்கிறான் ஒரு மாணவன். காரணம் என்ன? தவிர்க்க வழி என்ன?

வி: இரவில் சீக்கிரமே சாப்பிட்டு விட வேண்டும். ஏழு மணிக்குள்ளே சாப்பாடு முடியவேண்டும். சாயங்காலம் நன்றாக விளையாட வேண்டும் அல்லது ஓடவேண்டும். இத்தகைய தேகப்பயிற்சி நல்ல அயர்வைத் தரும். அதனால் தூக்கம்

நன்றாய் வரும். அப்போது இவ்வளவு சுற்றித் திரும்பமாட்டான். பதினைந்து நாளைக்கு ஒரு தடவை பேதிக்குச் சாப்பிட வேண்டும்.

கே-2: படுத்து உறங்கும்போது வாயிலிருந்து சாளவாய் நீர் சுரந்து தலையணையை நனைத்து விடுகிறது. வாயை மூடித் தூங்கினாலும் இப்படி ஏற்படுகிறது. இதற்குப் பரிகாரம் உண்டா?

வி: சீரணத்துக்கு மருந்து கொஞ்சநாள் சாப்பிட்டால், சாளவாய் நீர் இரவில் சுரப்பது குறையும்.

கே-3: பள்ளி மாணவனொருவன் பேசும்போதும் படிக்கும்போதும் மிக மிகக் கடினமாகத் திக்கித் திக்கிப் பேசுகிறான். திக்கியே படிக்கிறான். மௌனமாக வாசிக்கப் பழக்கியும் குணமாகவில்லை. திருத்த வழியுண்டா!

வி: திக்கித் திக்கிப் பேசும் இயல்பு ஒருவகை அச்சத்தால்தான் உண்டாகிறது. இதற்குப் பரிகாரம், வீட்டுச் சூழ்நிலையிலிருந்து அவனைப் பிரிப்பதே. வெளியே தனிமையாகவும் உரக்கவும் அவன் பேசிப் பழக வேண்டும்: அல்லது உரக்கப் புத்தகங்களை வாசிக்க வேண்டும். இப்படிப் பழகிவந்தால் திக்கல் நீங்கிவிடும்.

கே-4: பல்லில் படிந்துள்ள பாசிக்கறையைப் போக்க விரும்புகிறேன். எதைக் கொண்டு பல் துலக்குவது நல்லது?

வி: உமிக்கரி கொண்டு துலக்கிப் பிறகு ப்ரஷ் கொண்டு துப்புரவு செய்தால் இந்தப் பாசி நீங்கும்.

கே. சந்திரசேகரன், சென்னை.

கே-1: ஆயுர்வேத வைத்தியத்தில் பத்தியம் வைப்பது போல் அலோபாதி முறையில் பத்தியம் இல்லாமல் இருப்பதேன்?

வி: நீலகண்ட தீட்சிதர் புகழ் பெற்ற ஸம்ஸ்கிருத கவி. ஒரு செய்யுளில் வைத்தியனைப்பற்றி நகைச்சுவையுடன் அவர் இப்படிச் சொல்லுகிறார்: 'வைத்தியன் தனக்குத் தோன்றிய மருந்தைக் கொடுப்பான்; கடினமான பத்தியம் விதித்து விடுவான். நோயாளி குணமடைந்தால் வைத்தியனுக்குப் புகழ்; இல்லையானால் அபத்தியம் காரணம்!' இந்த நோக்கத்தைக் கொண்டு வைத்தியத்தில் கடுமையான பத்தியம் விதிக்கலாம். இந்த முறையை அலோபாதி வைத்தியர்கள் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை போல் இருக்கிறது.

கே-2: நோய் சிறுகச் சிறுகக் குணமாவது நல்லதா? மருந்து உண்ட உடனே குணமாவது நல்லதா? விளக்கமாகப் பதில் வேண்டும்.

வி: நோய் மெல்ல மெல்லக் குணமானால் வைத்தியருக்கு நீடித்த வருமானம் கிடைக்கலாம். மருந்து உண்ட உடனே குணமானால், மருந்தில்லாமலே நோயாளி குணமாகியிருக்கலாம் என்று நோயாளி ஒருவேளை நினைக்கக் கூடும்.

பெனிசிலின் போன்ற பூஞ்சண மருந்துகள் பிரபலமான பிறகு, அநேகம் நோய்கள் விரைவில் குணமாகிவிடுகின்றன. இதனால் நோயாளியின் உடம்பில் நோயை எதிர்க்கும் சக்தி விளைவதில்லை. திரும்பவும் அது எந்தச் சமயத்திலும் நோய்க்கு வசமாகக்கூடும். மெல்ல மெல்லக் குணமானால் உடம்பில் எதிர்ப்புச் சாரம் தோன்றி வெகு நாள் நோய்க்கு வசமாகாமல் உடம்பு வலுப்பெற்றிருக்கும். வைசூரி நோய்க்குப் பிறகும் வேறு அம்மை நோய்களுக்குப் பிறகும் இந்த மாதிரி நீடித்த எதிர்ப்பு நிலை தானாகவே உடம்பில் ஏற்பட்டு இருந்து வருகிறது. டைஃபாயிட் ஜுரத்திலும் இப்படி இருந்து வருகிறது. இப்போது டைஃபாயிட் ஜுரத்துக்குப் பூஞ்சண மருந்து பிரயோகித்தால் நோய் ஒரு வாரத்துக்குள்ளேயே குணமாகிவிடுகிறது; ஆனால் நீண்டகாலம் இந்த நோயை எதிர்க்கும் ஆற்றல் உடம்பில் தங்கியிருப்பதில்லை. என்றாலும், விரைவில் டைஃபாயிட் ஜுரம் குணப்படுவதால் இந்த நோயால் ஏற்படும் அபாயங்கள் நேருவதே இல்லை. இதுதான் பெரிய லாபம். பொதுவான ஆரோக்கியம் இதனால் அதிகமாகிறது.

கே 3: 'விருத்தாப்பிய வைத்தியம்' அவசியமா?

வி: விருத்தாப்பிய வைத்தியம், அதாவது வயோதிகர்களுக்கு வைத்தியம் செய்யும் அவசியம் இந்தக் காலத்தில் அதிகமாகிக் கொண்டு வருகிறது. அநேகம் பேர் கிழவர்களாகி, நோய்கள் கடினமில்லாமலும் நசு நசு வென்று தொல்லைப்பட்டுக் குணம் பெற வழியில்லாமலும் இருக்கிறார்கள். இவர்களுக்குத் தனி முறையிலே சிகிச்சை செய்தாக வேண்டும்.

சுந்தர், மதுரை.

கே: நான் இரவு பதினொரு மணிக்குப் படுத்துக் காலை ஆறு மணிக்கு எழுந்திருக்கிறேன். இது சாதாரண உறக்க நேரமா? அல்லது குறைந்த அளவு நேரமா?

வி: எவரும் கட்டாயப்படுத்தி எழுப்பாத நிலையில் தானே எழுந்தால், இது சரியான நேரத் தூக்கந்தான்.

துரைராஜ், பம்பட்டி.

கே: காஸ்டிக் சோடாவை நீரில் கலந்து 'சோடாலே' என்ற கரைசல் தயார் செய்து அதை எண்ணெயில் கலக்கித் தலைக்கு உபயோகிக்கலாம் என்று ஒரு பத்திரிகையில் போட்டிருந்தது. காஸ்டிக் சோடாவை உபயோகிப்பதால் கெடுதல் ஏதாவது உண்டா?

வி: பத்திரிகையில் வருவதெல்லால் நம்பக் கூடியதென்று எண்ணலாகாது. மதிப்புள்ள பத்திரிகைகளில்கூடச் சில வேளை இந்த மாதிரி விஷயங்கள் பிரசுரமாகின்றன. எண்ணெய் என்ன எண்ணெய்? காஸ்டிக் சோடா எவ்வளவு? எவ்வளவு நீரில் எவ்வளவு கலவை செய்ய வேண்டும்? எவ்வளவு எண்ணெயில் இதைக் கலவை செய்ய வேண்டும்? அதற்குச் சூடு ஏற்ற வேண்டுமா? வீட்டில் இதைச் செய்ய முடியுமா? - இந்த விஷயங்களை யெல்லாம் தெரிந்து கொண்ட பிறகுதான் இந்தக் கேள்விக்கு விடை கொடுக்க முடியும். காஸ்டிக் சோடாவைக் கையில் எடுத்தாலே கை வெந்துபோகும். நீரில் கரைத்தாலும் சருமத்தைக் கரைக்கும் சக்தி அதற்கு உண்டு. ஆகவே, சருமத்தை அது புண் படுத்திவிடும்.

காஸ்டிக் சோடாவை எண்ணெயில் கலவை செய்து சுடவைத்துச் சோப்பாக்குகிறார்கள். சோப்பைத் தக்க முறையில் செய்தால் அதில் காரம் இராது.

தலைக்கு இந்தக் காஸ்டிக் சோடா கலந்த கலவை எண்ணெயை உபயோகிப்பது சரி என்று நான் சொல்லமாட்டேன். இதனால் தலைமயிர் கெட்டுப் போகும்.

அருள், சென்னை-18.

கே: நான் உட்கார்ந்து எழுந்தால், எனக்கு முதுகெலும்பின் நுனியில் அதிக வலி உண்டாகிறது? இது எதனால்? இதைத் தீர்க்க வழி சொல்லவேண்டும்.

வி: மனிதனுக்கு வாலின் குறியாகச் சில எலும்புகளின் தொகுப்பு முதுகெலும்பு நுனியில் இருக்கிறது. இந்த எலும்புகளில் கேடு உண்டாகி யிருப்பது நண்பரின் வலிக்குக் காரணமா யிருக்கலாம். வைத்தியரை நேரில் கேட்டு உறுதிப்படுத்திக்கொண்டு, வைத்தியம் செய்துகொள்ளுவது நல்லது.

மீனாட்சி, மதுரை.

கே: என்னுடைய பதின்மூன்று வயசுப் பெண் எப்போதும் என்னை எதிர்த்துப் பேசுகிறாள். பிற குழந்தைகளுடன் சண்டையும் பூசலுமா யிருக்கிறாள். ஆடையிலும் அலங்காரத்திலும் எப்போதும் நேரத்தைக் கழிக்கிறாள். படிப்பில் கவனமில்லை. தனக்கென்று தனி வழி. கட்டுப்பாட்டை வெறுக்கிறாள். அடக்கம் இல்லை. கோபம் வந்தால் என்னை அடிக்கிறாள்; சாப்பிடாமல் பட்டினி கிடக்கிறாள். இவை பைத்தியத்தின் குறிகளா? கவலையா யிருக்கிறது.

வி: இந்தக் குழந்தைக்குப் பருவ காலம் ஆரம்பித்துவிட்டது. இறகு முளைத்த குருவிக் குஞ்சை, 'கூட்டைவிட்டு வெளியே வராதே' என்று தாய்ப் பறவை தடை செய்கிறதா? இல்லை. பறக்கவிட்டுத்தான் பாதுகாத்துக்கொண் டிருக்கும். இந்தக் குருவிக்குஞ்சு கூட்டை விட்டுப் பறக்கும்போது தாய்ப் பறவை உயரத் தள்ளி நின்று பார்த்துக்கொண் டிருக்கும். மனிதரோ பூனையோ அருகில் வந்தால், தாய்ப் பறவை கூச்சலிடும். இந்த மாதிரியே நாமும் பருவ காலம் வந்த குழந்தையின் சுதந்தர உணர்ச்சியை எதிர்க்காமல் இருக்க வேண்டும். அதே சமயம் ஆபத்து நேராமலும் அந்தக் குழந்தையைப் பாதுகாக்க வேண்டும். குழந்தையின் உள்ளம் வளர்வதை நாம் காணமுடியாது. உடல் வளர்வதைத்தான் காண்கிறோம். நம்முடைய பழைய பழக்கங்கள் நமது பருவகாலத்துக்கு ஏற்றாற்போல் இருந்தன. இந்த நாளில் வாழ்க்கை அதிகச் சிக்கலாகிக் கொண்டுவருகிறது. இந்தக் காலத்துக் குழந்தைகள் அதற்குத் தகுந்தாற்போல் சமாளித்துக்கொள்ள முயலும் முயற்சியே இப்படி அவர்கள் நம்மை எதிர்த்துப் பேசுவதும் நாம் சொல்வதற்கு எதிராகக் காரியங்களைச் செய்வதும். எதை நாம் எதிர்க்

கிறுமோ அது குழந்தையின் உள்ளத்தில் ஸ்திரமாகிவிடும். ஆகவே, எதையும் எதிர்க்காமல் நயமாகவே அபாயங்களை எடுத்துச் சொல்ல வேண்டும். அநுபவமே நல்ல வாத்தியார். ஓரளவு அநுபவத்துக்கு இடம் கொடுக்கவேண்டும். குழந்தைகளுக்கிடையே ஏற்படும் சண்டைகளில் நாம் எவருக்கும் பரிந்து பேசக்கூடாது. இந்த விஷயங்களில் தாய்க்குப் பொறுமை இருந்தால் எல்லாம் முடிவில் சரியாகிவிடும்.

இந்தப் பருவகாலத்தில் பரம சாதுவாயிருந்து எவரிடமும் பேசாமல் பெற்ருேருக்கு முற்றும் பணிந்தே நடக்கும் குழந்தையைப்பற்றித்தான் சற்றுக் கவலைப்படவேண்டும். ஏனென்ருல், இப்படிப்பட்ட குழந்தைக்கு உள்ளக் கோளாறு ஏற்பட்டுவிடலாம்.

கோபம் ஒரு பழக்கமாகிவிடும். ஆகவே, அதற்கு இடம் கொடுக்காமல் நாம் நடந்துகொள்ள வேண்டும். அலங்காரத்தில் நேரம் கழிப்பது இந்த வயசுக்கு இயல்பு. படிப்பில் கவனமும் குறையலாம். ஆனால் திரும்பவும் கவனம் வரலாம்.

காதல் விசித்திரம்

அமெரிக்காவின் தெற்கு மாகாண நகரம் ஒன்றில் பணக்கார வாலிபப் பெண் ஒருத்தி பெற்ருேருடன் வசித்துக் கொண்டிருந்தாள். ஒரு நாள் அந்த நகரத்துக்கு அழகான புதிய தபால்காரன் ஒருவன் வந்தான். ஜன்னலில் உட்கார்ந்திருந்த பணக்காரப் பெண் அவனைக் கண்டு மயங்கிஞள். அவனை அடிக்கடி பார்க்க ஆசை கொண்டாள். அதற்காக ஒரு தந்திரம் செய்தாள்.

ஜனதிபதி மாளிகைக்கு எந்த விஷயம்பற்றி யார் எத்தனை கடிதங்கள் எழுதினாலும் அத்தனைக்கும் பதில் வரும் என்று அவளுக்குத் தெரியும். எத்தனையோ விஷயங்கள்பற்றி ஏராளமான கடிதங்களை ஜனதிபதி மாளிகைக்கு அவள் எழுதிஞள்.

நினைத்த சிநேகிதிகளுக்கெல்லாம் எண்ணற்ற கடிதங்கள் எழுதி, உடனே பதில் தரக் கோரிஞள்.

இந்தக் கடிதங்களுக்கெல்லாம் கட்டுக் கட்டாக நாள் தவருமல் அந்தப் பெண்ணுக்குத் தபாலில் பதில்கள் வரத் தொடங்கின.

தபால்காரன் வரும்போது, தானே ஓடிவந்து அவள் இந்தத் தபால்களை அவனிடமிருந்து வாங்கிக்கொள்வாள். ஆனால், சில சமயம் அவள் வருமுன், வேலைக்காரப் பெண் வந்து வாங்கிச் சென்றுவிட்டால், அவளுக்கு ஏமாற்றமாய்ப் போகும்.

இரண்டு வருஷகாலம் இப்படி நடந்தது. பிறகு ஒருநாள் அந்தத் தபால்காரன் வரவேயில்லை. காரணத்தை விசாரித்தாள். அவனைத் தபாலாபீசிலேயே வைத்துக்கொண்டுவிட்டார்கள் என்று தெரிந்தது. பணக்காரப் பெண்ணுக்கு வருத்தமாயிருந்தது. இன்னொரு விஷயம்; அவனுக்குக் கல்யாணமாம். இதைக் கேட்டதும் வருத்தம் அதிகமாயிற்று. யாரை மணக்கப் போகிருன் என்று கேள்விப்பட்டதும், அவள் இருதயமே வெடித்துவிடும் போல் ஆயிற்று. அவன் இவர்கள் வீட்டில் இருந்த அந்த வேலைக்காரப் பெண்ணைத் தான் மணக்கப் போகிருன் என்று தெரிந்தது!

—'கஹானியா'



மலர்ச் செல்வம்

சுவேணீ காச்யப்

மலர் அழகு செய்வதும் மணம் தருவதும் மட்டும் அல்ல; மலர்களை அணிவதே உடம்புக்கும் பல நன்மை அளிக்கிறது.

வசந்தம் வந்தவுடன் இயற்கையின் சௌந்தரியம் பொங்கிப் பொழிகிறது. இளந்தளிர்களோடும் பல வண்ணப் பூக்களோடும் மரஞ் செடி கொடிகள் அழகை அள்ளி வீசுகின்றன. அவற்றின் அழகுக்கு ஒத்துப் பாடுகிறது குயில்களின் இனிய குரல். எல்லாவற்றையும் மீறிப் பூக்களின் நறுமணம் கமழ்ந்து இயற்கையைப் புளகாங்கிதம் அடையச் செய்கிறது.

பூக்கள் என்றால் ஆடவர், பெண்டிர் எல்லாருமே ஆசைப்படுகிறார்கள். ஆனால் பெண்களுக்குப் பூக்களின்மேல் மோகம் சற்று அதிகந்தான். ஒரு பெண் அதனாலேயே பூவைச் செடியில் பார்த்தவுடனே பறித்துத் தலையில் சூட்டிக் கொள்ளுகிறாள். இதுவும் வழக்கம் காரணமாக ஏற்பட்ட தென்றே சொல்லவேண்டும். எவ்வளவு யோசித்து அதன்பின் நம் முன்னோர் நமக்கு இந்தப் பழக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். மலர்களின் அழகில் மட்டும் அல்லாமல் பூக்களின் நிறங்களிலும் வாசனையிலும் மாறுதல் இருப்பதுபோலவே, அவை கொடுக்கும் பலன்களும் வேறு வேறாகவே இருக்கின்றன.

பொதுவாக, மலர்கள் உடலுக்குக் குளுமையைத் தருகின்றன. அவற்றைத் தலையில் அணிவதன் மூலம், வாசனையோடு அந்தக் குளுமையையும் நாம் பெறுகிறோம். உண்மையாக, மலர்கள் நமக்குச் செய்யும் சேவை கண்ணுக்குத் தெரியாத தியாகம். அவற்றின் அழகையும் வாசனையையும் நாம் பறித்துக்கொள்ளுகிறோம் என்பதில் கோபம் கொள்ளாமல், அதற்கு மாறாக நமக்குக் குளிர்ச்சியையும் உல்லாசத்தையும் அவை தருகின்றன!

சாதாரணமாக, மல்லிகை, ஜாதி, குவளை, செங்கழுநீர் முதலியவை நல்ல குளிர்ச்சியைத் தரும் பூக்கள். இவற்றைத் தாராளமாக உபயோகிப்பதால், தலைநோய், உஷ்ணத்தால் வரும் கண்ணோய், கண் கலக்கம் முதலியவை வராமல் விலகும். கண் சிவந்திருக்கும் போது, மல்லிகைப் பூவை அதிகமாகத் தலையில் வைத்துக்கொள்வது நல்லது.

செம்பருத்திப் பூவும் மருதோன்றிப் பூவும் தலைமயிர் கறுக்க உதவுகிறவை. ஆனால் யாருமே இந்தப் பூக்களைத் தலையில் வைத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும் இவற்றைக் கதம்பத்தோடு சேர்த்தாவது கட்டித் தலையில் வைத்துக் கொள்வது நல்லது. செம்பருத்திப் பூவை அதிகமாகத் தலையில் வைத்துக்கொள்ளுவதால், பல நோய்கள்கூடக் குணமாகும்.

அப்புறம் மகிழம்பூவும் சாமந்திப்பூவும் இருக்கின்றன.

மூலம்: ஆந்திர மகிளா (தெலுங்கு), மயிலாப்பூர், சென்னை-4.

இவை சற்றுச் சூடு செய்யும். ஆனால் இவை மலிந்த காலத்தில் குளிர்காலம் வந்துவிடுவதால், இவற்றால் அப்படி ஒன்றும் ஆரோக்கியத்துக்கு ஊறு நேராது. மரு, மருக்கொழுந்து (தவனம்), மாசிபத்திரி முதலிய இலைகளும் நல்ல மணத்தையும் அழகையும் கொடுக்கின்றன. இவற்றைப் பூக்களின் இடையில் கலந்து வைத்துக்கொண்டால், மற்றப் பூக்களின் அழகு இரட்டிக்கும். மருவை நன்றாக உலர வைத்துத் துணி மணிகளின் நடுவில் வைத்தால், அவற்றில் பூக்களின் வாசனை அடிக்கும்; தவிர, துணிகளைப் பாழாக்காது பூச்சிகள் ஒதுங்கும்.

ரோஜாப் பூ வெகு அழகானது; மென்மை வாய்ந்தது. இதைத் தலையில் அணிவதால் கூந்தல் பட்டுப் போல் ஆகுமென்று சொல்லுகிறார்கள்.

பூவைக் கொண்டு அலங்கரிக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன. எப்படி அலங்கரித்துக் கொண்டாலும் சரிதான், அவற்றால் ஏற்கனவே நமக்கில்லாத அழகு ஏற்படவேண்டும். உள்ள அழகையும் அந்த அலங்காரம் கெடுத்து விடக்கூடாது. நம் அலங்காரத்தால் பூவுக்கு அவமானம் ஏற்படக் கூடாது.

புஷ்பங்களைக் கொண்டு அலங்கரித்துக்கொள்வது இன்று நேற்று வந்த வழக்கமல்ல. காளிதாசன் காலத்தில் புஷ்பங்களுக்குப் பெண்கள் மிக முக்கியத்துவம் அளித்திருந்ததாகத் தெரிகிறது. கணவனிடம் சகுந்தலை போனபோது, அவளுடைய தோழிகள் அவளை மகிழம்பூ மாலைகளாலும் கரும்பின் இளந்தோகைகளாலும் அலங்கரித்ததாகச் சாகுந்தலத்தில் காளிதாசன் வருணிக்கிறான். குமார சம்பவத்தில் புது யௌவனம் பெற்ற பார்வதி அசோகு, கன்னிகாரம், சிந்துவாரம் என்னும் புஷ்பங்களையும் இளந்தளிர்களையும் சேர்த்து அலங்கரித்துக் கொள்கிறாள். இளந் தளிர்களைக் காதுகளிலும் மலையகத்திப் பூக்களைத் தன் முன்னுச்சியிலும் வைத்துக்கொள்கிறாள். கீழே விழும்படி தலையில் பூ வைத்துக்கொள்வதே அந்தக் காலத்து வழக்கம் போல் இருக்கிறது. சிவபெருமானைப் பார்வதி நமஸ்கரிக்கக் குனிந்தபோது அவள் தலை முன் பகுதியில் இருந்த பூக்களும் காதில் செருகியிருந்த தளிர்களும் நழுவி விழுகின்றன. அப்படியே அவள் அசைந்து நடக்கும் போது அவளுடைய கழுத்திலிருந்த மகிழ மாலையும் நழுவிக் கொண்டிருந்ததாம். இந்தத் தோற்றத்தில் பார்வதி சோபையுடன் காட்சியளிக்கிறாள்.

அந்த நாட்களில் அழகுக்காகவே பூங்கொத்தைக் கையில் பிடித்துக்கொள்வது பழக்கம் என்பது. உமாதேவி கையில் பிடித்துக்கொண்டிருக்கும் தாமரைப் பூவால் தெரிகிறது.

முன்காலத்தில் எல்லாருமே பூக்களை மாலையாகக் கட்டிக் கழுத்தில் அணிந்திருந்ததாகத் தெரிகிறது. ஜயதேவரின் சிருஷ்டியான ராதை அணிந்த மாலை, கிருஷ்ணன் மேல் கொண்ட விரகத்தால் கருகி விடுகிறது. அழகுக்காகவும் உல்லாசத்துக்காகவும் மாலை அணிவதோ பூவைப் பிடித்துக் கொள்வதோ இப்போது நமக்குப் பழக்கமில்லை. ஆனால் மேல்நாட்டில் இந்தப் பழக்கம் இருக்கிறது. கையில் பூங்கொத்துக்களைப் பிடித்துக்கொளவதும், உடைகளில் பூக்களைச் செருகிக்கொள்வதும் இன்றும் அவர்களுக்கு வழக்கமாக இருக்கிறது.

இன்று நாம் உடம்பெல்லாம் பூவாக அணிந்துகொள்ளாவிட்டாலும், தலையில் அழகாகப் பூக்களை வைத்துக்கொள்ளுகிறோம். பல விதத்தில் அவற்றை அணிந்து கொள்கிறோம். ஒற்றைப் பின்னலைத் தொங்கவிட்டுக்கொண்டு பூவையும் தளர்த்தியாகத் தொங்க விட்டாற்போல் வைத்துக்கொள்வது ஒரு வழக்கம். இரட்டைப் பின்னல்களில் இந்தப் புறத்திலிருந்து அந்தப் புறத்துக்கு வரும்படி 'கமான்' வளைவு மாதிரி வைத்துக்கொள்வது ஒரு முறை.

ஒற்றைப் பின்னல்மீதும் இந்தக் காதிலிருந்து அந்தக் காதுவரை வைத்துக்கொள்ளும் பழக்கம் இருக்கிறது.

ஆனால் இப்போது புதிதாக ஒரு விதம் வந்திருக்கிறது. 'பாயி பாயி' ஸினிமாவில் வரும் நிருபா ராய் மாதிரி ஒரு பக்கத்துக் காதுக்குப் பின்னுக வந்து கழுத்தில் தொங்கும்படி பூவை மடித்து வைத்துக்கொள்கிருர்கள். அப்புறம் பின்னலை எடுத்துக் கட்டிக்கொண்டு அதைச் சுற்றிப் பூ வைத்துக்கொள்ளும் விதம் கவனிக்கத் தக்கது. இதில் பல ரகம் உண்டு. பூவை எடுத்துக் கட்டைச் சுற்றிச் சிலர் வைத்துக்கொள்வார்கள்; எடுத்துக் கட்டுக்கு நடுவில் மட்டும் சிலர் வைத்துக்கொள்கிருர்கள். இந்தக் கட்டிலும் கட்டைச் சுற்றிக் கழுத்தின்மேல் ஒரு புறமும் தொங்கும்படி சிலர் வைத்துக்கொள்கிருர்கள்.

இந்த 'ஃபாஷன்'கள் எல்லாவற்றையும் எல்லாருமே செய்துகொண்டால் சோபிக்காது. ஒவ்வொரு முகத்துக்கு ஒவ்வொரு மாதிரிதான் பொருந்தும். இதைக் கவனித்துச் செய்துகொண்டால், அழகை அதிகப்படுத்திக்கொள்ளலாம். உடைக்குத் தகுந்தபடியும் பூவால் அலங்கரித்துக்கொள்ளலாம்.

ஆனல் புஷ்பங்களை அணிவது அழகுக்கு மட்டுமல்ல; அவற்றின் நறுமணத்தால் மனசுக்கு இன்பமும் உடலுச்கு ஆரோக்கியமும் கூடக் கிடைக்கின்றன.

கறுப்பு டிக்கட்

அமெரிக்காவில் இடாஹோ ராஜ்யத்தில் உள்ள மாஸ்கோ நகரத்தில் நடு ரஸ்தாவிலே நடக்கும் எவரைக் கண்டாலும், நகரத்துப் போலீஸார் ஒரு டிக்கட் கொடுத்தார்கள். அதற்குக் கறுப்பு பார்டர் போட்டிருக்கும். டிக்கட்டிலே, "எனக்குக் காயம் பட்டாலோ நான் செத்தாலோ தயை செய்து என்னை இந்த இடத்துக்கு அனுப்புங்கள்.." என்று அச்சிட்டிருக்கும். அதற்குக் கீழே, முக்கியமான சில ஆஸ்பத்திரிகள், சில இடுகாடுகள் இவற்றின் பெயர்கள் போட்டு அச்சிட்டிருக்கும். நடக்கிறவரின் பெயர், விலாசம், வயசு, ரத்த டைப், உறவினர்களின் பெயர் இவற்றையெல்லாம் குறிக்கக் காலி இடம் விட்டிருக்கும்.

போலீஸார் இந்த டிக்கட்டுகளை வழங்கத் தொடங்கிய சில நாளைக்கெல்லாம், ரஸ்தாவில் அஜாக்கிரதையாக நடப்பவரின் எண்ணிக்கை அடியோடு குறைந்துவிட்டது.

—'ஃபார்ம் ஜர்னல்'

ஆண் இல்லாத உலகம்!

இங்கிலாந்தில் ஸெயிண்ட் ஆல்பன்ஸ் என்ற இடத்து மாதர் சங்கத்தார் ஒரு நாடகம் நடத்த ஏற்பாடு செய்தார்கள். 'ஆண் இல்லாத உலகம்' என்பது நாடகத்தின் பெயர். ஏழு பெண்களும் ஒரு பூனையுந்தான் அதில் வரும் பாத்திரங்கள். கடைசியில் ஒரு விஷயத்தை அறிந்து அது காரணமாக மாதர் சங்கத்தார் அந்த நாடகத்தை நிறுத்திவிட்டார்கள். விஷயம், நடிக்கப் பயின்றிருந்த ஏழு பெண்களும் ஒரு பூனையும் கர்ப்பம் தரித்துவிட்டதுதான்.

—மிஸஸ் டான் ப்ரயாண்ட், 'காரொனெட்'.

கீழ் நாடெங்கும் பண்பாட்டு உறவைக் காணலாம் என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

ஜப்பானியப் பண்டிகை

ரஷீத் ஏ. முன்ஷி

ஜப்பானில் ஆண்டுதோறும் பல பண்டிகை, பருவங்களைக் கொண்டாடுகிறார்கள். இந்த மாதிரி விழாக்களின்போது எங்கும் விசித்திரமாக இருக்கும்; அந்த நாட்டு முறைப்படி வெகு காலமாக நடந்துவரும் பண்டிகைகள் இவை. ஸென்ஷோகு-ஸாய் (நெசவு விழா), ஷோகோ-ஸாய் (வியாபாரம், தொழில் சம்பந்தமான விழா), தேஜின், ஜிதாய், ஓ-ஹீனு என்பவை இவைகளில் முக்கியமானவை; ஜப்பான் முழுவதும் பிரபலமானவை.

ஜப்பானிலுள்ள கியோடோ, நாரா ஜில்லாக்களில் மிகவும் சிறந்த பழங்கோயில்கள் பல உண்டு. கியோடோவில் மட்டுமே 1417 பெரிய கோயில்களும், 403 சிறிய கோயில்களும் இருக்கின்றன. கோயில் எல்லைக்குள் 2891 குருமார்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்தக் கோயில்களை ஜப்பான் அரசாங்கம் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறது.

அற நூல்களையும், பல வகையான புண்ணியப் பொருள்களையும், கலைப் பொருள்களையும், வாள்களையும், சமயச் சடங்குகளின்போது அணியும் ஆடைகளையும் இன்றும் காணலாம். அவ்வப்போது கோயில்களில் தூய்மைப்படுத்தும் சடங்குகள் நடக்கும்போது இவைகளையெல்லாம் எடுத்துவைப்பார்கள். ஆண்டுக்கு ஒருதரம் நடக்கும் இந்த மாதிரி உற்சவங்கள் என்றால் ஜப்பானியருக்கு மிகவும் பிடிக்கும். அன்று நாடு முழுவதுமே விடுமுறையும் கொண்டாட்டமுமாக இருக்கும்.

எல்லாவற்றையும்விடப் புது வருஷ விழாவைத்தான் ஜப்பான் முழுவதும் மிகவும் உற்சாகமாகக் கொண்டாடுகிறார்கள். மக்கள் வீட்டு வாசலைப் பைன், மூங்கில், பிளம் முதலிய மரங்களின் இலை தழை கிளைகளால் அலங்கரிக்கிறார்கள்; ஏதாவது கொண்டாட்டம் அல்லது புது வருஷம் வந்துவிட்டது என்று இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

நெல் தாளோடு இலை தழைகளையும் லாப்ஸ்டர் என்ற மீனையும் இணைத்து இப்படி அலங்கரிப்பார்கள். இவர்களுடைய புராண வரலாற்றின்படி சூரியதேவியின் குகை என்ற புண்ணிய ஸ்தலத்தில் இப்படித் தோரணங்கள் தொங்க விடுவது வழக்கமாம். புது வருஷப் பிறப்பை அடுத்து வரும் நாட்கள் நீடிக்கவேண்டும் என்பதற்காக லாப்ஸ்டர் மீனையும் தொங்க விடுகிறார்களாம்.

பைன் கிளைகளால் அலங்காரம் செய்யும்போது அவற்றின்மேல் நல்லுபதேசங்கள் அடங்கிய வெள்ளைக் காகிதத்தைப் பதித்து வைப்பார்கள். பேய், பிசாசு அண்டாமல் நிலைபெற்று வாழவேண்டும் என்பதற்காகவே இப்படிக் காகிதம் பதித்துவைக்கிறார்கள். பிரபல கவியும் குருவுமான இக்யூ என்பவர் தம் நூல் ஒன்றில், ''புது வருஷப் பைன் கிளைகளே! எதிர்கால வாழ்வுப் பாதையில் தூரத்தைக் காட்ட நட்டிருக்கும் கற்கள் நீங்கள். களிப்பும் ஊட்டுகிறீர்கள்; துயரமும் தருகிறீர்கள்'' என்று கூறியிருக்கிறார்

வாசற்படியில் காணும் இந்த மூங்கில் - பைன் - பிளம் கிளை இலையால் ஆன தோரண அலங்காரம் எளிய முறையில் அமைந்திருந்தாலும் கண்ணைக் கவரும்படி இருக்கிறது. இவைகளை வைக்

காப்பிரைட்: இந்தியன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஜூன் '58), சென்னை-1.

சோல் புரியினுல் ஒன்ருேடு ஒன்று இணைத்த அழகிய பூந்தொட்டிகளில் வைத்திருப்பார்கள். பைன் ஆண்மையையும் உறுதியையும் நீடித்த வாழ்வையும் குறிக்கும்; மூங்கில் நேர்மை, ஒழுக்கம் இவைகளைக் குறிக்கிறது; பிளம் தைரியத்துக்கு அறிகுறி.

ஜனவரி முன்பாதியில் கொண்டாடும் இந்தப் பண்டிகை நாள் முடிந்ததும் இவைகளை எடுத்துவிட்டு புறத்தில் கொளுத்துவார்கள். பிறகு அந்தச் சாம்பலை நீளநீள வரிசையாகக் குவித்துவைப்பார்கள். பேய், பிசாசு உபத்திரவம், கெடுதல் ஏதும் நேராதிருப்பதற்கே இப்படிச் செய்கிருர்கள். பண்டிகை நடக்கும் இரண்டு வாரமும் கோபே, ஒசாகா என்ற ஊர்களில் கடைத்தெருவில் குப்பல் நெரிபடும். தெருவெல்லாம் விளக்கு வெளிச்சம் பிரமாதமாக இருக்குப். சின்னக் கடைகள்கூட வெகு அழசாகவும் ஒழுங்காகவும் காட்சியளிக்கும். அப்போதுதான் வியாபாரம் மும்முரமாக இருக்கும். அக்கம் பச்கம் கிராமவாசிகள் தங்கள் நெருங்கிய உறவினர், நண்பர்கள் இவர்களுக்காகச் சாமான் வாங்கிச் செல்வார்கள்.

தைமாரு, தகஷீமாயா, ஸோகே, மாடுபுத்சு ஸ்டோர்சுகள் என்ருல் வெகு பிரசித்தம். அங்கே காணும் பல பொருள்கள் சண்ணைக் கவரும். வாலிபர்கள் முதியவர்கள், ஏழை பணக்காரர் எல்லாருமே அங்கே வருவார்கள்.

டிசம்பர் 31-ஆம் தேதி இரவு ஜப்பானியர்கள் 'மைரி' என்று ஒரு சடங்கு கொண்டாடுவார்கள். வேலை முடிந்ததும் வீட்டுக்குப் போய்ச் சேருவார்கள்; பிறகு அண்டையிலுள்ள கோயிலுக்குப் போய், மறுநாள் புதுவருஷ தினத்தன்று அடுப்பு மூட்ட அங்கிருந்து அக்கினி எடுத்து வருவார்கள். கியோடோ பகுதியில் கிராமவாசிகள் யசாகா கியோன் கோயிலுக்குப் போய் அங்கிருந்து வைக்கோல் புரியில் அக்கினி எடுத்துவருவார்கள். கோயிலில் தூண்களிலே பெரிய பெரிய வாணலிகள் கட்டித் தொங்கவிட்டிருக்கும். அவற்றில் எப்போதும் தீ சொழுந்துவிட்டு எரிந்துகொண்டேயிருக்கும்.

'மைரி' என்னும் இந்தச் சடங்கு வெகு கவர்ச்சியாக இருக்கும். ஜப்பானியர்கள் கோயிலுக்குப் போய்த் திரும்பிவந்து, 'புது வருஷத்தை வரவேற்க' அவசரம் அவசரமாக முந்திக்கொள்வார்கள்.

ஜப்பானியச் சக்கரவர்த்தியும் அவருடைய குடும்பத்தாரும் தங்கள் அரண்மனை உத்தியானத்தைச் சேர்ந்த பகுதியிலே 'கென்ஷி-ஸாய்' என்ற இந்தப் புது வருஷ வைபவத்தைக் கொண்டாடுவார்கள்.

புது வருஷப் பிறப்பன்று ஜப்பான்யர்கள் உல்லாசமாகப் பொழுதுபோக்குவதற்கேற்ற பல இடங்களுக்குப் போய் வருவார்கள்; கோபே, தகரஸுகா, ஒஸாகா இந்த ஊர்களில் உள்ள தியேட்டர்களுக்கும் ஏராளமான பேர் செல்வார்கள். அப்போது பலவர்ண அமைப்புள்ள 'கிமோனே' (ஜப்பானிய உடை) உடுத்துப் பூஞ்சோலை, பொம்மலாட்டம், சினிமாக் கொட்டகை இங்கெல்லாம் போவார்கள்.

அதிலும், பெண்கள் பண்டிகையின்போது மிகவும் எழிலுடன் விளங்குவார்கள்; குழநதைகளை அழைத்துக்கொண்டு அக்கம் பக்கத்தில் இருக்கும் கோயில்களுக்குப் போவார்கள். அழகிய கிமானே, டாபி, கேடா என்ற உடை உடுத்திருப்பார்கள். கூந்தலைக் கொண்டை போட்டும், வளைத்தும் அலங்காரம் செய்துகொள்வார்கள். மணம் ஆகாத பெண்கள் தலையில் பளிச்சென்று விளங்கும் செயற்கை மலர்களையும் ரிப்பன்களையும் அணிந்துகொள்வார்கள்.

புதுவருஷக் கொண்டாட்டத்தின்போது 'ஷட்டில்காக்' என்ற சிறகுப் பந்தாட்டம் ஆடுவார்கள். குழந்தைகள் தெரு மூலையிலோ மைதானங்களிலோ கும்பலாகக் கூடி, பாட்டில்டோர் என்ற மட்டையினுல் காலை முதல் பொழுது சாயும்வரை பந்தாடுவார்கள்.

ஜனவரி 20 அல்லது அந்த மாதக் கடைசியில் இந்தப் பந்து மட்டைகளை முறிக்கும் திருநாள். இதை 'ஹகோய்டா வாரி' என்பார்கள். அன்று மட்டைகளை அடிக்கிற வேகத்தில் அவை பிய்ந்துவிடவேண்டுமாம்; அதோடு அந்த வருஷத்துக்கு இந்த ஆட்டம் நின்றுவிட வேண்டும்.

ஜப்பானியர் இந்தப் பந்தாட்டம் ஆடும்போது ஒரே பரபரப்பாக இருக்கும். வர்ணந் தீட்டிய சின்னச் சிறகுப் பந்துகளை அவர்கள் மேலே அடிக்க, அவை காற்றில் மிதக்கும்போது அழகிய மலர்களைப்போல் காட்சியளிக்கும். இது உடற்பயிற்சியாக இருப்பதோடு எல்லாரும் கண்டுகளிக்கும் பொழுதுபோக்குமாகும்.

புதுவருஷப் பிறப்புத் தினம் அட்சராப்பியாசம் நடத்துவதற்கும் சித்திரம் எழுதக் கற்பதற்கும் ஏற்ற நாள். இதை ஜப்பானியர் 'காகிஸோம்' என்பாாகள். பிற்காலத்தில் எழுத்துத் திறமையையும் கலையில் ஆர்வத்தையும் ஊக்கவேண்டும் என்றே அந்தச் சுப தினத்தில் இப்படித் தொடங்குகிறார்கள். எழுத்து, இலக்கியம் இவற்றின் தெய்வம் 'மிசி ஸனே சுகவர்த்'. ஜப்பானியர் இந்தத் தேவனை மிகவும் பயபக்தியோடு வழிபடுகிறார்கள். கியோடோவில் கிடானோ ஆலயம் என்று இந்தத் தெய்வத்துக்குக் கோயில் ஒன்று இருக்கிறது. 1938-ஆம் ஆண்டு 42 வயசு ஆண்களுக்கும், 33 வயசுப் பெண்களுக்கும் நல்ல பலன் தராததாம்; ஆகவே, அவர்கள் அப்போது கோயிலுக்குப் போய்த் தங்களுக்கு நன்மை ஏற்பட வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். கிடானோ ஆலயத்தில் வழிபட வரும் பக்தர்களுக்குப் பொங்கலும், பிளம் பூங்கொத்தும் பிரசாதமாக வழங்குவார்கள்.

பிளம் பூங்கொத்துக்களுக்கு இவ்வளவு மகிமை ஏற்பட்டதற்குக் காரணம் சங்கவரர் (புத்தர்) காட்டில் அலைந்தபோது அது அவருக்கு மிகவும் பிடித்த மலராக இருந்ததாம். கொஞ்சகாலமாக ஜப்பானில் ஸென்ஷோகு-ஸாய் (நேசவுப் பண்டிகை), ஷோகோ - ஸாய் (வியாபாரம், தொழில் சம்பந்தமான பண்டிகை) இந்த இரண்டையும் விசேஷமாகவே கொண்டாடுகிறார்கள்: ஸென்ஷோகு ஸாய் அன்று நெசவுத் தேவியை வழிபடுவார்கள். ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதம் இந்தப் பண்டிகை கொண்டாடுவார்கள்.

அன்று எங்கும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். ஜப்பானிய கைஷா(வேசி)ப் பெண்கள் (கி. மு. 660) ஜோகோ வம்சம், (கி. பி. 710—784) நாராவம்சம், (கி. பி. 890—1185) ஹியான் வம்சம், (கி. பி. 1192—1333) காமகுரா வம்சம், (கி. பி. 1573) முரோமசி வம்சம், (கி. பி. 1574) மோமோயாமா வம்சம், (கி. பி. 1603—1868) எடோவம்சம் இவைகளைச் சேர்ந்த மன்னர்கள் ஆண்ட காலத்து ஆடைகளை உடுத்து வீதியில் அணிவகுத்துச் செல்வார்கள்.

அங்கே டிராம் வண்டிகள், படகுகள் இவைகளையும் ஆடைகளால் அழகாக அலங்கரித்திருப்பார்கள். நகர வீதிகளில் இவை செல்லும்போது பார்க்க வேண்டும்.

நூற்றுக்கணக்கான மக்கள் வழியோரம் எல்லாம் நின்றிருப்பார்கள். எங்கும் கொண்டாட்டமும் மகிழ்ச்சியுமாக இருக்கும்.

ஷோகோ-ஸாயை (வியாபார, தொழில் பண்டிகை) நவம்பர் மாதம் மிகவும் ஆடம்பரமாகவும் பயபக்தியோடும் கொண்டாடுவார்கள். தொழில் துறையில் முனைந்திருப்பவர்களுக்கும் நகர வர்த்தகர்களுக்கும் விசேஷமான பண்டிகை இது. அவர்கள் நூற்றுக்கணக்கில் கூட்டங் கூட்டமாகப் புறப்பட்டு, கையில் தேசீயக் (ஹீனமாரு) கொடியும், காகித விளக்குக் கூண்டும் ஏந்திக்கொண்டு செல்வார்கள். பல தொழில் ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் வர்த்தக சங்கப் பிரமுகர்களும் ஒஸாகாவிலுள்ள சுமியோஷி கோயிலுக்கும், நிஷிநோமியா எபிசு என்ற பாக்கியதேவன் கோயிலுக்கும் செல்வார்கள். ஜப்பானில் சில

பகுதிகளில் அடிக்கடி இந்தப் பாக்கியதேவன் கோயிலுக்குச் சென்று மக்கள் தங்களுக்கு அருள் புரிய வேண்டுமென்று வேண்டிக் கொள்வார்கள். உள்ளூர்க் கோயில் களின் ஆதரவில் கைஷாப் பெண் கள் ஊர்வலம் வருவார்கள்; அதோடு தெய்வப் பல்லக்கைப் பார்க்க அநேகம் பேர் வருவார் கள்; இப்படிப் பல வண்ணங்கள் பொலிய அன்று எங்கும் குதூகல மும் கொண்டாட்டமுமாக இருக் கும்.

கிராமாந்தரங்களிலிருந்தும் ஏராளமான பேர் ஷோகோ-ஸாய் பண்டிகையில் கலந்துகொள்வார் கள்; திரும்பும்போது ஷிண்டோ குருமார்கள் தரும் தாயத்துக்களை வாங்கிச் செல்வார்கள்.

ஆண்டுதோறும் புது வருஷப் பிறப்பன்று - அதுவும் ஜனவரி 2-ஆம் தேதி - சில்லறை வியாபாரி கள் 'ஹத்சுனி' என்ற பண்டிகை கொண்டாடுகிறார்கள். அன்று தேர்ந்தெடுத்த ஜவுளித் தினுசுகளி லிருந்து கொஞ்சம் எடுத்துக் கொண்டு மோட்டார் - டிரக்குகளி லும் லாரிகளிலும் சுற்றுவார்கள். புது வருஷம் வந்ததை அறிவித்து மகிழ்ச்சியுடன் கூவிக்கொண்டே செல்வார்கள்.

கடைக் குமாஸ்தாக்களும் ஊழி யர்களும் சிறு சிறு கோஷ்டியாக இந்த ஊர்வலங்களில் கலந்து கொண்டு கடைக்குத் திரும்புவார் கள். அந்த ஆண்டு முழுவதும் வியா பாரம் செழித்தோங்க வேண்டும் என்பதே அவர்கள் கோரிக்கை.

அமிர்த வியாபாரி

முச்சந்தி வீதியிலே நின்றுகொண்டு, உச்சக் குரலில் கத்திக்கொண்டிருந்தான் நாடோடி மருந்து வியாபாரி.

''இதோ பாருங்கள். இந்த மூலிகைதான் அமிர்தம். இதை யார் உண்டு வந்தாலும், வெகு காலம் ஆரோக்கிய மாய் வாழலாம். என்னையே கவனியுங்கள். எனக்கு வயசு முந்நூறு ஆகியும் எவ்வளவு சுகமாய் இருக்கிறேன், பாருங் கள்....'' என்றான்.

கூட்டத்தில் இருந்த ஒருவர் ஆச்சரியத்துடன், வியா பாரியின் வாலிபத் துணைவனைப் பார்த்து, ''இவருக்கு உண்மை யிலே இவ்வளவு வயசு ஆகிவிட்டதா?'' என்று கேட்டார்.

அவன் மிக்க அசட்டையாக, ''அதென்னவோ, எனக்குத் தெரியாதுங்க. நான் அவர் கிட்ட வந்து நூத்தம்பது வருஷந்தான் ஆகுது'' என்றான்.

—'ஸெண்ட்ரல் ரெயில்வே மகஸீன்'

கடவுளின் உறைவிடம்

கருணையும் மன்னிக்கும் தன்மையும் சாந்தியும் நிறைந்த வனின் இருதயமே கடவுளின் உறைவிடம்.

—ஸ்வாமி ராமதாஸ்

போலி உபதேசம்

அஞ்ஞானத்தில் ஆழ்ந்திருந்தும் தமக்கு எல்லாம் தெரியு மென்னும் அகங்காரத்தினாலே தாம் கெடுவதுமன்றிப் பல பேர் பிறருக்கு உபதேசம் செய்யவும் புகுவார்கள்; இதனால் குருடன் குருடனுக்கு வழி காட்டினாற்போல், இருவரும் பள்ளத்தில் வீழ்வார்கள்; அவ்வளவே.

—ஸ்வாமி விவேகானந்தர்

புதிய வகையில் லாபகரமான புதிய ஜாதி மரம் ஒன்று தயாராகியிருக்கிறது!

புதுப் பட்டு

எஃப். ஸி. சகதேவன்,
இ. ஆர். கோபாலகிருஷ்ணன்

கேரளத்தைச் சேர்ந்த பட்டாம்பியில் சமீப காலத்தில் புது வகைப் பட்டு மரத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இது ஒவ்வொரு குடியானவனுடைய தோட்டத்திலும் அவசியமாக இருக்க வேண்டிய மரம். தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சில பகுதிகளில் சர்வசாதாரணமாகத் தென்படும் இந்த மரம் விதைகளின் மூலம் பயிராகக் கூடியது.

இந்தப் பட்டு மரம் பல முறைகளில் உபயோகப் படுகிறது. முரட்டுப் பட்டு வகையை முக்கியமாகப் பாய்கள் பின்ன உபயோகிக்கிறார்கள். சோபாக்களுக்கு மெத்தை தைக்கவும் இது பயன்படுகிறது. குளிர் காலத்துப் போர்வைகளுக்கும் இதை உபயோகிக்கிறார்கள். இப்படியெல்லாம் கார், விமானம், ரேடியோ முதலியவற்றுக்கு இந்தப் பட்டு உபயோகப்படுகிறது. இந்த மரத்தின் லேசான கட்டை நெருப்புக் குச்சிகள் செய்யவும், பொம்மைகள் செய்யும் தொழிலுக்கும் மிக்க உபயோகமாக இருக்கிறது.

சமசீதோஷ்ணப்பிரதேசங்களில் இந்த மரம் நன்றாக வளர்கிறது. இந்தியாவில் சிவப்புப் பட்டு மரம் என்றும் வெள்ளைப் பட்டு மரம் என்றும் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன.

சிவப்பு மர வகை, கேரளத்தில் அதிகமாக வளர்கிறது. சாதாரணமாக இது 20 முதல் 120 அடி உயரம் வரையில் வளர்கிறது. அடி மரத்தின் அகலம் சுமார் இரண்டு அல்லது மூன்று அடி. தண்டும் கிளைகளும் சிறியவையானாலும் தடித்திருக்கும். சங்கைப் போன்ற வடிவில், நுனி சிறுத்திருக்கும். பூக்கள் ஆழ்ந்த சிவப்பாயிருக்கும். நாற்று நட்டு ஏழெட்டு ஆண்டுகளுக்குபின் காய்க்கத் தொடங்கும். காய்கள் இடையிடையே வெடிப்பதும் உண்டு. அவை கரும்பழுப்பு நிறமாக இருக்கும். அந்தக் காய்கள் சில சமயம் மரத்தில் இருக்கும் போதே வெடித்துவிடும். அதனால் காய்க்குள் இருக்கும் இலவம் பஞ்சுபோன்ற மெல்லிய கச்சாப் பட்டு நிறையக் காற்றில் பறந்து போய் நஷ்டமாகிவிடும். சிவப்பு நிற மரங்களில் உள்ள குறைகளுள் ஒன்று இது.

வெள்ளைப் பட்டு வகை மரத்தைக் 'காபோக' என்று சொல்கிறார்கள். இதுவும் சிவப்புப் பட்டு மரத்தைப் போலவே உயரமாக வளரும். இதன் கிளைகள் நீளமாக இருக்கும். தண்டு லேசாக இருக்கும். பூக்கள் வெள்ளையாக இருக்கும். இது சீக்கிரம் பலன் தரும். ஆனால் இதன் விதை



காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்: 6-4-'58), ஹுப்ளி.

நிறைந்த காய்கள் மரத்திலேயே வெடிப்பதில்லை. இது இந்த மரத்தின் சிறந்த குணம் என்று சொல்லலாம். இந்த மரம் மூன்றே வருஷத்தில் பலன் கொடுக்கும். எவ்வளவுதான் பழுத்து விட்டாலும் காய்களைக் கீழே இறக்கித்தான் பட்டைப் பிரித்து எடுக்க வேண்டும்.

பட்டாம்பியில் இருக்கும் விவசாய ஆராய்ச்சியில் இந்த வகை மரங்களுள் 1951-இல் புதிய ஜாதி ஒன்றைத் தயாரித்திருக்கிறார்கள். அதைச் சென்னை ராஜ்யத்தில் விவசாயப் பண்ணை பலவற்றில் நட்டார்கள். பட்டாம்பியில் 1951-இல் சாலையோரங்களில் இதன் நாற்றுக்களை நட்டார்கள். அவை மிக நன்றாய் வளர்ந்தன. 1954-இல் (அதாவது, மூன்றே வருஷத்தில்) இந்த மரங்களில் பூக்கள் பூத்தன. இப்படி இவை நட்ட மூன்று வருஷ காலத்தில் 12 அடி உயரம் வளர்ந்த அளவில் பூக்கும்.

இந்தப் புதிய ஜாதி மரங்கள் அதிக உயரமாக வளர்வதில்லை. ஆறு வருஷத்துக்குப் பின்னும் 20, 25 அடிக்கு மேல் வளர்வதில்லை. அதனால் மரத்திலிருந்து பழங்களைப் பறிக்கச் சௌகரியமா யிருக்கிறது. நடுத் தண்டும் கிளைகளும் வளைந்தும் சுருண்டும் தென்படும். பூக்கள் வெள்ளையாக இருக்கும். காய்கள் மிக நீளம்; மற்ற ஜாதி மரங்களின் காய்கள் 5 அல்லது 6 அங்குல நீளமே இருக்கும். இந்த ஜாதி மரத்தின் காய்கள் மட்டும் 10 அல்லது 15 அங்குல நீளம் இருக்கின்றன.

'காபோக' என்னும் வகையின் காய்களைப்போல் இதன் காய்கள் மரத்திலே வெடிப்பதில்லை. சுமார் ஆறு வருஷகாலம் வளர்ந்த மரத்தில் 250 காய்களைக் காணலாம். 'காபோக' என்னும் வகையில் 150 காய்கள் மட்டுந்தான் இருக்கும். சிவப்புப் பட்டு மரத்தில் 250 முதல் 300 காய்கள் வரையில் பார்க்க வேண்டுமானால், குறைந்தது 15 வருஷமாவது பிடிக்கும்.

இந்த மூன்று ஜாதி மரங்களிலும் உண்டாகும் பட்டில் புதிய வகையில் கிடைக்கும் பட்டும் விதைகளுமே அதிகமா யிருக்கின்றன. சிவப்புப் பட்டு மரத்தின் பதப்படுத்தாத பட்டு, மஞ்சள் கலந்த வெண்மையாக இருக்கும். வெள்ளை ஜாதி மரத்தின் பதப்படுத்தாத பட்டு, சாதாரண வெள்ளையாகவே இருக்கும். ஆனால் புதிதாகக் கண்டு பிடித்த மரத்தின் பட்டு, தூய வெள்ளையாய் இருக்கிறது. இதனாலும் புதிய மரத்தின் பட்டுச் சிறந்ததென்று மதிக்கிறார்கள்.

தரத்தில் இந்தப் புது ஜாதி மரத்தின் பட்டு, சிவப்பு மரப் பட்டைப் போன்றது; வெள்ளை ஜாதியை விடச் சிறந்தது. சீக்கிரம் வளர்வதிலும் அதிகமாகப் பட்டுக் கொடுப்பதிலும் இதுவே சிறந்தது. அதனால் ராஜ்யத்தின் எல்லா விவசாயப் பகுதியிலும் இது அவசியமாக இருக்க வேண்டும்.

ஆனந்த முறிவு!

மௌனமாக, முகத்திலே துயரச் சாயை படர, ஓட்டலிலே உட்கார்ந்து ஏதோ பானத்தைப் பருகிக்கொண்டிருந்தான் ஒருவன்.

''நண்பா, ஏன் இவ்வளவு விசனமாயிருக்கிறாய்?'' என்று விசாரித்தான் அவனுடைய நண்பன்.

''மனைவியோடு தகராறு.''

''என்ன தகராறோ?''

''முப்பது நாள் வரைக்கும் என்னோடு ஒரு வார்த்தையும் பேசுவதில்லை என்று அவள் சபதம் செய்துவிட்டாள்.''

''நல்லதாய்ப் போச்சு. உன் பாடு குஷி.''

''அது சரிதானப்பா. இன்று கடைசி நாள்!'' என்றான் முதல் ஆசாமி.

—'பேஜெண்ட்'

ருஷியக் கதை:

பைரியின் பாட்டு

மாக்ஸிம் கார்க்கி

டால்ஸ்டாய்க்குப் பிறகு மிகப் பிரசித்தி பெற்ற ஆசிரியர் கார்க்கி. இவர் பிறந்தது 1878-இல்; கால மானது 1936-இல். ருஷியப் புரட்சித் தலைவர்களில் ஒருவர். போல்ஷிவிக்கர்களை முதலில் அரை மன சாயும் பின்னால் முழுமனசாயும் ஆதரித்தார்.

எல்லையற்றுப் பரந்த கடல்; கரையோரத்திலே மெல்ல மெல்ல அலை மோதியது; தூரத்திலே நீல நிலவில் மூழ்கிச் சலன மற்று உறங்கியது. தென்திசை நீல அடிவானத்திலே, அது மிருதுவாய் வெள்ளிபோல் மின்னி விண்ணோடு இணைந்து ஆழ்ந்து உறங்கியது. ஆகாயத்திலே இயக்கமற்று மெல்லிய கம்பளிபோல் மிதந்த மேக படலம் அந்தக் கடலிலே பிரதி பலித்தது. அந்த மேகத்திரைக்குப் பின்னே தங்கநிற நட்சத்திரக் கோலங்கள் மங்கலாய் மின்னின. சோகக் குறிப்புடன் கரையை அமைதியற்று மோதும் கடல் அலைகள் கிசுகிசுக்கும் சேதி என்ன வாய்த்தான் இருக்கும் என்று கேட்க விரும்பி வானமே குனிந்தது போல் தோன்றியது அந்தக் காட்சி. காற்றடித்து முறிந்த மரங்கள் போர்த்த மலைகளின் நெளிந்து வளைந்த சிகரங்கள், அந்தரத்து நீலப்பரப்பிலே நிமிர்ந்து நின்றன. அவற்றின் முரட்டு உருவங்களை நயப்படுத்துவது போல், தென் திசை இரவின் இருள்கரங்கள் அன்பு கனியத் தடவிக்கொடுத்தன.

மலைகள் ஏதோ ஆழ்ந்து சிந்தனை புரிந்துகொண் டிருந்தன. மலைச் சிகரங்களுக்குப் பின்னே உதய மாகச் சித்தமாகிக்கொண் டிருக்கும் சந்திரனின் நிலவொளி எங்கும் பரவி, மர்ம மோனம் ஒன்று சூழ்ந்திருந்தது. அதைக் கலைக்க வந்த ஒலிகளையெல்லாம் - பொங்கி வரும் பசிய கடல் அலைகளின் ஓசையையும், அவை ஓயாது வாரியடித்த நீர்த்திவலைகளின் ஒலியையும், அவற்றின் நுரை எழுப்பிய பெரு மூச்சையும் - அடக்க விரும்பியது போல், அலைகளின்மீது அந்த மலைகளின் கோல உடைபோன்ற நிழல்கள் படிந்தன.

"அல்லாஹோ அக்பர்!" என்ற கோஷம் மென்மையான தொனியில் நாதிர் ரஹீமின் உதடுகளிலிருந்து வெளிவந்தது. அவன் கிரிமியா நாட்டு ஆயர்குலத்தினன். வயசானவன். உயரம். தலை நரைத்திருந்தது. தெற்கத்தி வெயில் பட்டு உடல் பழுத்திருந்தது. ஒல்லி. புத்திசாலிக் கிழவன்.

நிழல் கவிந்து பாசி படர்ந்திருந்த பிரம்மாண்டமான பாறை ஒன்றின் அருகிலே மணல் பரப்பில் அவனும் நானும் படுத்திருந்தோம். ஏதோ ஒரு பெரிய மலையிலிருந்து பிளவுண்டு பிரிந்து வந்த அந்தப் பாறை, சோகச் சாயையுடன் சாம்பல் நிறமாயிருந்தது. அதன் ஒரு புறத்திலே கடல் புல்லும் நீர்ப் பூண்டும் தொகுத்த தோரணம் போல் வளைந்து, கடலுக்கும் மலைத் தொடருக்கும் இடையே இருந்த குறுகிய மணல்பரப்புடன் இந்தப் பாறையைக் கட்டிவைத்தது மாதிரி காட்சியளித்தன. எங்கள் முகாமில் எரிந்த கணப்பின் தீக்கொழுந்து, கடற்கரைக்கு ஒளி கொடுத்தது. பழமையான அந்தக் கடற்கரையில் காயமுற்ற தழும்புகள்போல் குறுக்கும் நெடுக்குமா யிருந்த வெடிப்புக்களின்மீது அந்தத் தீக்கொழுந்து அசைந்தாடிய

மூலம்: ஸோவியத் லாண்ட் (ஆங்கிலம்: 5-4-'58), ஸதர் பஜார், டில்லி.

தால் விழுந்த நிழல்கள் நர்த்தனம் புரிந்தன.

ரஹீமும் நானும் அப்போது தான் பிடித்திருந்த மீனைப் பானையில் இட்டு வேகவிட்டுக்கொண்டிருந்தோம். அந்த வேளையில் நாங்கள் இருவரும் இருந்த மனநிலையில், எங்களுக்குச் சகல பொருள்களும் தெளிவாகவும் அருள் பொதிந்தும் அறிய எளிமையாகவும் இருப்பது போல் புலப்பட்டன. எங்கள் உள்ளம் எக்கவலையும் இல்லாது களங்கமற்று இருந்தது. இப்படியே இங்கே படுத்துக் கனவு கண்டு கொண்டிருக்க நாங்கள் விரும்பினோம்.

கடல் அலைகள் கரையை மோதின. எங்கள் கணப்பருகே தாங்களும் வந்து குளிர் காயக் கெஞ்சுவதுபோல், மென்மையாய் அவை ஓசை எழுப்பின. எப்போதோ ஒவ்வொரு சமயம் நிதானமான இந்த ரீங்காரம் குலைந்து ஓசை வலுத்து விளையாடுவதுபோல் தோன்றியது. அது எங்கள் காலடிவரைக்கும் ஊர்ந்து வந்த துணிச்சலான அலை ஒன்றின் ஒலிதான்.

கடலைப் பார்த்தபடி ரஹீம் படுத்திருந்தான். முழங்கையை மணலில் புதைத்து, கையைத் தலைக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டு, நிழல் கவிந்த தொலைவை நோக்கியபடி அவன் என்னவோ சிந்தனை செய்துகொண்டிருந்தான். ஆட்டுத்தோல் தொப்பி நழுவி அவனுடைய பின் தலையை மூடியிருந்தது. சன்னமாய்ச் சுருக்கங்கள் விழுந்திருந்த நெற்றியில் சுகமான கடல்காற்று விசிறியது. நான் கேட்கிறேனா இல்லையா என்றுகூடக் கவனிக்காமல் தத்துவமாய்ப் பல கருத்துக்களை ஏதோ கடலுடன் பேசுகிறவன்போல அவன் சொல்லிக் கொண்டிருந்தான்.



''கடவுளுக்கு விசுவாசமாய் ஊழியம் புரிகிறவன் சொர்க்கத்துக்குப் போகிறான். கடவுளுக்கும் நபி நாயகத்துக்கும் ஊழியம் புரியாதவனோ? அவன் அதோ அங்கே - அந்த நுரையிலே - இருக்கலாம்; அல்லது அதோ நீரிலே தென்படும் அந்த வெள்ளிப் புள்ளிகளாக இருக்கலாம். யார் கண்டார்?''

கறுத்து விம்மிய கடல் வர வரப் பிரகாசமாயிற்று; அதன் மேல்பரப்பில் அங்குமிங்குமாய்ச் சிதறிய நிலவொளிப் பட்டைகள் விழுந்தன. கரடுமுரடான மலைச் சிகரங்களுக்குப் பின்னாலிருந்து சந்திரன் எழுந்து வந்து, கனவு மயக்கத்தோடு, தன் தண்ணொளியைக் கடற்கரைமீதும், எங்களை அடுத்திருந்த பாறைமீதும், தன்னை வரவேற்கச் சிறிது பெருமூச்செறிந்து எழுந்த கடல்மீதும் சொரிந்தது.

''ரஹீம், எனக்கு ஒரு கதை சொல்லேன்'' என்று கிழவனைக் கேட்டேன்.

அவன் தலை நிமிராமலே, ''எதற்காக?'' என்று கேட்டான்.

''நீ சொல்லும் கதைகளைக் கேட்டால், எனக்கு இன்பமாயிருக்கிறது; அதற்காகத்தான்.''

''அத்தனை கதைகளையும் உனக்குச் சொல்லிவிட்டேன். இனி வேறு கதை எதுவும் எனக்குத் தெரியாது.''

தன்னை நான் கெஞ்சிக் கொஞ்ச வேண்டும் என்பது அவன் ஆசை. நான் அப்படியே செய்தேன்.

''வேண்டுமானால், நான் ஒரு பாட்டுப் பாடுகிறேன்'' என்று அவன் சம்மதித்தான்.

அவனுடைய பழைய பாடல்களில் ஒன்றைக் கேட்பதென்றால், எனக்கு மிகவும் மகிழ்ச்சிதான். ஏறியிறங்கிய குரலில், பழமையான பண்ணின் இனிமையைப் பாதுகாக்கும் பாணியில் அவன் ஒப்பிக்கத் தொடங்கினான்.

1

உன்னத மலை மேலே பாம்பொன்று ஊர்ந்தது. பனிப்படலம் கவியக் கடலை நோக்கி வாய் திறந்த பாறைப் பிளவு ஒன்றில் அது வந்து தங்கியது.

வானத்தின் உச்சியிலே, சூரியன் ஜொலித்துக்கொண்டிருந்தான். மலைகள் எறிந்த உஷ்ணப் பெருமூச்சு வானை நோக்கி எழுந்தது; கீழே கடலலைகள் பேரிரைச்சலுடன் பாறைகளை மோதின.

பாறைப் பிளவு வழியே இருளையும் பனியையும் கிழித்துக்கொண்டு, கற்களை உருட்டியடித்துக்கொண்டு, கடலை நோக்கி நதியொன்று அதிவேகமாகப் பாய்ந்தது.

நுரைகள் மிதக்க விறுவிறுப்பாய் வெண்மையாய்ப் பாறையைப் பிளந்துகொண்டு ஆத்திரக் கூச்சலுடன் கடலிலே அது குதித்தது.

பாம்பு சுருண்டு படுத்துக் கிடந்த இடத்தருகே திடீரென்று இச்சமயம் ஒரு பைரி, சிறகிலே ரத்தம் தோய மார்பிலே காயத்துடன் வந்து விழுந்தது.

பூமியிலே வந்து மோதியபோது அது ஓலமிட்டது; திக்கற்ற சோகத்துடன் இறக்கையைப் படபட என்று அடித்துக்கொண்டு பாறையிலே கிடந்தது.

பாம்பு நடுநடுங்கி அம்புபோல் பாய்ந்தோடியது. ஆனால், 'அந்தப் பட்சி சாகுந்தறுவாயில் இருக்கிறது; இரண்டொரு நிமிஷத்திலேயே செத்துவிடும்' என்று சட்டென்று அறிந்துகொண்டது.

எனவே, பாம்பு திரும்பிக் காயமுற்ற பட்சியிடம் ஊர்ந்து சென்று, வெகு துணிச்சலாக அதன் காதில் உஸ்ஸென்று கத்தியது:

''இவ்வளவு சீக்கிரமாய்ச் சாவு வந்துவிட்டதோ உனக்கு?''

''இவ்வளவு சீக்கிரமாய்த்தான்; ஆமாம். ஆனால், நான் வாழ்ந்து விட்டேன்; இன்பத்தைச் சுவைத்து விட்டேன்; நன்றாய்ப் போராடி விட்டேன்; வானத்திலே பறந்து விட்டேன். அட ஏழைப் பாம்பே, நீ ஒருகாலும் என்னைப் போல் வானத்தைக் காணமுடியாதே!''

''வானத்தையா? அதென்ன, அது? சொல்லப்போனால், அது வெறும் சூனியந்தானே! வானத்திலே நான் ஊர முடியுமா? இந்தப் பாறைப்பிளவைவிட அது மேம்பட்டதா? - இதுபோல வெப்பமும் தட்பமும் அதில் உண்டா?''

இப்படிச் சொல்லியது சுதந்தரக் காதல் கொண்ட பைரியிடம், பாம்பு. பைரியின் வீரச் சொற்களைக் கேட்டு, மனத்துக்குள்ளே அது சிரித்தது.

பாம்பு தன்னுள் தானே இப்படி எண்ணியது: 'ஒருவன் பறந்தால் என்ன? ஊர்ந்தால் என்ன? முடிவென்னவோ ஒன்றுதானே? எல்லாரும் - எல்லாம் - மண்ணிலே கிடக்க வேண்டியதுதான்; மண்ணோடு மண்ணாக வேண்டியது தான்.'

திடீரென்று பைரி தலையைத் தூக்கியது. இருண்ட பாறைப் பிளவைச் சுற்றிலும் ஒரு கண்ணோட்டம் விட்டது.

பாறை விரிசல்களிலிருந்து தண்ணீர் கசிந்து வந்தது. பிளவுக்குள்ளே செத்தழியும் சடலத்தின் நிணநாற்றம் நாறியது.

துக்கமும் ஏக்கமும் தொனிக்கப் பெருமுயற்சியுடன் பைரி கத்தியது: ''ஆஹா! வானத்திலே பறந்தெழுந்தால் எப்படியிருக்கும்! மறுபடியும் அப்படிப் பறந்தெழுவேனா!..எதிரியைச் சிறைப் பிடிப்பேனா!..அவனை என் மார்பிலே வைத்தழுத்தி நசுக்குவேனா!..என் ரத்தத்திலே அவனை மூச்சு முட்டச் செய்வேனா!..ஆஹா! போராட்டந் தான் என்ன ஆனந்தம் தருகிறது!''

பாம்பு எண்ணியது: 'பைரி இப்படிக் கூவுகிறதைப் பார்த்தால், வான வாழ்வு நேர்த்தியாய்த் தான் இருக்க வேண்டும்.'

சுதந்தரக் காதல் கொண்ட பைரியிடம் அது சொல்லியது:

''பாறை விளிம்புக்கு ஊர்ந்து செல்; அங்கே யிருந்து குதி. உன் சிறகுகள் ஒருவேளை மீண்டும் உன்னைத் தாங்கிச் செல்லக்கூடும்; நீ மீண்டும் வானத்திலே பறந்தெழக் கூடும்.''

பைரியின் உடல் வெடவெடத்தது. களிமண்ணை ஆதரவாய்ப் பற்றிப் பாறைமீது ஊர்ந்தது.

பாறை விளிம்பை அடைந்ததும், சிறகுகளை அகல விரித்து, ஆழப் பெருமூச்சு இழுத்தது. கண்ணிலே ஒளி மின்ன, ஆகாய வெளியிலே குதித்தது.

சிறகுகள் சிதற, இறக்கைகள் கிழியக் கல்போல் அதிவேகமாய் அது விழுந்தது.

அலை ஒன்று பைரியை ஏந்தி, அதன் ரத்தத்தைக் கழுவி, நுரையால் அதைப் போர்த்து, கடலாழத்துக்கு எடுத்துச் சென்றது.

கடல் அலைகள் ஓலக்குரல் பாய்ச்சிப் பாறையை வந்து வந்து மோதின. பரந்தகன்ற பெருங்கடலிலே கண்ணுக்குத் தெரியாமல் பைரி மறைந்துவிட்டது.

2

பாறைப் பிளவுக்குள்ளேயே உடலைச் சுருட்டிக்கொண்டு பாம்பு வெகு நேரம் கிடந்தது. பறவையின் சாவைப்பற்றியும் வானத்தின் மீது அது கொண்ட காதலைப்பற்றியும் சிந்தித்தது.

சஞ்சல உள்ளங்களுக்கு ஆறுதல் தரும் கனவுகள் பிறக்கும் ஆகாய வெளியைப் பாம்பு ஏறெடுத்துப் பார்த்தது.

''இந்தத் துர்ப்பாக்கியசாலியான பைரி, அங்கே - சூன்யத்திலே, எல்லையற்ற பெருவெளியிலே - என்னதான் கண்டது? வானத்தில் பறக்கும் வேட்கை கொண்ட இந்த மாதிரி பறவைகள் மற்றவரின் நிம்மதியைக் குலைப்பது ஏன்? வானத்திலே இவற்றுக்குப் புலப்படும் ரகசியம் என்ன? ஒரே தடவை நான் பறந்து இதையெல்லாம் கண்டறிந்து விடுகிறேன். மிகச் சுருக்கமாகப் பறந்தாலும் போதும்.''

இப்படித் தனக்குத் தானே பாம்பு சொல்லிக் கொண்டது. மிக நெருங்கிய சுருளாக உடலை அது இறுக்கிக்கொண்டது. ஆகாய வெளியில் எழும்பிக் குதித்தது. சூரிய ஒளி நடுவே கருமின்னல் ஒன்று கோடிழுத்தது போல் பாய்ந்தது.

ஆனால், ஊரப் பிறந்தவர்கள் ஒரு நாளும் பறக்க முடியாது. பாறையின்மீது விழுந்தது பாம்பு; ஆயினும் சாகவில்லை. பாம்பு சிரித்தது. தனக்குத்தானே சொல்லிக் கொண்டது:

''ஓஹோ! இதுதானா பறப்பதிலே உள்ள ஆனந்தம்! விழுவதிலே உள்ள ஆனந்தந்தானா? அட மூடப் பறவைகளா! மண்ணிலே ஆனந்தம் அடையாமல் - மண்ணிலே ஆனந்தம் இருப்பதை அறியாமல் - வானத்திலே எழும்பி, அந்தப் பெருவெளியின் துடிப்பிலே அவை வாழ்கின்றன. ஆனால், வானம் என்பது என்ன? வெறும் சூனியந்தானே! அங்கே ஏராளமாய் வெளிச்சம் உண்டு; ஆனால் உடலைப் போஷிக்க ஒன்றுமில்லை. இப்படியிருக்க, பறவைகளுக்கு இவ்வளவு செருக்கு ஏன்? மற்றவரைப்பற்றி இவ்வளவு இகழ்ச்சி ஏன்? தங்கள் பைத்தியக்கார ஆசையை - வாழ்வை வாழத் தெரியாத தங்கள் தோல்வியை - உலகோரிடமிருந்து மறைக்கத் தானே இதெல்லாம்! கோமாளிப் பறவைகளே! இனி ஒருபோதும் உங்கள் வார்த்தை என்னை ஏமாற்ற முடியாது. இப்போது எனக்கு எல்லாம் தெரிந்துவிட்டது. நான் வானத்தைப் பார்த்து விட்டேன்; மேலே ஏறி அதை ஆராய்ந்துவிட்டேன். வானத்திலிருந்து நான் கீழே விழுந்தேன்; நல்லவேளையாகச் சாகவில்லை. இதனாலெல்லாம் என்னுடைய தன்னம்பிக்கை வலுத்துவிட்டது. உலகத்திடம் காதல் கொள்ளாதவர்கள், தங்கள் கற்பனை மயக்கங்களிலேயே வாழட்டும். நான் உண்மையைக் கண்டுபிடித்து விட்டேன். இனி ஒருபோதும் பறவைகளின் அறைகூவலை ஏற்க மாட்டேன். மண்ணிலே பிறந்தேன்; மண்ணைச் சார்ந்தே வாழ்வேன்.''

இப்படிச் சொல்லி, பெருமை பூரிக்க, ஒரு கல்மீது சுற்றிக் கொண்டு பாம்பு படுத்தது.

கடல் பிரகாசித்தது; ஜிலு ஜிலு என்று ஒளிவீசிக் கண்ணைப் பறித்தது. அலைகள் மூர்க்க வெறியுடன் கரையை மோதின.

அவற்றின் சிங்க கர்ச்சனையிலே, பைரியின் பாட்டு எழுந்தது. கடலின் அறைகளால் பாறைகள் நடுங்கின; பாட்டின் இசை ஒலியால் வானமே நடுங்கியது:

''வீரத்தின் வெறியை நாங்கள் பாடித் துதிக்கிறோம்.

''வீரத்தின் வெறியே வாழ்வின் ஞானம். ஓ, அஞ்சா நெஞ்சம் படைத்த பைரியே! எதிரியிடம் போராடி உன் மதிப்பரிய ரத்தத்தைச் சிந்தினாய். ஆயினும் ஒரு காலம் வரும். அப்போது, உன் ரத்தத் துளிகள் வாழ்வின் இருளிலே அனல் பொரிகளாய் மினுமினுக்கும்; வீர உள்ளங்களிலெல்லாம் ஒளி ஏற்றிச் சுதந்தரக் கனலை மூட்டிவிடும்.

''நீ உன் வாழ்வையே தியாகம் செய்துவிட்டாய். ஆயினும், வீரர்களின் பாட்டிலே நீ வாழ்வாய்; சுதந்தரமும் ஒளியும் பெற நிகழும் போராட்டத்தின் செருக்கு மிக்க அறைகூவலாக அது விளங்கும்.

''வீரத்தின் வெறியை நாங்கள் பாடித் துதிக்கிறோம்.''

கடலின் பால் போன்ற பரப்பிலே மௌனம் நிலவியது. கரை மோதும் அலைகள் மென்மையாய்ப் பாடின; தொலைவையே கண் கொட்டாது பார்த்துக்கொண்டிருந்த நான் மௌனமானேன்.

இப்போது கடல் நீரிலே இன்னும் பல நிலவுத் திட்டுக்கள் வெள்ளியெனப் பிரகாசித்தன. எங்கள் அடுப்பிலிருந்த பானை அமைதியாய் ரீங்காரமிட்டது.

ஓர் அலை தன் சகோதர அலைகளையெல்லாம் மிஞ்சிக் கரையிலே வெகு தூரம் வந்து, ரஹீமின் தலையை நெருங்கிக் கேலி செய்வது போல் சிறிது ஓலமிட்டது.

''போ திரும்பி! இங்கே எங்கே வந்தாய்?'' என்று கையை ஆட்டிக்

கொண்டே ரஹீம் கூவினன். அலை யும் பணிந்தோடியது.

அலையைப் பிராணிபோல் பாவித்து ரஹீம் பேசியது எனக்கு ஒன்றும் வேடிக்கையாய்த் தோன்ற வில்லை. எங்களைச் சுற்றிலும் இருந்த எல்லாம் உயிர் பெற்று, சாதுவாய், களிப்பூட்டுகிறவையாய் இருந்தன. கடல் சாந்தமாய் இருந்தது. அதிலிருந்து புறப்பட்ட குளிர்காற்று, இன்னமும் பகலின் உஷ்ணத்தோடு இருந்த மலைச் சிகரங்களை நோக்கிச் சென்றது. வானத்தின் கருநீலத் திரையில் ஏதோ புனிதமான செய்தி ஒன்றைப் பொன்னெழுத்துக்களால் நட்சத்திரங்கள் வரைந்தன. அது ஆத்மாவைச் சொக்கி மயங்கச் செய்தது; என்னவோ பரம ரகசியம் வெளியாகப் போகிறது என்று எதிர்பார்த்து ஆனந்தம் அடைய மனத்தைத் தூண்டியது. எல்லாம் அரைத்தூக்க நிலையில் இருந்தன; ஆயினும், பரபரப்பான ஒரு விழிப்பும் அவற்றுக்கு இருந்தது. அடுத்த கணத்திலே உறக்கத்தை உதறித் தள்ளி, எல்லாப் பொருள்களும் சேர்ந்து குரல் எழுப்பி, வர்ணிக்க முடியாத இனிய கீதம் ஒன்றைப் பாடப் போவதுபோல் தோன்றியது. அந்தக் கீதம் வாழ்வின் ரகசியங்களையெல்லாம் வெளிப்படுத்தும்; அவற்றை மனத்துக்குத் தெளிவு படுத்தும்; பிறகு மனத்தையே, கொள்ளிவாய்ப் பிசாசு அவிவது போல் அழியச் செய்து விடும்; ஆத்மாவை இரவின் நீல வான வெளியிலே ஏற்றிவிடும். அங்கேயும் மென்மையான நட்சத்திரக் கோலம், இதே பரம ரகசியத்தை வெளிப்படுத்தும் தெய்விக கீதத்தைத்தான் பாடிக் கொண்டிருக்கும்!

நீண்ட நாள் வாழும் காரணம்

"உனக்கு வயசு தொண்ணூறு. இவ்வளவு நாள் நீ வாழக் கடவுள் அநுமதித்திருக்கிறரே; இதற்கு என்ன காரணம் என்று நீ எண்ணுகிறுய்?" என்று சிலர் ஒரு கிழவியைக் கேட்டார்கள்.

கிழவி சற்றும் தயங்காமல் பட்டென்று பதில் சொன்னுள்: "என் உற்றார் உறவினரின் பொறுமையைச் சோதிக்கத்தான்."

—ஆங்கிலத்திலிருந்து

கதையிலே ஆபாசம்

நோபல் பரிசு பெற்ற ஸிங்க்ளேர் லூயிஸ் என்ற அமெரிக்க அறிஞர் கடைசியாக எழுதிய புஸ்தகத்தில் ஒரு பகுதி மிகவும் ஆபாசமாக இருப்பதாகப் பத்திரிகைகளில் கடுமையாக விவாதம் நடந்தது. சமீபத்தில் அவர் ஒரு கப்பலில் போய்க்கொண்டிருந்தபோது, இதே புஸ்தகத்தை ஒரு கிழவி படித்துக்கொண்டிருப்பதைக் கண்டாராம். புரட்டியிருந்த பக்கங்களைப் பார்த்தபோது, அவள் இந்தப் பகுதிக்கு வந்துவிட்டாள் என்பதை அவர் ஊகித்துக்கொண்டார்.

'இவ்வளவு விவாதத்தைக் கிளப்பிவிட்டதே, இந்தப் பகுதி; இதைப் படித்ததும் இவள் என்ன செய்கிறுள் பார்க்கலாம்' என்று அவர் கவனித்தார்.

அவ்வளவுதான். படித்துக்கொண்டேயிருந்த கிழவி சட்டென்று எழுந்தாள். மிடுக்காகக் கப்பல் கிராதி ஓரத்துக்கு நடந்தாள். புஸ்தகத்தைத் தூக்கிக் கடலிலே வீசி எறிந்து விட்டாள்.

இதைக் கதாசிரியர் ஸிங்க்ளேர் லூயிஸே என்னிடம் தெரிவித்தார்.

—ஏ. பி. ஹெர்பெர்ட், 'இண்டிபெண்டெண்ட் மெம்பர்'.

புஸ்தகப் பகுதி:



அழகி மரியாள்

மூலம்: ஸெல்மா லாகர்லெவ்
தமிழ்: க. நா. சுப்ரமண்யம்

நோபல் பரிசு பெற்ற நூல்களுள் 'மதகுரு' ('கெஸ்டா பெர்லிங் ஸாகா') என்ற ஸ்வீடிஷ் நாவலின் ஒரு பகுதி இது; அரிய காவியம் போல் அமைந்த இந்த நாவலில் மதகுருவின் வாழ்க்கைக் கதை, பல சம்பவங்களைக் கொண்டது. ஒன்று இந்த அழகியின் உருக்கமான சரித்திரம். நாவல் முழுவதும் பல வர்ண ஸ்படிக ஒளிபோல் விதம் விதமாய் வரும் காட்சிகளைத் தெள்ளிய தமிழ் நடையில் தந்திருக்கிறார் மொழிபெயர்ப்பாசிரியர்.

காப்பிரைட்: மதகுரு (தமிழ் மொழிபெயர்ப்பு நூல்);
வெளியிட்டவர்: ஏ. கே. கோபாலன், திருவல்லிக்கேணி,
சென்னை-5. விலை ரூ. 6-75.

அழகி மரியாள்

★

ஆலயத்துப் பிரார்த்தனை மேடையின் படிகளிலே ஏறி வந்துகொண் டிருந்தான் மத குரு.

ஆலயத்தில் கூடியிருந்தவர்களின் தலைகள் அவனைக் காணும் வரையில் தொங்கலிட்டுக் குனிந்திருந்தன. அவனைக் கண்டதும் அவை தாமாகவே நிமிர்ந்துகொண்டன.

எவ்வளவு உயரமான மனிதன் அவன்! ஒற்றை நாடியாகக் கம்பீரமாக வளர்ந்திருந்தான்! அவனுடைய முகத்திலேதான் என்ன அமைதியான அழகும் கம்பீரமும் இருந்தன! இரும்புக் கவசம் அணிந்து வந்திருந்தானானால், ஒரு கிரேக்க வீரனின் சிலை உயிர் பெற்று நடமாடுகிறது என்றே சொல்லலாம். அவனுடைய கண்ணிலே ஒரு கவியின் ஆழம் இருந்தது.

ஆனால், அங்கே இருந்தவர்களில் அநேகமாக எல்லாருக்குமே அவனுடைய இன்னொரு தோற்றமும் நன்றாய்ப் பழக்கமானதுதான். பலசாலிகளான இரண்டு தளபதிகள் உடன்வரக் குடிகார விடுதியிலிருந்து அவன் வெளியே வந்து மீண்டும் குடிகார விடுதிக்கே தள்ளாடித் தள்ளாடிச் சென்று மேலும் மேலும் குடித்துப் பிரக்ஞை இழந்து கிடக்கிற தோற்றந்தான் அது.

அந்த மதகுருவின் நடத்தை மன்னிப்பு என்கிற தத்துவத்தின் எல்லைகளை எல்லாம் கடந்துவிட்டது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்ப காலத்தில், குடிப்பதும் போதையில் இருப்பதும் சர்வ சகஜமான காரியம் என்றே எல்லாரும் எண்ணினுர்கள். ஆனாலும் அந்த மனிதன் செய்த காரியம் மன்னிக்க முடியாதது. பிராயச்சித்தமே அற்ற ஒரு பாவத்தைச் செய்தவன் அவன். மன்னிக்க முடியாத ஒரு குற்றத்தைச் செய்ததற்காக விசாரித்து மதகுரு ஸ்தானத்திலிருந்து அவனை விலக்கப் போகிறுர்கள்.

மதகுருவுக்குத் தெரிந்தது போலவே அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் நன்றுகத் தெரியும்: நாகரிக உலகுக்கு வெகு தூரத்திலே இருந்த அந்தப் பகுதிகளில் குடிக்காமல் எவனும் உயிர் வைத்திருக்க முடியாது. அவனை விசாரிக்க வந்திருந்தார்களே பெரிய மனிதர்கள், அவர்களுக்குங்கூட இது தெளிவாகவே தெரியும். தெரிந்திருந்தும் அவனைக் குற்றம் சாட்டித் தண்டிக்கத் துணிந்து வந்திருந்தார்கள்!

மதகுருவாக அவன் அணிந்திருந்த புனிதமான ஆடைகளைப் பிடுங்கிக்கொண்டு விடுவது என்ற உத்தேசத்துடன் அவர்கள் வந்திருந்தார்கள். அவன் குடித்துவிட்டு ஆலயத்துக்கு வந்தானும்! இதுதான் குற்றம்!

ஆரம்பப் பிரார்த்தனையை முடித்துவிட்டு, மண்டியிட்டு 'நம் பிதா' ஜபத்தையும் தொடங்கினுன் மத குரு.

ஆலயத்திலே அமைதி நிலவியது: யாரும் மூச்சுவிடக்கூடத் துணியாதமாதிரி இருந்தது. தனது மேல் சட்டையை இறுகப் பிடித்துக் கட்டியிருந்த இடுப்பு வாரைத் திடீரென்று இரு கைகளாலும் அவன் பிடித்துக்கொண்டான். வந்திருந்த பிஷப்பின் தலைமையில் அங்கே இருந்த எல்லாரும் தன் ஆடையைப் பிடுங்கிக்கொள்ளச் சதி செய்கிறுர்கள் என்று அவனுக்குத் தோன்றியது. அவன் மண்டியிட்டிருந்தான்; தலையைக்கூட நிமிர்ந்து திருப்பவில்லை.

பிரார்த்தனை முடிந்தது. தனது பிரசங்கத்தைத் தொடங்கினான் மத குரு. திடீரென்று அவன் மனத்தில் எழுந்த ஒரு சிந்தனை அவனை வாயடைத்துப் போகச் செய்தது. சொல்ல வந்த வார்த்தைகளை மறந்துவிட்டு ஒரு விநாடி தயங்கினான். ஆலயத்து மேடையில் நின்று அவன் செய்யும் கடைசிப் பிரசங்கம் இதுதான் என்று திடீரென்று ஞாபகம் வந்தது அவனுக்கு. இந்த மாதிரியான இடத்திலிருந்து கடவுளின் பெருமைகளைப் பிரசங்கம் செய்யும் வாய்ப்பு அவன் வாழ்வில் இனிக் கிடைக்காது!

எழுதிக்கொண்டு வந்திருந்த குறிப்புகளும் வாசகங்களும் அவனுக்கு மறந்துவிட்டன. மனிதனுடன் பழகிய புருக்கள்போல உயர்ந்த சிந்தனைகள் அவனுடைய வார்த்தைகளில் தாமாகவே வந்து சிக்கிக்கொண்டன. பேசியது அவன் தானா? கடவுளின் தனித் தன்மைக்கும் காருண்யத்துக்கும் சக்திக்கும் சாட்சி சொல்பவனாக அழகிய வார்த்தைகளை அள்ளி வீசிக்கொண்டு மதகுரு அங்கே நின்றபோது, அவனுக்கு ஈடு இணை சொல்ல இந்த உலகிலேயே யாரும் இல்லை என்று தோன்றியது. என்ன தேஜஸ் மதகுருவின் முகத்திலே இருந்தது!

உள்ளத்தில் உணர்ச்சித் தீ எரிந்து அணையும் வரையில் அவன் பேசினான்.

ஆலயத்தில் பிரார்த்தனை முதலிய சடங்குகள் முடிந்ததும், ஆலய விஷயமாகச் சபை கூடியது. இந்தச் சபைக்குத் தலைமை வகித்தவர் பிஷப்தான். ஊர்க்காரர்கள் சொல்லியிருந்த குற்றச் சாட்டுகளை எல்லாம்பற்றி விவரம் கேட்டார் பிஷப்.

ஆனால் ஒருவரும் வாய் திறக்கவில்லை. பெரிய மேஜையைச் சுற்றியிருந்தவர்கள் எல்லாரும் மௌனமாக இருந்தார்கள்.

கடைசியில் ஆலயத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரி சொன்னான்: "மிகவும் சிரேஷ்டமானவர் எங்கள் மதகுரு. அவரைப்போல வேறு யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என்றான்.

"அவர் பிரசங்கம் செய்தால் எப்படியிருக்கும் என்று இன்று நீங்களுந்தான் காதாரக் கேட்டீர்களே!" என்றான் கல்லறை அதிகாரி.

பல வாரங்களாக ஞாயிறன்று பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறவில்லையென்று தாம் கேள்விப்பட்டதாக பிஷப் சொன்னார்.

"அந்த ஞாயிற்றுக்கிழமைகளில் எங்கள் மதகுருவுக்கு உடம்பு சரியாக இல்லை, பாவம்! அவரும் மனிதர்தானே!" என்று சொன்னார்கள் குடியானவர்கள்.

அவனுக்கு எதிராக யாரும் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. ஒருமுகமாக அவனைப் புகழ்ந்து போற்றினார்கள் கூடியிருந்த எல்லாரும்.

குற்றம் சாட்ட அங்கே யாரும் இல்லை. ஆகவே, பிஷப் தீர்ப்புச் சொல்லி அவனைத் தண்டிப்பதென்பது நடக்காத காரியம்.

மதகுருவின் உள்ளம் அன்பால் விரிந்தது. அவனுடைய உடலிலே ரத்தம் துள்ளிக் குதித்தோடியது.

சபை கலைந்ததும் மதகுருவின் வீட்டில் சாப்பிடுவதற்கு, பிஷப்பும் பல மத குருமாரும் சில பெரிய மனிதர்களும் போனார்கள்.

வாலிப மதகுருவுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. ஆகவே, அண்டை வீட்டுக்காரனின் மனைவி, அந்த விருந்துக்கான ஏற்பாடுகளை மிக நேர்த்தியாகச் செய்திருந்தாள்.

வாலிப மதகுருவின் சந்தோஷம் கட்டில் அடங்காததாயிற்று. 'இனிக் குடிக்கவே மாட்டேன்' என்று தனக்குள்ளாகவே பல தடவை சொல்லிக்கொண்டான்.

கிண்ணத்தில் மதுவை ஊற்றிக் குடித்துவிட்டு, பிஷப் சொன்னார்: "எனக்கு இந்தக் காரியத்தில் பிரவேசிக்க மனமே இல்லை. மிகவும் சிரமப்பட்டுக்கொண்டு தான் கிளம்பினேன். விஷயம் சுமுகமாக முடிந்துவிட்டதுபற்றிப் பரம திருப்தி."

விருந்தின்போது மதகுரு மதுவே அருந்தவில்லை. ஆனால் மது அருந்தியவன்போலத்தான் ஆனந்த போதையில் ஆழ்ந்திருந்தான். மாலையில் விருந்தாளிகளெல்லாம் போய்விட்ட பிறகுங்கூட, அவன் ஜுர வேகத்தில்தான் இருந்தான். இரவில் வெகு நேரம் வரையில் ஆனந்த லாஹிரி அவனுக்குத் தூக்கம் வராமல் செய்தது.

திடீரென்று ஒரு குரல் ஆழ்ந்த அந்த மௌனத்தைக் கலைத்தது. ''தூங்கிவிட்டாயா, மதகுரு?'' என்று கேட்டுக்கொண்டே ஒருவன் புல் தரையைக் கடந்து திறந்திருந்த ஜன்னலண்டை வந்தான்.

வந்தது காப்டன் கிறிஸ்டியன் பெர்க் என்று அறிந்துகொண்டான் மதகுரு. மதுக்கடைக்கு மதகுருவுடன் வரும் தோழர்களில் ஒருவன் அவன். வீடோ வாசலோ பொறுப்போ எதுவுமற்ற ஒரு நாடோடி இந்தக் கிறிஸ்டியன். பலத்திலும் உருவத்திலும் ராட்சசன்; மூளையிலே சுண்டெலி!

''நான் விழித்துக்கொண்டுதான் இருக்கிறேன். இன்றிரவு எனக்குத் தூக்கம் வருமா?'' என்று பதில் அளித்தான் மதகுரு.

காப்டன் கிறிஸ்டியனுக்குத் தன் நண்பன் பழைய வழிகளில் நடக்க மறுத்து விடுவான் என்ற பயம் வந்துவிட்டது. தன் நண்பன் சௌக்கியமாக இருக்க முடியாது என்று அவன் எண்ணினான். இப்போது ஒன்றும் முடிவு சொல்லாவிட்டாலும் பிறகு வந்து கழுத்தை அறுக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? ஆகவே, கிறிஸ்டியன் பெர்க் அதற்கு ஒரு வழி பண்ணுவது என்று யோசித்துவிட்டான்; அவர்கள் மீண்டும் தன் நண்பனைத் தேடி வராத வழி பண்ணிவிட்டான்.

''கேளேன்! நான் எவ்வளவு பெரிய காரியத்தைச் சாதித்துவிட்டு வந்திருக்கிறேன், தெரியுமா?'' என்றான் கிறிஸ்டியன்.

பிஷப்பும் அவருடைய இரண்டு நண்பர்களும் நகருக்குப் போவதற்கு வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார்களாம். வண்டிக் கதவை அழுத்திச் சாத்திவிட்டுக் கிறிஸ்டியனே வண்டி ஓட்டும் பொறுப்பை ஏற்றுக்கொண்டானும். இரவில் நகரை நோக்கி அவனே வண்டியை ஓட்டினானும்.

''எவ்வளவு பெரியவர்களானால் தான் என்ன-உயிருக்கு ஆபத்து என்றால் ஓலம் இடத்தானே இடுவார்கள்! வண்டி கவிழ்ந்துவிடுகிற வேகத்தில் ஓட்டினேன். வண்டியை நேர்ப் பாதையில் ஓட்டவில்லை; கரடு முரடான குறுக்குப் பாதையில் ஓட்டி - வயலிலும் வரப்பிலும், மேட்டிலும் பள்ளத்திலும், செடியிலும், கொடியிலும் ஓட்டி - விளையாடினேன். வண்டி செங்குத்தான மலைச் சரிவிலே உருண்டது; கவிழ்ந்துவிடக்கூடிய நிலைமையில் குட்டிச் சுவர்களை ஏறிக் கடந்து பழத் தோட்டங்களிலும் புஷ்பத் தோட்டங்களிலும் புகுந்தது; கற்களின் மேல் ஓடியது; சதுப்பு நிலத்தில் சக்கரம் சேற்றில் அழுந்த நகர்ந்தது. குதிரைகள் சில சமயம் ஓடின; சில சமயம் பாய்ந்தன; பல சமயம் சறுக்கின. வண்டியில் இருந்த பிஷப்பும் அவருடைய நண்பர்களும், தங்களுக்குத் தெரிந்த பிரார்த்தனைகளையெல்லாம் முணுமுணுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய ஆயுளில் இந்த மாதிரியான பயம் அவர்களுக்கு ஏற்பட்டதில்லை. ரிஸ்ஸேடர் ஸ்டேஷனை அடைந்த போது, அவர்கள் இருந்த நிலைமை வேடிக்கையாக இருந்தது. பட்டாணிக் கடலைக் காய் காய்ந்து அதற்குள் மணிகள் சலசலப்பதுபோல் சலசலத்துக்கொண்டு அவர்கள் வெளிப்பட்டார்கள். பாவம்! பார்க்கப் பரிதாபமாயிருந்தது! 'இதற்கெல்லாம் என்ன அர்த்தம், காப்டன் கிறிஸ்டியன்?' என்று கோபமாகக் கேட்டார் பிஷப். 'அர்த்தமா, பிஷப்? அனர்த்தந்தான். இன்னொரு தடவை கெஸ்டா பெர்லிங்கைத் தேடிவர நீங்கள் எண்ணினால், ஒரு தடவைக்கு நாலு தடவை யோசனை செய்துவிட்டு வருவது நல்லது என்றுதான் அர்த்தம்' என்றேன். 'அப்படியா! உன் நண்பர் கெஸ்டா பெர்லிங்குக்கு என் ஆசி

களைக் கூறு. இனி நானே என் போன்றவர்களோ அவரைத் தேடி வர மாட்டோம்; அதற்கு அவசியமே இராது என்று அவரிடம் சொல்லிவிடு' என்றார் பிஷப்.''

கோடை இரவில் திறந்த ஜன்னலண்டை நின்றுகொண்டு இந்த அசாதாரணமான செய்கையைப் பற்றிக் காப்டன் கிறிஸ்டியன் சொன்னான்.

அட தெய்வமே! பிஷப்பும் அவனுடைய நண்பர்களும் பேய் அறைந்தவர்போல வண்டியிலிருந்து வெளியே வந்தார்கள்; இந்த வாலிப மதகுருவின் முகமும் ஏன் இப்படித் திடுதிடுப்பென்று பேய் அறைந்த மாதிரி ஆகிறது? - தம் கையைத் தூக்கி ராட்சசக் காப்டனின் கன்னத்தில் ஓர் அறை வைக்க முயன்றான் மதகுரு. ஜன்னலைப் படீரென்று சாத்தினான். முஷ்டியை மடக்கி வானத்தைச் சவால் விட்டு அழைப்பதுபோல உலுக்கினான். தன் வாழ்வின் உச்சியிலிருந்து, கவிதை நிரம்பிய வார்த்தைகளால், கடவுளின் பெருமைகளைப் பாடிய அவன் உணர்ந்துகொண்டான் - கடவுள் தன்னைப் பார்த்துச் சிரித்து விட்டார் என்று.

இந்த மதகுரு சொன்னபடி தான் கிறிஸ்டியன் இதையெல்லாம் செய்திருக்க வேண்டும் என்று தானே பிஷப் எண்ணியிருப்பார்! 'என்னையும் மற்றவர்களையும் ஏமாற்றுகிற உத்தேசத்துடன்தான் அவன் பக்திமானாக வேஷம் போட்டு அன்று பிரசங்கம் செய்திருக்க வேண்டும்' என்று பிஷப் எண்ணினால் அது தவறாகாது. மதகுருவைப் பதவியிலிருந்து நீக்கி விடுவார்கள்; அவனுடைய ஆடை அணிகளை அவனிடமிருந்து பிடுங்கிக்கொண்டு விடுவார்கள்.

மறு நாள் போது விடிவதற்குள் வாலிப மதகுரு அந்த ஊரை விட்டே வெளியேறிவிட்டான். இருந்து தன் நடத்தைக்கு விளக்கம் கொடுப்பது அவசியமில்லை, அது பலன் தராது என்று எண்ணினான் அவன். கடவுளே அவனைக் கேலி செய்து நகைத்துவிட்டார். கடவுளே உதவி செய்ய மறுக்கும் போது யார்தான், என்னதான் செய்து பலன் கண்டுவிட முடியும்?

மேல் வார்ம்லாந்து பிரதேசத்தில் அதிகமாக ஒதுங்கியிருக்கும் ஓர் ஊரில் 1820 வாக்கில் இது நடைபெற்றது.

கெஸ்டா பெர்லிங்கின் வாழ்க்கையிலே நேர்ந்த முதல் துரதிருஷ்டம் இதுதான்; இதுவே கடைசி என்று சொல்ல முடியாது.

அந்தக் காலத்து அழகிகளைப் பற்றிப் பேசுவதென்றாலே சொர்க்கத்தைப்பற்றிப் பேசுவதுபோலத் தான் இருக்கிறது. ஏனென்றால், அவர்களுடைய அழகு பூர்ணமானது; திருப்தி தருவது. அவர்கள் வீசிய ஒளி, யுவர்களின் கண்களைக் கூசச் செய்தது. என்றும் இளமை நிறைந்தவர்கள் அவர்கள். என்றும் அழகால் மயக்க வல்லவர்கள். குழந்தைகளைக் காணும் தாய்மார்களின் வதனம் போல் அவர்களுடைய முகம் சதா மலர்ந்தே இருந்தன. அவர்கள் இன்பம் தரும் தேவிகள்; மாணிக்கம் பதித்த பொற் சிற்பங்கள். அவர்களுடைய வீடுகள்தான் அவர்கள் விரும்பிக் குடிபுகுந்த ஆலயங்கள். ஆண்கள் தூபம் போட்டுப் பிரார்த்தனை செலுத்திப் பூஜை முடித்து அந்தப் பெண்களுடைய தயவை நாடினார்கள். அவர்களுடைய சக்தி, மனிதரிடையே மாயங்கள் செய்ய வல்லதாக இருந்தது.

ஓ! அந்தக் காலத்துப் பெண்களைப்பற்றிச் சொல்லி மாளுமோ? அந்தப் பெண்களில் ஒருத்தி கெஸ்டா பெர்லிங்குக்குத் தன் காதலை எப்படி அர்ப்பணம் செய்து விட்டாள்! பிச்சைக்காரனாகக் கிளம்பிய கெஸ்டா பெர்லிங் இப்போது ஏக்பி நகர மாளிகையிலே உல்லாச புருஷர்களில் ஒருவன் ஆகிவிட்டான். அவனுடைய காதல் நாடகம் ஒன்று இது.

ஏக்பியில் ஒரு பிரம்மாண்டமான விருந்துக் கேளிக்கைக்கு ஏற்பாடாயிற்று. என்ன விருந்து அது! எப்படிப்பட்ட உல்லாஸ புருஷர்கள் நடத்திய உல்லாஸ

மான கேளிக்கை அது! கிழவனும் கிழவியும் அந்த இன்ப ஞாபகத்திலே மீண்டும் யுவனும் யுவதியும் ஆனுர்கள்.

அங்கே வந்திருந்தவர்களில் எல்லா விதத்திலும் சிறந்தவள் என்று சொல்ல வேண்டுமாஞல், அழகி மரியாள் ஸிங்கிளேரைத் தான் சொல்ல வேண்டும். அழகிகளிடையே அழகி அவள்; வானத்துத் தேவிகளைப் போன்றவள். 'அழகு ராணி' என்று எல்லாரிடமும் ஒருமுகமாகப் பட்டம் பெற்றவள். அவளைக் கண்ட எந்த யுவனையும் காதல் நெருப்புத் தகித்துவிடும்.

அவளுடைய தகப்பனுர் பணக்கார மெல்கியார் ஸிங்க்ளேர். அவர் தம் மனைவியுடன் ப்யோர்ணில் வசித்து வந்தார். பெண்ணின் புகழும் பெருமையும் பெற்ருேருக்குத் திருப்தியாக இருந்தன. அவள் இஷ்டப்படி அவளுடைய நண்பர்களுடனும் தோழிகளுடனும் போவதற்கு அவள் தகப்பனுர் ஆட்சேபம் சொல்வதில்லை. அவள் அதிகச் செலவு செய்வதைச் சொல்லிச் சொல்லிப் பெருமைப் பட்டுக்கொண்டார் மெல்கியார். மரியாளின் புகழ் தங்கள் மேல் பரப்பிய இன்பமான ஒளியிலே திருப்தியுற்றவர்களாக, அவளுடைய கிழப்பெற்ருேர் வார்ம்லாந்தில் வசித்து வந்தார்கள்.

அவளைச் சூழ்ந்திருந்த காற்றிலேயே காதல் சுடர் விட்டு எரிந்தது. காதலுக்கு உகந்தவள். அவள் விட்ட மூச்சு, அவள் கண்ட ஒளி, அவள் அறிந்த அறிவு, அவள் உண்ட உணவு - எல்லாமே காதல் மயம்தான். அவளே எத்தனையோ தடவை யுவர்களைக் காதலித்திருக்கிருள்; எத்தனையோ தடவை! ஆனுல் ஒரு தடவையாவது அவளுடைய காதல் ஒரே யுவனிடம் அதிக நாள் நீடித்ததில்லை. நீடித்தால்தானே அந்தக் காதல் நினைவுகளால் தங்கக் கரணைகள் செய்து வாழ்க்கையில் அவளைப் பிணைத்து வைக்கமுடியும்!

காதலைப்பற்றிப் பேசும் போதெல்லாம் அவள் சொல்லுவாள்: ''என்னை வென்று ஆளக்கூடிய அந்தக் காதல் வீரனுக்காகக் காத்திருக்கிறேன் நான். இன்னும் அவன் எந்தக் கோட்டையையும் முற்றுகையிட்டுப் பிடித்து விடவில்லை; எந்த அரங்கு அகழிகளையும் கடந்து என்னை அணுகி விடவில்லை.''

அவள் குரல் மிருதுவானது; மெல்லியது; இசையே போன்றது. பெரிய இடத்துப் பெண் என்பதை அவள் குரலே எல்லாருக்கும் தெரிவித்தது. வார்ம்லாந்தில் அவளுடைய வீட்டிலே அவளுக்கு எதிர் சொல்ல யாரும் இல்லை. புயலுக்குப் பணியும் கோரைப்புல் போல எல்லாரும் மரியாளுக்குப் பணிந்து போனுர்கள்.

மரியாளுக்கு நடிக்கச் சந்தர்ப்பம் தரவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு ஸ்குயர் ஜூலியஸ் என்கிற மேதை, ஒரு சிறு நாடகத்தைத் தயார் செய்திருந்தான்.

பெரிய ஏக்பி முன்னறையில் ஒரு நூறு பேர் உட்கார்ந்து நாடகம் பார்த்தார்கள். சிறிய அரங்கு தான் அது. தங்க நிறமான பூர்ண சந்திரன் இருண்ட கரிய இரவிலே எழும்பி மிதந்து உச்சிக்கு வந்தது. பச்சைக் கொடிகள் சூழ்ந்த பால்கனிச் சாளரத்தின் அடியிலே வந்து நின்ருன் இஸ்பானிய ஜூவான். மதகுருவாக வேஷம் தரித்து வந்தான் அவன். ஆனுல் அவனுடைய ஆடைகள் அலங்கார புருஷர்களின் ஆடைகளாக-ஜரிகையும் தங்கமும் பட்டுமாக - இருந்தன. இடையிலே கத்தி ஒன்று செருகியிருந்தான்.

அவன் உரக்க அழகாக இப்படிப் பொருள்படப் பாடினுன்: ''கன்னிப்பெண்ணை நான் கட்டி அணைப்பதில்லை. மதுக்கிண்ணத்தை என் உதடுகள் முத்தம் இடுவதில்லை. பளிங்கு போன்ற கன்னத்திலே என் பார்வை சிவப்பை எழுப்பும். இனிய ஆழ்ந்த கண்கள் என்னை நாடி அருகில் அழைக்கும். ஆஹா! இந்த இன்பங்கள் எனக்கில்லை: உன் அழகெனும் பலத்துடன், மங்கையே, நீ இங்கே வராதே. எனக்கு நடுக்கம் எடுக்கிறது. நான் சாமியார்; ஜபமாலை அணிந்தவன்;

என் உள்ளம் தூய கன்னி மேரியின் அடிமை. பாட விரும்பும் என் தொண்டையை ஜலந்தான் நனைக்கலாம்.''

இந்தப் பாட்டு முடிந்ததும், பால்கனிச் சாளரத்தில் மரியாள் தோன்றினாள். அவள் கறுப்பு வெல்வெட் அங்கி அணிந்திருந்தாள். அவளுடைய மெல்லிய பட்டு முகமூடியில் சரிகை இழைத்திருந்தது. கைப்பிடிமேல் சாய்ந்து, மெதுவாக, கேலியாக அவள் பாடினாள்: ''மகா புண்ணிய புருஷரே, இங்கே ஏன் நிற்கிறீர்? நள்ளிரவில் என் சாளரத்தண்டை என்ன வேலை? எனக்காகப் பிரார்த்திக்கிறீரோ?''

பிறகு சட்டென்று வேகமாக உணர்ச்சியுடன் தொடர்ந்தாள்: ''வேண்டாம், ஓடிவிடு; கெஞ்சுகிறேன். உன்னை இங்கே கண்டுவிடுவார்கள். உன் கத்தி உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும். உன் கால் மிதியடி தரையிலே சப்திக்கிறதே! மதகுரு வேஷமணிந்த உல்லாஸ புருஷன் நீ என்று உலகறியத் தெரிந்துவிடும்; போ!''

இதைக் கேட்டதும் மதகுரு தன் சாமியார் வேஷத்தைக் கலைத்துவிட்டு, உல்லாஸ, அலங்கார புருஷனாக நின்றான் - கெஸ்டா பெர்லிங்காக நின்றான்! இஸ்பானிய அலங்கார ஆடை உடுத்து, பட்டும் தங்கமுமாக நின்றான்! தன் காதலியின் வார்த்தைகளை அவன் லட்சியமே செய்யவில்லை. அதற்கு மாறாக, சாளரத்தின் தூண்களில் ஒன்றின்மேல் தாவி ஏறி, மேலே பால்கனியில் நின்ற தன் காதலியை அடைந்துவிட்டான். நாடகத்தில் ஸ்குயர் ஜூலியஸ் எழுதியிருந்தபடி, அந்த அழகியின் காலிலே விழுந்துவிட்டான் கெஸ்டா பெர்லிங்.

அவனைப் பார்த்து ஒளி மிகுந்த புன்சிரிப்புச் சிரித்தாள் காதலி. இரக்கத்துடன் அவனைப் பார்த்தாள். அவள் கண்களிலே காதல் பிறந்தது. அவளுடைய கையை முத்தமிட்டான் காதலன். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் விழுங்கி விடுவதைபோலப் பார்த்துக்கொண்டிருக்கையிலே திரை விழுந்தது.

நிலவொளி வீசிய அந்தப் பால்கனியிலே நின்ற அவர்கள் இருவரையும் போன்ற ஒரு ஜோடியை அங்கே இருந்த யாரும் இதற்கு முன் பார்த்ததில்லை.

அந்த மரியாள்தான் எவ்வளவு அழகாக இருந்தாள்! அடேயப்பா! அபார அழகு!

சபையோரின் கைதட்டல் அடங்கியது. திரை விழுந்துவிட்டது. யாரும் அவர்கள் இருவரையும் பார்க்கவில்லை.

அப்போது மரியாள் குனிந்து கெஸ்டா பெர்லிங்கின் வாயில் வாய் வைத்து முத்தமிட்டாள். ''ஏன் அப்படிச் செய்தாய்?'' என்று கேட்டால், அவளுக்கே பதில் சொல்ல முடியாது. ஏதோ ஒரு சக்தி அவளை அப்படிச் செய்யத் தூண்டியது. தன் தலைக்கு மேல், கையை நீட்டி அவளை இறுகப் பற்றி அணைத்துக்கொண்டான் கெஸ்டா. அவள் மீண்டும் மீண்டும் அவனுடைய வாயில் முத்தம் இட்டாள்.

ஆமாம், காரணம் அந்த நிலவும் அந்த பால்கனிச் சாளரமுந்தான் - வேறு என்ன? அவளுடைய பட்டாடைகளும், கெஸ்டாவின் அலங்கார வேஷமும், பாட்டும் கரகோஷமும் சேர்ந்து அவர்களை அப்படிச் செய்யத் தூண்டின. இதற்காக அவர்களைக் குறை சொல்வது நியாயமே அல்ல. இருவரும் பூரணமாகத் தெரிந்து தவறு இழைக்கவில்லை. சீமான்களையும் ராஜகுமாரர்களை போன்றவர்களையும் நிராகரித்து வந்தாள் மரியாள் - கோடீசுவரர்களை வேண்டாமென்றவள். ஏழையாய், அநாதையாய் மானங்கெட்டு ஓடிவந்த மதகுரு கெஸ்டாவுக்காகவா அவள் அவர்களை ஏற்க மறுத்தாள்? இல்லை, இல்லை.

மிருதுவான சுபாவம் படைத்த லொவன்பர்க்தான் அன்று திரை தூக்கிவிடும் காரியத்தில் ஈடுபட்டிருந்தான். அவனுடைய கண்களில் எப்போதும் புன்னகை தவழும். இந்த உலகத்து விஷயங்களில் அவனுக்குச் சிறிதும் ஈடுபாடு கிடை

யாது. கெஸ்டாவும் மரியாளும் புதிசாக ஒரு தோற்றம் அளித்தார்கள் என்று கண்டதும், அதுவும் நாடகத்தைச் சேர்ந்த ஒரு காட்சிதான் என்று லொவன்பர்க் எண்ணிக் கொண்டான். திரையை மீண்டும் தூக்கிவிட்டான்.

மேடைமேல் பால்கனியில் கட்டியணைத்து நின்ற இருவரும் எதையும் கவனிக்கவில்லை - மீண்டும் கரகோஷம் எழுந்து அவர்களை எழுப்பும்வரையில்.

திடுக்கிட்டுக் கெஸ்டாவின் அணைப்பிலிருந்து தப்ப முயன்றாள் மரியாள். ஆனால் கெஸ்டா அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். ''பேசாதிரு, இதுவும் நாடகம் என்று அவர்கள் நினைத்திருக்கிறார்கள். நல்லது, இப்படியே இரு'' என்றான்.

அவள் உடல் ஒரு தரம் நடுங்கிக் குலுங்கியது தெரிந்தது அவனுக்கு. அவளுடைய முத்தங்களின் போதை வேகம் தணிந்தது. மீண்டும் திரை எழுந்து விழுந்து, எழுந்து விழுந்து, கரகோஷம் ஓயும் வரையில் அவர்கள் அப்படியே நிற்கவேண்டியதாயிற்று.

கடைசியில் மேடைக்குப் பின்னால் நின்றார்கள் மரியாளும் கெஸ்டாவும். தன் கைவிரல்களால் நெற்றியைத் தடவிவிட்டுக் கொண்டாள் மரியாள். ''எனக்குப் புரியவில்லை இது'' என்றாள்.

விளையாட்டாகச் சொல்வது போல, ''நீ என்னைக் காதலிக்கிறாய் என்றுதான் நினைக்கிறேன்'' என்று சொன்னான் கெஸ்டா.

''அப்படியெல்லாம் தப்பாக எண்ணாதே! அப்படி நீ எண்ணினால் அது தவறு என்பதை ருசுப்பிக்க நான் இந்த ஈட்டியை உன் மார்பில் செருக நேரிடும்'' என்று சொல்லிச் சிரித்தாள் மரியாள்.

''பெண்ணின் முத்தங்கள் அருமையானவைதான். ஆனால், மரியாள் ஸிங்க்ளேரின் முத்தம் கிடைத்ததற்குக் கூலியாக என் உயிரையே தரவேண்டுமா நான்?''

கத்திபோன்ற கூரான ஒரு பார்வை அவள் கண்களிலிருந்து கிளம்பி அவனைக் கூர் ஈட்டிபோலக் குத்தியது. ''நீ இறந்துவிட்டால் எனக்குத் திருப்தியாக இருக்கும், கெஸ்டா பெர்லிங் - சா நீ - சாவேன்'' என்றாள் பல்லைக் கடித்துக்கொண்டு.

அவளுடைய இந்த வார்த்தைகள் அவனுடைய பழைய வருத்தத்தைக் கிளறிவிட்டன. ''ஹா! உன் வார்த்தைகள் வெறும் வார்த்தைகளாகவே இருக்கின்றனவே! அவை துப்பாக்கிக் குண்டுகளாக இருந்து என் மார்பில் பாய்ந்தால் எவ்வளவோ மேலாயிருக்குமே. என் ஆத்மாவுக்கு இந்த உடலிலிருந்து விடுதலை கிடைத்து விடுமானால் நல்லதுதான்.''

ஆனால் அவள் அமைதியாகச் சிரித்தாள். ''எல்லாம் குழந்தைத்தனம்'' என்றாள். கைகோத்துக் கொண்டு மற்ற விருந்தாளிகளுடன் போய் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

நாட்டியம் ஆடத் தொடங்கினார்கள் எல்லாரும். ஆனால் கெஸ்டா நாட்டியம் ஆடவில்லை. கூரிய கத்திகொண்டு அறுத்ததுபோல மரியாளின் பார்வை அவனுடைய உள்ளத்தை அறுத்துவிட்டது. மனத்தில் துக்கத்துடன் சீட்டாடிக் கொண்டிருந்த கிழவர்களிடையே அவன் போய் உட்கார்ந்தான். ப்யோர்ணின் பணக்கார எஜமான் காசு வைத்து ஆடிக்கொண்டிருந்தார். அவர் எதிரே ஏராளமான சில்லறை சேர்ந்திருந்தது. பணத்தை உயர்த்திக்கொண்டே போனான் கெஸ்டா. சிறிது சிறிதாக மெல்கியார் வென்ற தொகை அதிகரித்தது. அதே சமயம் கெஸ்டா பெர்லிங்கும் வென்று நிறையச் சேர்த்தான். சீக்கிரத்திலே மெல்கியாருடன் பணயம் கட்டிப் போட்டியிடக்கூடிய அளவுக்கு அந்த மேஜையில் கெஸ்டாவைத் தவிர வேறு யாரிடமும் பணமில்லை. அதற்குப் பிறகு பணயத்தை இரட்டித்தும் நான்கு மடங்காக்கியும் கெஸ்டா பெர்லிங் தன் எதிரியிடம் இருந்த பணத்தையெல்லாம் ஜயித்துத் தன் பக்கத்துக்கு மாற்றிக்கொண்டுவிட்டான்.

சிரித்துக்கொண்டே மெல்கியார் தம் பர்ஸையும் சட்டைப் பைகளையும் துழாவினார். ஒரு காசுகூட

இல்லை. "அவ்வளவுதான், கெஸ்டா. என்ன செய்வது இப்போது? என் கையில் வேறு காசில்லை. கடன் வாங்கிப் பணயம் வைப்பதில்லை என்று என் அம்மாவுக்கு வாக்களித்திருக்கிறேன். ஆட்டம் அவ்வளவுதான்" என்றார்.

ஆனால், வேறு வழி ஒன்று தோன்றிற்று; தம் கடிகாரம், கடிகாரச் சங்கிலி, விலை மதிப்புள்ள போர்வை இவற்றையெல்லாம் வைத்தாடித் தோற்றுவிட்டார்.

அப்போது சிண்டிராம் குறுக்கிட்டுச் சொன்னான்: "உம் அதிருஷ்டம் மாறுவதற்கு ஏற்றபடி நல்லதாக ஒன்றைப் பணயம் வையும். ஜயம் உம் பக்கம் வரும்."

"என் அதிருஷ்டத்தை மாற்றக் கூடிய பணயம் என்ன?" என்றார் மெல்கியார் ஸிங்க்ளேர்.

"உமக்குப் பிடித்தமான வஸ்துவைப் பணயம் வையும்; உமக்கு மிகவும் பிடித்த 'வஸ்து' உம்முடைய பெண்தான். அவளைப் பணயமாக வையும். உம் அதிருஷ்டம் மாறும்" என்றான் போர்ஸ் பண்ணையின் அயோக்கிய எஜமான்.

"பயப்படாமல் அவளைப் பணயம் வைக்கலாம். ஆட்டத்தில் ஜயித்தாலும் நான் அவளை அழைத்துக்கொள்ள முடியாது" என்று சொல்லிச் சிரித்தான் கெஸ்டா.

பணக்கார மெல்கியார் ஸிங்க்ளேர் என்ன செய்வார்? அவரும் சிரித்தார். மரியாளின் பெயர் சூதாட்ட இடத்தில் அடிபடுவது சரி என்று படவில்லை அவருக்கு. ஆயினும், மரியாளைப் பணயம் வைத்துத் தோற்றுவிட்டால்தான் என்ன? கெஸ்டாவைக் காதலனாக ஏற்றுக்கொள்ள மரியாள் சம்மதிக்கவே மாட்டாள்; பணயம் வைக்கலாம் தைரியமாக.

"ஜயித்தால்மட்டும் போதாது. அவள் சம்மதித்தால், உங்கள் மணத்துக்கு நான் ஆசி கூறுகிறேன்" என்றார் மெல்கியார்.

தான் ஜயித்த பணத்தையெல்லாம் பணயமாக வைத்தான் கெஸ்டா. கெஸ்டாதான் ஜயித்தான். ப்யோர்ணின் சொந்தக்காரன், "போதும் ஆட்டம்" என்று சொல்லி எழுந்துவிட்டான்.

உன் உள்ளம் இப்போது துடிக்கிறதா? உன் விதி உனக்கே தெரியவில்லையா? ஒரு பெண்ணின் உள்ளத்தை அறிய முடியாத துரை நீ! சீட்டிலேயும் பணயமாக நீ அவளை இப்போது ஜயித்துவிட்டாய். விதி, காதல் இரண்டுமே நீ அவளை அடைய வழிகாட்டுகின்றன! எழுந்திரு! உன் உடைமையை ஏற்றுக்கொள்!

முடியாது; இன்று காதல் புரிகிற மாதிரியில் இல்லை கெஸ்டா. மனைவி என்று அவன் யாரையும் அடைய முடியாது.

இரவு வெகு நேரமாகிவிட்டது. அதோடு அன்றைய கேளிக்கைகள் முடிவடைந்திருக்க வேண்டியதுதான். வெளியே குதிரை வண்டிகளும் ரேக்ளாக்களும் கிளம்பத் தயாராக நின்றன. கிழச் சீமாட்டிகள் குளிரடக்கமாகத் தங்கள் கால் கைகளை இழுத்துப் போர்த்துக்கொண்டார்கள். முதிய ஆண்கள் தங்கள் வெளிக்கோட்டுகளை எடுத்து அணிந்துகொண்டார்கள். ஆனால் யுவர்களுகதும் யுவதிகளுக்கும் நாட்டியத்தை நிறுத்திவிட்டு வீடு திரும்ப மனமே இல்லை. புயல் அடிப்பதுபோல ஒரே வேகமாக நாட்டியம் ஆடினார்கள். ஒரு யுவன் ஒரு யுவதியை விட்டதும் வேறு ஒருவன் அவளை நாட்டியம் ஆட அழைத்தான்.

இந்த நாட்டியப் புயலில் கெஸ்டாகூட வந்து மாட்டிக்கொண்டான். நாட்டியம் ஆடித் துயரத்தையும் தன் தாழ்மை மனப்பான்மையையும் மறக்க முயன்றான்.

அவனோடு நாட்டியமாடிய பெண்மணி யார்? பிரமாதமான அழகி அவள்; மரியாள்தான்!

வெளியே சிண்டிராம் தன் ரேக்ளாவில் ஏறிக்கொண்டு விட்டான். கீழே அருகில் மெல்கியார் ஸிங்க்ளேர் நின்றார்.

"மரியாளைப் பணயம் வைத்து நீர் கெஸ்டாவுக்குத் தோற்றிருக்கக் கூடாது" என்றான் சிண்டிராம்.

சிண்டிராம் லகானைக் கையில் பிடித்துக்கொண்டான். சவுக்கை ஓங்கியபடியே, "நாடகத்தில் கடைசிக் காட்சியில் நடந்த தெல்

லாம் உண்மையில் நாடகத்தைச் சேர்ந்ததல்ல'' என்றான்.

இதைச் சொல்லிவிட்டுத் தன் ரேக்ளாவை ஓட்டிக்கொண்டு போய்விட்டான். அவனுக்குத் திரும்பிப் பார்க்கக்கூடத் தைரியம் வரவில்லை. மெல்கியாருடைய கோபம் பொல்லாதது என்று அவனுக்குத் தெரியும்.

ப்யோர்ண் பண்ணையின் சொந்தக்காரர் உள்ளே நாட்டியக் கூடத்துக்குப் போனார். மரியாளும் கெஸ்டாவும் நாட்டியம் ஆடிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். நாட்டியமா அது? என்ன பைத்தியக்காரத்தனமான கூத்து அது!

சிறிது நேரம் அவர்களையே பார்த்துக்கொண்டு நின்றார் மெல்கியார். ''சரி, அவள் நாட்டியம் ஆடட்டும்'' என்று சொல்லிவிட்டு வெளியே போனார். கதவை இழுத்து மூடிவிட்டுப் படிகளில் இறங்கி ரேக்ளாவில் ஏறி மனைவியுடன் வீடு நோக்கி விரைந்தார்.

நாட்டியமாடுவதை நிறுத்திவிட்டு மரியாள் வந்து பார்த்தபோது, அவளுடைய பெற்றோர்களைக் காணவில்லை.

அவள் யாரிடமும் எதுவும் சொல்லவில்லை. வெளியே போனாள். தன் ரேக்ளா காத்திருக்கிறது என்று எண்ணிப் போகிறவள் போலப் போனாள். தன் கஷ்டத்தைப்பற்றி அவள் யாரிடமும் சொல்லவில்லை. அந்தப் பனியிலே, குளிரிலே, மேல் கோட்டை இழுத்து இறுகப் பற்றிக்கொண்டே நடந்தாள். அவளைத் தாண்டிப் போன ரேக்ளாக்களில் இருந்தவர்களில் எவரும் அந்த இருட்டில் அவளை யார் என்று தெரிந்து கொள்ளவில்லை.

துயரம், பயம் என்கிற இரண்டு உணர்ச்சிகளும் அவளைத் தன் வீடு நோக்கி உந்தித் தள்ளின.

ஏக்பியிலிருந்து ப்யோர்ண் மாளிகைக்கு ஒன்றரை மைல் தூரம். சீக்கிரமே மரியாள் தன் வீட்டை அடைந்துவிட்டாள்.

வாசல் கதவை ஓங்கி ஓங்கித் தட்டினாள். வாசல் நாதாங்கியைப் பிடித்து உலுக்கினாள். யாரும் வந்து கதவைத் திறக்கவில்லை. நாதாங்கி அவளுடைய மிருதுவான கையைக் கிழித்து ரத்தக்காயம் உண்டாக்கியதுதான் மிச்சம்.

மெல்கியார் ஸிங்க்ளேர் வீடு திரும்பித் தம் ஒரே பெண்ணை வீட்டுக்குள் வரவொட்டாமல் தடுத்து நிறுத்திவிட்டார் தெருவிலே.

மதுவெறி! போதாததற்குக் கோபம் வேறு. கெஸ்டா பெர்லிங்கைக் காதலித்த தம் பெண்ணிடம் அவருக்குத் திடீரென்று அருவருப்பும் வெறுப்பும் தோன்றிவிட்டன. வேலைக்காரர்களைச் சமையல் அறையில் விட்டுப் பூட்டினார். மனைவியையும் அவளுடைய அறையில் தள்ளிப் பூட்டினார். ''யாராவது மரியாளுக்குக் கதவு திறந்துவிட்டால் கொன்றுவிடுவேன்'' என்றார். அவருடைய பெண் அந்தச் சமயம் அவருக்கு முன் இருந்தால் அவர் அடித்தே கொன்றிருப்பார்.

எத்தனை நகைகள் பண்ணித் தந்தார் அவளுக்கு! எத்தனை பட்டாடைகள் வாங்கித் தந்திருந்தார்! பண்பு, அறிவு, பயிர்ப்பு எல்லாம் அவள் கற்று அறியவேண்டும் என்று அவர் எவ்வளவு பாடுபட்டு, எவ்வளவு பணம் செலவு செய்தார்! குடும்ப கௌரவத்தின் கொழுந்து அவள்; அவருடைய உயிரே அவள்தான். ஹா! அந்த மரியாள்!

அவள் கெஸ்டா பெர்லிங்கிடம் ஆசை வைத்து அவனை முத்தமிட்டதற்காக அவளை அவர் வெறுக்க வேண்டுமா? அல்லது வீட்டுக்குள் அவளை விடலாமா? தன் பெருமையையும் சுய மதிப்பையும் இழந்துவிட்ட அவள் இனி அந்த வீட்டுக்குள் வரக்கூடாது! கூடாது! அவள் ஏக்பியிலே போய்த் தங்கட்டும்; அல்லது பனியிலே கிடந்து விறைக்கட்டும்!

தன் வீட்டு வாசல்கதவைத் தட்டிக்கொண்டு மரியாள் இன்னமும் நின்றாள்; கோபமாகத் தட்டினாள். சாய்ந்து அலுத்துப் போய் நாதாங்கியை உலுக்கினாள். தெருவில் மண்டியிட்டுக் கைகளைப் பிசைந்து கூப்பிக்கொண்டு மன்னிப்புக் கேட்டாள்.

யார் காதிலும் அவள் கூப்பிட்டது விழவில்லையா? யாரும் பதில் தரவில்லை; யாரும் கதவைத் திறக்கவில்லை.

பனி விழுந்து குளிர் நடுக்கிய இரவு. சுற்றிலும் நிச்சப்தமான காடு. வானில் நட்சத்திரங்கள் மின்னின. எல்லாரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். சுற்றிலும் இருந்த அமைதியைக் கலைத்தது அவள் ஒருத்திதான். உலகிலுள்ள துயரத்தை, சோகத்தை, கஷ்டத்தை எல்லாம் அவளுடன் பகிர்ந்துகொள்ள அப்போது வேறு யாரும் கண் விழித்திருக்கவில்லை. கடவுளே, என்ன கோரம் இது!

இன்னமுமா தகப்பன் தன் பெண்ணைச் சோதிப்பான்? வேறு யாராவது வந்து கதவைச் சீக்கிரம் திறக்க மாட்டார்களா?

''அப்பா! அப்பா! குளிர் நடுக்குகிறது; கதவைத் திற! இதென்ன பயங்கரம்?

''அம்மா - எனக்கு நீ எப்படியெல்லாம் உதவி செய்திருக்கிறாய்? நீயும் உறங்கிவிட்டாயா? உன் பெண் பனியிலும் குளிரிலும் காற்றிலும் வெளியே நிற்கிறாள் என்பதை மறந்துவிட்டு உறங்கிவிட்டாயோ? உனக்கு எந்தவிதமான துயரமும் வராமல் பார்த்துக் கொள்வேன், அம்மா-கதவைத் திற!''

கூவினாள்; மீண்டும் மௌனம் ஆனாள்; பதில் வருமோ என்று கவனித்தாள். யாரும் பதில் தரவில்லை. கைகளைப் பிசைந்து கொண்டாள். ஆனால் அவளுடைய கண்கள் ஈரம் வற்றி உலர்ந்தே இருந்தன.

என்ன அது! யாரோ வருகிற மாதிரி இருக்கிறது.

''அம்மாவா?''

''ஆமாம்; குழந்தாய்!''

''நான் இப்போது உள்ளே வரலாமா?''

''வரக்கூடாது என்று கதவை அப்பா பூட்டியிருக்கிறார்.''

''என் உடல் குளிரால் விறைக்கிறதம்மா; என்னை ஏன் விட்டு விட்டு வந்தாய்?''

''குழந்தாய், நீ கெஸ்டாவைக் கட்டி முத்தமிட்டதுதான் காரணம்.''

''நான் கெஸ்டாவைக் காதலிக்கவில்லை, அம்மா. ஏதோ விளையாட்டு! அவ்வளவுதான். அப்பாவிடம் சொல்லு, அம்மா. நான் கெஸ்டாவை மணக்க விரும்பவில்லை.''

''நம் காரியஸ்தரின் வீட்டிலே போய்ப் படுத்துறங்கு, மரியாள். அப்பா அளவுக்கு மீறிக் குடித்திருக்கிறார். இப்போது என்ன சொன்னாலும் அவருக்குக் காதில் ஏறாது. அவர் தூங்கியதும் வந்தேன். நான் உன்னை உள்ளே வர விட்டால் என்னைக் கொன்றே விடுவார்.''

''என்ன, அம்மா, இது? என் வீடு இருக்கும்போது நான் வேறு ஒருவருடைய வீட்டிலா போய் அநாதை மாதிரி படுத்துறங்குவது?''

மரியாளின் தாய் கதவைத் திறக்க வந்தாள். அதற்குள் மெல்கியாரின் உறுமலும் காலடிச் சப்தமும் கேட்டன. இரக்கமற்ற குரலில் அவளை அதட்டினார் மெல்கியார். மரியாளின் காதில் இது விழுந்தது. அம்மா கதவைத் திறக்காமலே உள்ளே போய்விட்டாள். அம்மாவை அப்பா உரக்கத் திட்டினார். பிறகு கழியால் அடித்த சப்தம் கேட்டது. அம்மாவின் அழுகுரல் கேட்டது.

துன்பத்தால் புழுப்போலத் துடித்தாள் மரியாள். பொங்கி எழுந்த அவளுடைய கண்ணீர் அவர்களுடைய வீட்டு வாசல்படியிலே விழுந்து உறைந்தது.

கோபத்துடன் மரியாள் மறுபடியும் கதவைத் தட்டினாள். உரக்கச் சொன்னாள்: ''இதைக் கேள்! என் அம்மாவைக் கையோங்கி அடித்த நீ..நீ..கேள். நீ அழுவாய்! துயர் தாங்காமல் நீ அழும் காலம் வரும். மெல்கியார் அழுவான் ஒரு நாள்''

இதைச் சொல்லிவிட்டு மரியாள் ஸிங்க்ளேர் பனிப்படுக்கையில் கால் நீட்டிப் படுத்துவிட்டாள். தன் வெளிக்கோட்டைக்கூடக் கழற்றி எறிந்துவிட்டாள். வெண்மையான பனியிலே அவ

ளுடைய கறுப்பு வெல்வெட் சட்டை பளிச்சென்று தெரிந்தது. காலையில் எழுந்து முதலில் அவளுடைய அப்பாதான் வருவார்; பெண் அங்கே கிடப்பதை அவர் பார்க்கவேண்டும் என்று எண்ணினுள் அவள்.

சாவே! நீயே உறுதுணைவன். உன் பிடியிலிருந்து மரியாள் தப்ப முடியாது என்பது உண்மை; திருப்தி தரும் உண்மை.

ஏக்பி மாளிகையிலே விளக்குகளை அணைத்தாகிவிட்டது. விருந்தாளிகள் எல்லாரும் போய்விட்டார்கள். கடைசியாகத் திறந்த மதுக் குடத்தைக் காலி செய்துகொண்டு உல்லாஸ புருஷர்கள், ஏக்பியின் கூடத்திலே தனியாக இருந்தார்கள்.

அப்போது கெஸ்டா கையில் மதுக்கிண்ணத்துடன் அழகிய பெண்மணிகளைப் புகழ்ந்து ஒரு பிரசங்கம் செய்தான்.

ஏக்பி கேளிக்கைக்கு வந்திருந்த அழகிகளின் வீடுகளுக்குப் போய் அவர்களுடைய ஜன்னல்களண்டை நின்று கீதங்கள் பாடிவிட்டுத் திரும்புவது என்று கெஸ்டாவுக்குத் தோன்றியது ஒரு புது யோசனை. இதை எல்லாரும் ஏற்ருர்கள்.

ஆனுல் அன்றிரவு ஏக்பி உல்லாஸ புருஷர்கள் அதிக தூரம் செல்லவில்லை. ஒன்றிரண்டு அழகிகளைப் பார்த்துப் பாடுவதற்குள்ளாகவே, ப்யோர்ன் பண்ணைக்கு வந்தார்கள். வீட்டு வாசலிலே பனியிலே கிடந்த மரியாளைக் கண்டார்கள். என்ன பயங்கரம்! உல்லாஸ புருஷர்களுக்குப் பயத்தாலும் ஆத்திரத்தாலும் உடல் நடுங்கியது. ஆலயத்தில் வைத்துப் பூஜை செய்யும் விக்கிரகத்தை உடைத்து யாரோ குப்பை மேட்டில் எறிந்துவிட்டதுபோல இருந்தது அவர்களுக்கு.

இருண்ட வீட்டை நோக்கித் தன் முஷ்டிகளை மடக்கி ஆட்டினுன் கெஸ்டா. பிறகு மரியாளின் பக்கத்தில் மண்டியிட்டான்.

''இதோ கிடப்பவள் என் மனைவி. பல மணி நேரத்துக்கு முன் எனக்கு என் மண முத்தம் ஈந்தாள் இவள். எங்கள் மணத்துக்கு ஆசி கூற இவளுடைய தகப்பன் சம்மதித்தான். எனக்காகத்தான் இவள் இந்தப் பனிப்படுக்கையிலே படுத்துக் காத்திருக்கிருள்'' என்று சொல்லிப் பலம் பொருந்திய கைகளால் அவளை எடுத்தான்.

''நாம் இவளை ஏக்பிக்கு அழைத்துச் செல்வோம். இவள் எனக்கே சொந்தமானவள். நான் கண்டெடுத்த புதையல் இவள். இவள் வீட்டிலுள்ள யாரையும் நாம் எழுப்ப வேண்டாம். திறக்காத கதவை மோதிக் கையைக் காயப்படுத்திக்கொண்ட இவளுக்கும் இந்த வீட்டுக்கும் இனி ஒரு சம்பந்தமும் கிடையாது'' என்ருன்.

அவன் இஷ்டப்படி செய்வதை யாரும் தடுக்கவில்லை. முதல் ரேக்ளாவில் அவளைப் படுக்க வைத்துத் தானும் ஏறிக்கொண்டான் கெஸ்டா. பின்னுல் உட்கார்ந்து வண்டிக்காரப் பிரன் க்ரட்ஸ் லகாணைக் கையில் பிடித்தான்.

அவளுடைய அங்கங்கள் பனியால் மரத்துப் போயிருந்தன. அவ்வளவுதான். அவளுடைய இருதயம் வேகமாக அடித்துக்கொண்டது. அவள் பிரக்ஞையைக்கூட இழக்கவில்லை. அசையவோ பேசவோ அவளால் முடியவில்லை. உல்லாஸ புருஷர்கள் வந்து தன்னைக் கண்டு எடுத்ததை அவள் உணர்ந்தாள். கெஸ்டாவின் வார்த்தைகள் அவளுடைய காதிலும் விழுந்தன. ரேக்ளாவில் அசைவற்றுக் கிடந்தாள் அவள். சிலசமயம் பனியை அள்ளி அவள் உடலில் சூடு பரக்கத் தேய்த்தான் கெஸ்டா. சில சமயம் தன் கண்ணீர் அவள் மேல் சூடாக விழ அழுதான். சில சமயம் அவளை இறுகக் கட்டி அணைத்து முத்தமிட்டான். ஒரு கையையாவது அசைத்து அவனை அணைத்துப் பதில் முத்தம் இடவேண்டும் என்றிருந்தது அவளுக்கு. ஆனுல் அதற்குச் சக்திதான் இல்லை.

அவளுக்கு எல்லாமே சரியாக ஞாபகத்தில் இருந்தன. அசைய மாட்டாமல் விறைத்துப் போய்க் கிடந்தாளே தவிர, அவள் வழக்கத்தைவிட அதிகத் தெளி

வாகவே சிந்தித்துக்கொண் டிருந்தாள். கெஸ்டா பெர்லிங்கை அவள் காதலித்தாளா? ஆமாம், அதில் சந்தேகத்துக்கு இடமே இல்லை.

மரியாள் ஸிங்க்ளேரின் வாழ்வு ஒரு நாடகம். அதைப் பார்க்க வேறு யாருமில்லை; அவளேதான் பார்த்துக் களித்தாள்.

பிப்ரவரி மாதம் முழுவதும் அவளுக்கு உடம்பு சரியாக இல்லாமல் ஏக்பியில் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். அம்மை என்கிற தொத்துநோய் அவளைப் பிடித்துக்கொண்டுவிட்டது. அதன் வேகம் அவளைப் பல நாள் ஆட்டி வைத்தது. அன்றிரவு பனியில் கிடந்து சில்லிட்டுப் போயும் ஓடி அலைந்து பலவீனமாகவும் இருந்தாள். பெரியம்மையை எதிர்த்துப் போராட அவளுடைய உடலில் தெம்பில்லை. சாவே அவளை அணுகியது. ஆனல் மாதக் கடைசியில் உடல் கொஞ்சம் தேறியது. அவள் பலவீனமாக இருந்தாள். அவளுடைய முகம் கறுத்துவிட்டது. புள்ளி புள்ளியாக அவள் முகத்தில் தழும்புகள் தோன்றிவிட்டன. இனி அவளை யாரும் அழகி என்று சொல்ல மாட்டார்கள். வார்ம்லாந்து முழுவதும் இந்தத் துன்பம் தரும் செய்தி வெளியாகி அவர்களைச் சோகத்தில் ஆழ்த்தும் என்பது நிச்சயம்; வார்ம்லாந்தின் சிறந்த ஐசுவரியங்களில் ஒன்று அழிந்துவிட்டது போலத்தான்-இல்லையா?

அவளுக்கும் தெம்பு சிறிது வந்த பிறகு ஒருநாள் அவள் படுத்திருந்த அறையை எல்லாம் சுத்தம் செய்தாள்; கெஸ்டா பெர்லிங்கைப் பார்க்கவேண்டும் என்று கூப்பிட்டனுப்பினுள். அவன் ப்யோரணில் ஏலத்துக்குப் போயிருப்பதாகத் தகவல் கிடைத்தது.

உண்மையில் ப்யோர்ணில் பெரிய ஏலம் ஒன்று நடந்துகொண்டுதான் இருந்தது. பணக்காரப் பண்ணை அது! பழைய பண்ணை; அதிலே ஏராளமான சாமான்கள் இருந்தன. அகப்பட்டதை வாங்குவதற்கு ஏராளமான பேர் அங்கே கூடியிருந்தார்கள்.

வீட்டில் இருந்த சாமான்கள் எல்லாவற்றையும் ஏலம் போட முன் கூடத்தில் கொணர்ந்து சேர்த்துவிட்டார் மெல்கியார் ஸிங்க்ளேர். ஆயிரக்கணக்கான சாமான்கள் இருந்தன. பல சாமான்கள் அபூர்வமானவை; விலையுயர்ந்தவை; சாதாரணமாகக் கிடைக்காதவை. அவற்றைக் குப்பை கூளத்தைக் கூட்டுவிப்பதுபோலத் தரையிலிருந்து கூரைஎட்டக் குவித்திருந்தார்.

மரியாளின் அறையில் அவர் எதையும் விட்டு வைக்கவில்லை. அவளுடைய விளையாட்டுச் சாமான்கள் வைத்திருந்த பீரோவைக் கூட ஏலம் போடக் கொண்டு வந்துவிட்டார். அவளுக்கென்று பிரத்தியேகமாக ஆர்டர் கொடுத்துச் செய்திருந்த சிறிய நாற்காலியையும் கொணர்ந்து விட்டார். அவளுடைய ஆடைகள், நகைகள், அவளுடைய படுக்கை எல்லாம் போய்விட வேண்டியது தான்.

அறையின் குறுக்கே ஒரு மேஜை போட்டார்கள். ஏலம் விடுகிறவன் அதற்குப் பின்னல் நின்று சாமான்களைக் கூறினன். பக்கத்தில் ஒரு பீப்பாய் சாராயத்துடன் உட்கார்ந்திருந்தார் மெல்கியார். ஏலம் எடுக்க வந்தவர்கள் அறைக்குள்ளும், அறைக்கு வெளியே முற்றத்திலும் நின்ருர்கள். ஏகப்பட்ட பேர் வந்திருந்தார்கள். சந்தடியும் சிரிப்பும் பேச்சொலியும் அதிகமாகத்தான் இருந்தன. ஏலம் வேகமாகவே நடந்தது. ஒவ்வொரு சாமானுக விலை கூறி வாங்கினுர்கள். மெல்கியார் அரைப் பைத்தியம் மாதிரி நடந்துகொண்டார்-சிறிது நேரத்துக்குள்ளாகவே மிதமிஞ்சிக் குடித்து விட்டார். அவருடைய தலைமயிர் பைத்தியக்காரனின் தலைமயிர் மாதிரி குத்திட்டு நின்றது; கண்கள் ரத்தச் சிவப்பாக இருந்தன. அவர் உரக்கக் கூவிப் பேசிச் சிரித்து, எல்லாருடனும் சுமுகமாக இருப்பதுபோல் காட்டிக்கொண்டார். அவருடைய மனத்தில் இருந்த

கோபம் கட்டிலடங்கவில்லை; ஒவ்வொரு சாமானையும் வாங்கினவனைக் கூப்பிட்டு ஒரு கின்னம் மதுக் கொடுத்தார் மெல்கியார்.

அவரை இந்த ஆவேசத்தில் கண்டவர்களில் கெஸ்டா பெர்லிங்கும் ஒருவன். கூட்டத்திலே அவனும் வந்திருந்தான். ஆனால் மெல்கியாரின் கண்ணில் அவன் படவில்லை. ஏலக்காட்சி அவனை எல்லையில்லாத் துக்கத்தில் ஆழ்த்தியது. இதெல்லாம் ஏதோ பிரமாதமான ஒரு சோக நாடகத்தின் முன்னோடி என்று தோன்றியது அவனுக்கு.

மரியாளின் தாயைக் கெஸ்டா தேடினான். பல அறைகளையும் தாண்டிப் போய்க் கடைசியில் அவளை உக்கிராண அறையில் கண்டு பிடித்தான்.

''மாமி, இதெல்லாம் என்ன? எதற்காக இப்படி மாமா ஏலம் போடுகிறார்?''

''மரியாள் திரும்பவில்லையே என்கிற கோபந்தான் அவருக்கு. அவளுக்காக இவ்வளவு நாள் காத்திருந்தார். பெண் வராத ஏக்கத்திலேயே பைத்தியக்காரர் ஆகிவிட்டார். எனக்கோ எதுவும் சொல்லத் தைரியம் கிடையாது'' என்றாள் மெல்கியாரின் மனைவி.

''மரியாள் என்னை மணம் செய்துகொள்ளப் போகிறாள் என்கிற விஷயம் மாமிக்குத் தெரியுமோ?''

''ஏ கெஸ்டா, உன்னை அவள் ஒருகாலும் மணந்துகொள்ள மாட்டாள்! அவருக்கு ஆத்திர மூட்டுவதற்காகவேதான் அப்படிச் சொல்கிறாள். ஏழையைக் கல்யாணம் செய்துகொள்ள அவளால் முடியாது - அவள் பெருமைக்காரி; பணக்காரியாக வாழப் பழகியவள். உன்னைப்போன்ற ஏழையை அவள் கல்யாணம் செய்துகொள்வது சாத்தியமே இல்லை. இப்போதே போய் அவளிடம் சொல்லு; அவள் சீக்கிரம் திரும்பாவிட்டால் இங்கே ப்யோர்னில் எல்லாம் பாழ்த்துவிடும் என்று சொல்லு.''

கெஸ்டா நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவளிடம் எப்படிக் கோபம் வந்தது அவனுக்கு! அப்பாவி அவள்! பயந்த சுபாவம் உள்ளவள். ஆனால் அவள் மனசிலே கல்மஷம் இல்லை. இரக்கமான சுபாவம் உள்ளவள் அவள்.

''மரியாளுக்கு உடம்பு எப்படி இருக்கிறது என்று மாமி விசாரிக்கவில்லையே?'' என்றான் கெஸ்டா.

அவள் அழவே தொடங்கிவிட்டாள்.

அவன் அவளிடம் உண்மையைச் சொன்னான்.

''இத்தனை நாளும் மரியாள் உடம்பு சரியாக இல்லாமல் படுத்த படுக்கையாகவேதான் இருந்தாள். அவளுக்குப் பெரியம்மை போட்டிருந்தது. இன்றுதான் எழுந்து உட்கார்ந்தாள்'' என்றான் கெஸ்டா.

உடனே சமையலறையை விட்டு ஓட்டமும் நடையுமாக வெளியேறினாள் குஸ்தாவா. தன் கணவரைத் தேடிக்கொண்டு ஓடினாள். ஏலம் நடந்துகொண்டிருந்த அறைக்குள் அவள் ஓடிவந்ததைப் பார்த்து அங்கிருந்தவர்கள், 'ஏதோ விசேஷம் இருக்கிறது; ஏலம் நின்றுவிடும்' என்று எண்ணினார்கள். அவள் நேரே தன் கணவரண்டையில் போய் அவர் காதில் ஏதோ ரகசியம் சொன்னாள்.

மறுநாள் மெல்கியார் ஸிங்க்ளேர் அதிகாலையில் தம் மனைவியிடம், ''குஸ்தாவா, எல்லாவற்றையும் சரிவர எடுத்துவை. வீட்டை நேர் செய்துவிடு. நான் போய் மரியாளை அழைத்து வருகிறேன்'' என்று சொன்னார்.

''சரி, எல்லாவற்றையும் நீங்கள் வருமுன் சரிப்படுத்திச் சுத்தப்படுத்தி வைத்துவிடுகிறேன்'' என்றாள் அவருடைய மனைவி.

ஒரு மணி நேரத்துக்குள்ளாகவே அவர் ஏக்பி நோக்கிக் கிளம்பிவிட்டார்.

சிறிது நேரத்துக்குள்ளாகவே வண்டி ஏக்பியின் முன் வாசலில் வந்து நின்றது.

ஒரு வேலைக்காரன் வெளியே வந்தான்.

''உன் எஜமானர்கள் எங்கே?''

''குர்லிடா குன்றில் கரடி வேட்டையாட எல்லாரும் போயிருக்கிறார்கள்.''

''போய் என் பெண்ணிடம் சொல். அவளை அழைத்துப் போக நான் வந்திருப்பதாகச் சொல்.''

வேலைக்காரன் உள்ளே போனான். சற்று நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து, அவருடன் மரியாள் பேச விரும்புவதாகச் சொன்னான்.

அலுத்துக்கொள்ளாமல், கம்பளியைக் கைமேல் மடித்துக்கொண்டு, படியேறி உள்ளே போனார் மெல்கியார்.

மரியாளுக்கு அவருடைய காலடிச் சப்தம் கேட்டது.

அவர் வருமுன், அறையில் ஜன்னல் கதவுகளை எல்லாம் திறக்கச் சொன்னாள். வெளிச்சம் தன்னுடைய அழகற்ற முகத்திலே படும்படி உட்கார்ந்துகொண்டாள். தன் அழகு போய்விட்டது என்று கண்டபின் அவர் என்ன செய்வார் என்று அறிய அவள் விரும்பினாள். ஆனால் அன்று மெல்கியார் ஸிங்க்ளேர் புது மனிதராக மாறியிருந்தார்.

அவளைப் பார்த்ததும் அவர் 'ஹா' என்று அலறவில்லை. ஆச்சரியப்பட்டதாகவும் காட்டிக்கொள்ளவில்லை. அவளிடம் எந்த வித மாறுதலையும் காணாதவர்போல இருந்துவிட்டார். அவருக்குத் தன் அழகிலே அளவற்ற பெருமை உண்டு என்பதை மரியாள் அறிவாள். இப்போது அது போய்விட்டதுபற்றி அவர் துக்கம் தெரிவிக்கவில்லை. 'அவளுக்குத் துயரம் தரும்படி எதுவும் சொல்வதில்லை; எதுவும் செய்வதில்லை' என்று தீர்மானித்து விட்டவர்போல அவர் நடந்துகொண்டார். இது அவளுடைய உள்ளத்தைத் தொட்டது. தன் தாய்க்கு அவரிடம் அன்பு இருந்தது எதனால் என்பதை அவள் இப்போதுதான் புரிந்துகொண்டாள்.

''ஒநாய்க் கம்பளியைப் போர்த்துக்கொள், மரியாள். கம்பளி என் மடியிலேயே கிடந்ததனால் உஷ்ணமாகத்தான் இருக்கிறது'' என்றார் மெல்கியார்.

அவளைத் தூக்கி உட்காரவைத்து அவளுக்கு அதைப் போர்த்துவிட்டார். தலையில் ஒரு கம்பளித் துண்டைக் கட்டினார். அவள் அசையச் சக்தியிழந்து பேசமுடியாமல் இருந்தாள். இப்படி இருப்பது நல்லது என்று தோன்றியது அவளுக்கு.

மெல்கியார் அவளைக் குழந்தைபோலத் தம் கைகளால் தூக்கி வண்டியில் கொண்டுபோய் உட்காரவைத்தார். ஏக்பியிலிருந்து அவளுடன் கிளம்பினார்.

அவள் கண்களை மூடிக்கொண்டு பெருமூச்சுவிட்டாள். திருப்திதான் அவளுக்கு. அதே சமயம் கவலையாகவும் துக்கமாகவும் இருந்தது. உண்மையான வாழ்வைத் துறந்து அவள் பழைய வாழ்வுக்குத் திரும்பிக்கொண் டிருந்தாள் - அதுபற்றி வருத்தமாகத்தான் இருந்தது அவளுக்கு.

இதற்குச் சில நாட்களுக்குப் பிறகு, கெஸ்டாவைப் பார்க்க அவளுடைய தாய் ஏற்பாடு செய்தாள். மரங்கள் அடுக்கியிருந்த காட்டுக்கூடத்துக்கு மெல்கியார் போயிருந்த சமயம் பார்த்து, கெஸ்டாவை ப்யோர்னுக்கு அழைத்து வந்தாள் குஸ்தாவா.

அறைக்குள் கெஸ்டா வந்தான். மரியாளை வணங்கவுமில்லை; அவளுடன் தானாகப் பேசவும் இல்லை. பள்ளிக்கூடத்துப் பையன், தவறு செய்துவிட்டு ஆசிரியர் எதிரில் தலைகுனிந்து நிற்பது போல, அறைக்கதவண்டை நின்றான்.

''என்ன கெஸ்டா, இது!'' என்றாள் மரியாள். அரைச் சிரிப்புடன் அவனையே பார்த்துக்கொண்டு நாற்காலியில் சாய்ந்திருந்தாள் மரியாள்.

''ஆமாம்; கெஸ்டா என்பதுதான் என் பெயர்.''

''இங்கே வா; கிட்ட வா, கெஸ்டா.''

மெதுவாக நெருங்கி வந்தான் கெஸ்டா. ஆனால் நிமிர்ந்து அவளைப் பார்க்கவில்லை.

''இங்கே வா; இப்படி மண்டியிடு.''

''இதெல்லாம் எதற்காக?'' என்று கூவினான் அவன். ஆயினும் அவள் சொன்னபடி செய்தான்.

''கெஸ்டா, நான் என் அப்பாவுடன் வீடு திரும்புவதுதான் நல்லதென்று எண்ணினேன், கெஸ்டா.''

"அவர் மீண்டும் தம்முடைய பெண்ணைப் பனியிலே படுக்க விட்டுக் கதவைத் தாழிடமாட்டார் என்று நம்பலாமா?"

"என்னை நீ காதலிக்கவில்லையா, கெஸ்டா? நான் அவ்வளவு குரூபி ஆகிவிட்டேனு?"

அவளுடைய தலையை இரு கைகளாலும் பிடித்து உதடுகளில் முத்தமிட்டான் கெஸ்டா. ஆனால் அவள் முன்போலவே உணர்ச்சியற்றவளாக மரம்போல நின்ருள்.

அவளுக்கு நிஜமாகவே சிரிப்பு வந்தது. வேடிக்கையாக இருந்தது. தன் பெற்ருேர்பற்றி அவன் பொருமைப்பட ஆரம்பிப்பதும் வேடிக்கைதான்! அது மறைந்துவிடும். அவனை அவள் மீண்டும் வென்று தன்னைக் காதலிக்கும்படி செய்துவிடலாம். அவனுடைய அன்பை மீண்டும் அடைய விரும்பினுள் அவள். எதற்காக? அவளுக்கு அவனிடம் அன்பில்லை - ஆனாலும் அவனுடைய அன்பை வேண்டினுள் அவள். அவளுடைய உணர்ச்சி மிக்க அந்த இரவு அவளுக்கு நினைப் பிருந்தது. உணர்ச்சியற்ற ஜடமா யிருந்த தன்னை உயர்த்தி உணர்ச்சியூட்ட, அவன் தேவை என்பதை உணர்ந்தாள். அவன் ஒருவனுல்தான் அந்தக் காரியம் சாத்தியமாகும். அவனுடன் ஒரு வேகத்துடன் பேசத் தொடங்கினுள் அவள். அவனை விட்டுவிட்டு வருகிற உத்தேசம் தனக்கில்லை என்ருள். ஆனால் மணம் செய்துகொள்வது- ஆலயத்தில் திருமண முன்னறிவிப்புச் செய்துகொள்வது - என்பதை அவர்கள் சிறிது காலம் மறப்பது நல்லது என்ருள். அப்படி ஏதாவது தீர்மானமாகச் செய்துவிட்டால் அப்பாவுக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடித்துவிடும் என்ருள். "அம்மாவை அப்பா கொன்ருலும் கொன்றுவிடுவார்; நான் வீடு திரும்புவது அவசியமாகிவிட்டது. புரிந்ததா, கெஸ்டா?" என்ருள்.

பிறகுதான் அவன் தன் கோபத்தை வார்த்தைகளில் கொட்டினுன். அவள் பாசாங்கு செய்யவேண்டிய அவசியம் எதுவுமில்லை; அவளுடைய விளையாட்டுப் பொம்மையாக இருக்க அவன் விரும்பவில்லை. வீடு திரும்பலாம் என்கிற நிலைமை ஏற்பட்டதும் அவள் அவனுடைய தன்மையையும் காதலையும் புறக்கணித்துவிட்டு வந்துவிட்டாள். அதற்குப் பிறகு அவனுல் அவளைக் காதலிப்பது என்பது முடியாது. விடைகூடப் பெற்றுக்கொள்ளாமல் கிளம்பிவிட்டாளே! வேட்டையிலிருந்து அன்று திரும்பிய கெஸ்டா அவளைத் தேடியபோது விஷயத்தை அறிந்துகொண்டான். அவனுடைய துயரம் எல்லையற்றதாயிற்று. அதற்குப் பிறகு அவனுல் அவளைக் காதலிக்க இயலாது. அவளுக்கு அவனிடம் உண்மையில் காதல் இல்லை. அவளுடைய அன்போ காதலோ இனிமேல் கெஸ்டாவுக்குத் தேவையில்லை.

"காதல் வாழ்வது காதலால் தான்; அதைப் பண்டமாற்ருே பேரமோ செய்ய முடியாது" என்ருன் கெஸ்டா.

"நாம் முன்போல இல்லாமல், அந்நியர்கள்போல உறவாட வேண்டும் என்கிருயா?"

"ஆமாம்."

"வேண்டாம், கெஸ்டா. என்னிடம் கோபித்துக்கொண்டு போகாதே! நான் இப்போது அழகியல்ல. நீயே என்னைப் புறக்கணித்தால் வேறு யார் எனக்கு அடைக்கலம்?"

"நானும் அடைக்கலம் தந்து அன்புகாட்டத் தயாராக இல்லை. அன்பை உதாசீனம் செய்து படுகிறவர்கள் படும் கஷ்டத்தையெல்லாம் நீ பட்டே ஆகவேண்டும்."

"உன்னைத் தவிர வேறு யாரையும் என் ஆயுளில் நான் காதலித்ததில்லை, கெஸ்டா. என்னை மன்னித்து ஏற்றுக்கொள். என்னைக் காப்பாற்றக்கூடியவன் நீ ஒருவன்தான்."

அவளை உதறித்தள்ளினுன் அவன். "நீ பொய் சொல்லுகிருய்; என்னிடம் உனக்கு ஒரு வேலையும் இல்லை; என்னுல் உனக்கு ஆகவேண்டியது ஒன்றும்இல்லை. நான் எதற்கு?

உனக்கு அழகில்லாவிட்டால் என்ன? பணம் இருக்கிறது. ஏராளமான காதலர்கள்'நான்', நீ' என்று போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள். நான் எதற்கு?''

பிறகு, கெஸ்டா போய்விட்டான்.

ஒரு நாள் அழகிய அதிகாலை நேரத்தில் பிரபு ஆட்ரியன் நேர்த்தியான ஒரு குதிரைமேல் ஏறி வந்து சேர்ந்தான். அவனுடைய ராணுவக் கோட்டு, சூரிய ஒளியில் பளபளத்தது. அவனுடைய கால் அணிகளும் கத்தியும் கச்சையும் ஜோராக மெருகேற்றப்பெற்றுச் சூரிய ஒளியை வாங்கிப் பிரதிபலித்தன. அவற்றுடன் போட்டியிடுவது போல அவனுடைய கண்களும் ஜொலித்தன. வாசல்படியில் நின்ற மெல்கியார் அவனை வரவேற்றார்.

மரியாள் ஜன்னல் படியில் உட்கார்ந்து தையல் வேலை செய்துகொண்டிருந்தாள். அவன் வந்ததையும், அப்பா வரவேற்றதையும், அவர்களிருவரும் பேசிக்கொண்டதையும் அவள் கவனித்தாள்.

''பிரபுவே, சூரிய ஒளி போன்றவரே, வாரும்; எவ்வளவு நேர்த்தியாக மாப்பிள்ளைபோல வருகிறீர்! வாரும். பெண் தேடி வருகிறீரா?''

''ஆமாம், மாமா; ஆமாம். பெண் தேடியே வந்தேன்.''

''அட, உனக்கு வெட்கமாக இல்லையா, இப்படிச் சொல்ல? உன்னை மணம் செய்துகொள்பவளுக்கு இருக்க வீடு, உண்ண உணவு, உடுக்க உடை எல்லாம் தர உன்னிடம் என்ன இருக்கிறது?''

''ஒன்றுமில்லை, மாமா; ஒன்றுமே இல்லை. பணம், சொத்து என்று ஏதாவது இருந்தால் நான் கல்யாணமா செய்துகொள்வேன்?''

''அப்படியா? அப்படியானல் இந்தக் கோட்டும் கத்தியும் ஏது? இவையெல்லாம் எப்படிக் கிடைத்தன?''

''கடனுக்கு வாங்கினேன், மாமா.''

''உன் குதிரையும் நல்ல குதிரைதான்; விலை உயர்ந்தது.''

''குதிரை என்னுடைய தல்ல.'' பணக்கார மெல்கியாருக்கு இதற்குமேல் தாங்கவில்லை.

''கடவுள் உன்னைக் காப்பாற்றுவார். பணம் கொண்டு வருகிற பெண்ணைப் பார்த்து நீ கல்யாணம் செய்துகொள்வது அவசியந்தான். மரியாள் உன்னை மணக்கச் சம்மதித்தால் எனக்கு ஓர் ஆட்சேபமும் இல்லை.''

குதிரையிலிருந்து ஆட்ரியன் இறங்கு முன்பே, இருவரும் இப்படியாக ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள். மெல்கியாருக்குத் திருப்திதான்; ஏனென்றால், என்ன இருந்தாலும் ஆட்ரியன் நல்ல பையன். சற்று நேரம் கழித்து ஆட்ரியன் மரியாளை அணுகி அவசரம் அவசரமாக விஷயத்தைப் பிரஸ்தாபித்தான்.

''அருமை மரியாள், நான் மாமாவிடம் சொல்லி அவருடைய சம்மதம் பெற்றுவிட்டேன்; நீ என்னை மணம் செய்துகொள்ளச் சம்மதிப்பாயா? சரி என்று சொல்லு, மரியாள்'' என்றான்.

அவன் வாயிலிருந்தே உண்மையை அவள் கிரகித்துக்கொண்டாள். பெரிய பிரபுவான அவனுடைய தகப்பனைச் சிலர் ஏமாற்றிக் காலிச் சுரங்கங்கள் பலவற்றை அவன் தலையில் கட்டிவிட்டார்கள். பெரிய பிரபுவுக்குச் சுரங்கங்கள் வாங்கி அவற்றில் நஷ்டம் அடைவதுதான் வாழ்க்கைச் சாதனம். நாளடைவில் அவனுடைய ஆஸ்திகளெல்லாம் குறைந்துவிட்டன. கடன்கள் அதிகரித்துவிட்டன. அம்மா கவலைக் கடலில் மூழ்கியிருந்தாள். ஆட்ரியனை ஏற்று மரியாள் மணம் செய்துகொண்டால் அவனுடைய குடும்பம் கரையேறும்-அவன் வழக்கப்படி வாழ்க்கை நடத்தலாம்-ஜோராக உடை உடுத்து, அழகான குதிரை ஏறி, உல்லாசமாக வாழலாம்.

அவனுடைய பண்ணையின் பெயர் ஹெடெபி - அது பழங்காலத்துச் சாமானியப் பண்ணை. ஏரியின் எதிர்கரையில், ப்யோர்னுக்கு நேர் எதிரே இருந்தது. மரியாளுக்கு அவனை நன்றாகவே தெரியும். இருவரும் சம வயசுதான்; குழந்தைப் பருவத்தில் ஒன்றாக

விளையாடியவர்கள். ''என்னைக் கலியாணம் செய்துகொள், மரியாள். என்னைக் காப்பாற்று. இல்லாவிட்டால் என் வாழ்க்கை குலைந்துவிடும்; குதிரைகளை இரவல் வாங்கி, தையல்காரனுக்குப் பணம் தர முடியாமல் அவஸ்தைப்பட வேண்டும் நான். இப்படி அதிக நாள் கடத்த முடியாது! வேறு வழி இல்லாமல் தற்கொலை செய்துகொள்ள வேண்டியதுதான்'' என்ருன் அவன்.

''ஆனல், ஆட்ரியன், காதல் இல்லாமல் கல்யாணம் செய்துகொள்வது என்ன கல்யாணம்? அது சரிப்பட்டு வருமா?''

''காதலா? அதெல்லாம் பைத்தியக்காரத்தனம்'' என்ருன் ஆட்ரியன்,

நாணயஸ்தன் அவன். அவனுடைய கண்களே அதை அவளுக்கு அறிவுறுத்தின. அவனைப் பூர்ணமாக நம்பலாம். அவன் உண்மையேதான் பேசினன், எதையும் மறைக்கவில்லை. அவனைக் கல்யாணம் செய்துகொள்ள அவள் சம்மதித்தாள். எப்படியாவது தன் வீட்டை விட்டு வெளியேறிவிட்டால் போதும் என்று இருந்தது அவளுக்கு. தவிரவும், அவனை அவளுக்குப் பிடிக்கவில்லை என்றும் சொல்ல முடியாது.

பிரபு ஆட்ரியன் நாளுக்கு நாள் அமைதியும் சாந்தமும் பெற்றவனுனன். அடிக்கடி அவன் வந்து மரியாளைப் பார்த்துவிட்டுப் போனன். சில சமயம் ஒரே நாளில் பல தடவை வந்தான்.

மற்றவர்களுடன் ஹாஸ்யமாகப் பேசிக் கலகல என்றிருப்பான். அவளுடன் இருக்கும்போது மௌனமாக இருப்பான். காரணம் இருக்கும் இந்த மௌனத்துக்கு என்று எண்ணினள் மரியாள். அழகில்லாதவளை மணம் செய்துகொள்வதென்பது துயரமுண்டாக்கக்கூடிய விஷயந்தான். இப்போது அவனுக்கு அவளிடம் வெறுப்பே வந்துவிட்டதுபோலத்தான் இருந்தது. அவளுக்கே தெரியும்: முன்னே எவ்வளவு அழகியாக இருந்தாளோ அவ்வளவுக்கவ்வளவு அழகில்லாத குரூபியாக இருந்தாள் இப்போது. அவன் தன்னைக் காதலிப்பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை; அவளை மணந்துகொண்டு அவன் அவஸ்தைப்படுவான் என்பது தெளிவாகவே தெரிந்தது. இப்படி அவஸ்தைப்படுவானேன்? இந்தக் கல்யாணம் வேண்டாம் என்று அவனே முடிவு கட்டிச் சொல்லிவிடலாமே! அவளாக என்ன செய்ய முடியும்? அவள் இதைக் குறிப்பாகச் சொல்லிக்கூடப் பார்த்துவிட்டாள். இந்தக் கலியாணம் நடைபெருவிட்டால் மெல்கியார்தான் வெகுவாகச் சிரமப்படுவார். அதற்குப் பிறகு அவளுக்குக் கல்யாணமே ஆகாது என்பது அவருடைய அபிப்பிராயம். தன் தகப்பனுரிடமும், கணவனுகப் போகிறவனிடமும் எல்லையற்ற அலட்சியம் தோன்றியது அவளுக்கு. திருமண நிச்சய விருந்து நடந்த சில நாட்களுக்குள்ளாகவே எதிர்பாராமலே முடிவு வந்துவிட்டது; ஆச்சரியப் படும்படியாக வந்துவிட்டது!

ஒருநாள் காலை உணவு அருந்தும் போது ரொட்டிக் கத்தியை அவள் கையில் எடுத்தாள். சுயப்பிரக்ஞை இல்லாமலே அவள் அதைத் தூக்கினுள்.

அவளுடைய கையைப் பிடித்தாள் குஸ்தாவா: ''மரியாள்?''

''என்ன, அம்மா?''

''ஏ மரியாள்? ஏன் உன் முகம் இப்படி மாறியிருக்கிறது, பயங்கரமாக? எனக்குப் பயமாக இருக்கிறது!''

மரியாள் தன் தாயையே வெகு நேரம் உற்றுப் பார்த்தாள். அவள் ஒட்டி உலர்ந்த கிழவி. அவளுக்குத் தலை நரைத்துவிட்டது. முகமெல்லாம் சுருக்கங்கள் விழுந்திருந்தன. வயசு ஐம்பதுதான். ஆனுலும் அவள் அதிக வயசாகிவிட்டவள் போல இருந்தாள். நாய்போல வாழ்க்கை நடத்தினுள் - கணவரிடம் கிடைக்கிற அடி உதைகளை அவள் கணக்குப் பண்ணுவதில்லை.

''அப்பா இறந்துவிட்டால் நீ மிகவும் துக்கப்படுவாயா, அம்மா?''

''மரியாள், என்ன இது! ஏன் உன் அப்பாவிடம் இவ்வளவு கோபம்? புதுக் காதலன் பெற்றுவிட்ட நீ கோபம் ஆருமல் இருப்

பது ஏன்?'' என்று கேட்டாள் குஸ்தாவா.

''என்னால் அந்தக் கோபத்தைத் தவிர்க்க முடியவில்லை, அம்மா! நான் என்ன செய்ய? அப்பாவைக் கண்டாலே எனக்குப் பயமாக இருக்கிறது. அப்பாவின் சுபாவம் உனக்கும் தெரியாமலா இருக்கிறது? கரடிதான். என்ன கோபம்! என்ன மிருகத்தனம்! ஐம்பது வயசு ஆவதற்குள்ளாகவே நீ கிழவி ஆகி விட்டாய்! நாம் என்ன, அடிமைகளா? பைத்தியத்துடன் வாழப் பிறந்தவர்களா? நான் எப்படி அவரை மதித்து நடக்க முடியும்?''

''ஜாக்கிரதை, மரியாள்! உன்னை வீட்டுக்குள் விடாமல் கதவை அடைத்தது சரிதான் என்று நானும் எண்ணும்படி செய்து விடாதே! வெறுப்பில்லாமல், எதையும் சகித்துக்கொள்ளும் தெம்பு வேண்டும் உனக்கு. வஞ்சம் என்கிற நினைப்பு இல்லாமல் நீ வாழக் கற்றுக்கொள்வது அவசியம்!''

''அம்மா, என் துயரம் சொல்லி மாளாது, போ.''

இதற்குப் பிறகுதான் அது நடந்தது. முன் கூடத்தில் தடாலென்று ஒரு சப்தம் கேட்டது.

கூடத்தின் வாசல்படியில் நின்று மரியாளின் வார்த்தைகளை மெல்லியார் கேட்டுக்கொண் 'டிருந்தாரா? அல்லது ஒரு கல்லைத் தூக்கி வந்த சிரமம் தாங்காமல்தான் அவர் விழுந்துவிட்டாரா? அது பற்றி உண்மையை விசாரிக்க யாரும் துணியவேயில்லை. அவர்கள் வந்து பார்த்தபோது, அவர் பிரக்ஞை இல்லாமல் கீழே கிடந்தார். காதில் எதுவும் விழுந்ததாக அவரும் காட்டிக்கொள்ளவில்லை. தன்னையும் அறியாமலே இப்படி அவரிடம் தான் வஞ்சம் தீர்த்துக்கொண்டு விட்டதுபற்றி வருந்தினாள் மரியாள். ஆனால் பிரக்ஞையற்றுக் கிடந்த தன் தகப்பனாரைக் கண்டவுடன் அவளுடைய மனக் கசப்பு மாறிவிட்டது. சீக்கிரமே மெல்லியாருக்கு மூர்ச்சை தெளிந்தது.

இரண்டு நாளைக்கெல்லாம் தோட்டத்தில் நடந்துகொண்டிருந்த தன் பெற்றோரைக் கவனித்தாள் மரியாள். இப்போதெல்லாம் அவர்களிருவரும் அடிக்கடி ஒன்றாக இருந்தார்கள் - முன்னைக்கு இப்போது மிகவும் நெருக்கமாக இருந்தார்கள்; வீட்டைவிட்டே மெல்கியார் போவதில்லை - தம் மனைவியிடமிருந்து தம்மைப் பிரித்த ஒவ்வொருவரிடமும் அவருக்குக் கோபம் வந்தது. கடிதம் எழுதுவதற்குக்கூட அவர் தனியாகப் போய் உட்காருவதில்லை; மனைவியைத்தான் எழுதச் சொல்லுவார். எதையுமே அவர் இப்போதெல்லாம் தனியாக முடிவு செய்து நடத்துவது கிடையாது. எல்லாம் மனைவியைக் கேட்டுக்கொண்டுதான் செய்வார். முன்போலெல்லாம் இரக்கமற்று ஆர்ப்பாட்டமாக, அவர் பேசுவதில்லை. தமது மாறுதலைத் தாமே அறிந்தவர் போல இருந்தார். மனைவி சந்தோஷமாக இருந்தாள் என்பதில் அவர் பெருமைப்பட்டார்.

மரியாளுக்கும் இப்போது வாழ்க்கை சுலபமாகிக் கொண்டு வந்தது. கவலையோ, ஏக்கமோ கொண்டு அவள் வேறு ஓர் எஜமானை நாடிப் போகவேண்டிய தேவை இல்லை. ரத்தம் வடித்த அவளுடைய உள்ளம் இப்போது சாந்தி பெற்றுவிட்டது. வெறுப்புக்கும் அன்புக்கும் இடம் தந்து அவஸ்தைப்பட்டவள் அவள்; இப்போது அந்த அவஸ்தை அவளைப் பாதிக்கவில்லை. முன்னைவிட அதிக அநுபவமும், அது காரணமாக அதிக ஆற்றலும் பெற்றுவிட்டாள். நடந்ததையெல்லாம் அழித்துவிட அவள் விரும்பவில்லை. கஷ்டம் என்பது நல்லது தரத்தானே வருகிறது? மனிதன் கஷ்டத்தையும் விரும்பி ஏற்றுக்கொள்வது நல்லது. எல்லாவற்றையும்- கஷ்டத்தையும் சுகத்தையும்- அமைதிக்குத் தீயாக உபயோகிப்பதுதான் சிறந்த காரியம் வாழ்வில் சிறந்த தத்துவம் இதுதான். உலகில் சோகம் மட்டுந்தான் உண்டு என்பது பொய். எவ்வளவு சோகம் இருக்கிறதோ அவ்வளவு சுகமும் இருக்கிறது. இரண்டையும் நிறுத்து, அமைதி காண்பவன் அறி

வாளி. எங்கேயாவது போய் ஏதாவது சேவை செய்யத் தெம்பு இருக்கிறது அவளுக்கு. மெல்கியார் பழைய மாதிரியே இருந்தால் இதற்கெல்லாம் அநுமதி கிடைத்திராது; திருமணத்தை ரத்து செய்ய அவர் அவளை அநுமதித்தே இருக்க மாட்டார். இப்போது குஸ்தாவா எல்லா ஏற்பாடுகளையும் செய்தாள். பிரபு ஆட்ரியனுக்கு ஏதோ கொஞ்சம் பண உதவிகூடச் செய்ய ஏற்பாடு செய்திருந்தாள் மரியாள்.

அவனைப்பற்றிக்கூட இன்பத்துடன் நினைப்பது இப்போது சாத்தியமாக இருந்தது. அவன் வேறு யாரிடம் காதல் கொண்டானோ, அவளை மணக்கட்டும். ஆதிநாட்களில் ஆட்ரியனும் கெஸ்டாவைப் போலவே உல்லாஸபுருஷன் என்று அவள் எண்ணியதுண்டு. அழகே இராத மரியாளை மணம் செய்து கொள்ள வேண்டியதாக இருக்கிறதே என்று இடையில் சிலநாள் அவன் துயரத்தில் ஆழ்ந்திருந்தான். இப்போது பணக் கஷ்டமும் நீங்கிவிட்டது; அழகில்லாதவளைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டிய அவசியமும் இல்லை; ஆட்ரியன் மீண்டும் உல்லாஸத்தைப் பெறலாம் என்று மரியாள் எண்ணினாள். 'மீண்டும் அவன் பிரபு ஆகிவிடுவான்; அவனுக்குத் தேவையான அளவு நிலமும் வயலும் தந்து, அவன் அதில் பாடுபட்டுப் பணம் சம்பாதிக்க வழி செய்து தரலாம்' - இப்படியெல்லாம் எண்ணிக்கொண்டு, அவள் அவனுக்கு ஒரு கடிதம் எழுதினாள்; விவாகத் தீர்மானத்தை ரத்து செய்வதற்குத் தன் விருப்பத்தை அதில் தெரிவித்தாள். ஆனால் அந்தக் கடிதத்தை அவள் முடிக்குமுன் அவனே வந்துவிட்டான்; நேரே அவளுடைய அறைக்குத்தான் குதித்தோடி வந்தான்.

''ஏன், ஆட்ரியன்? என் அறையில் எல்லாம் தாறுமாறுகக் கிடக்கிறதே!'' என்றாள் மரியாள்.

காதலனுக்கு அதெல்லாம்பற்றி என்ன கவலை? வெட்கமும், அன்பும் ததும்பும் குரலில் அவன் ஏதேதோ சொன்னான்.

''உனக்குத்தான் கடிதம் எழுதிக்கொண்டிருந்தேன்'' என்று சொல்லி அவனிடம் அந்தக் குறைக் கடிதத்தை மரியாள் தந்தாள்.

கையில் கடிதத்தை எடுத்து இரண்டே வரிகள்தான் படித்தான். அவன் படிக்கையில் அவனுடைய முகத்தையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் மரியாள். அவனுடைய முகம் சந்தோஷத்தால் மலரும் என்று அவள் எதிர்பார்த்தாள்.

அதற்கு எதிர்மாறாக நடந்தது: நாலு வரி படிப்பதற்குள்ளாகவே அவனுடைய முகம் சிவந்தது. கடிதத்தைக் கீழே போட்டுக் காலால் மிதித்தான். வாயில் வந்தபடியெல்லாம் தன்னையே திட்டிக்கொண்டான்.

மரியாளுக்கு அப்போதுதான் உண்மை தெரிந்தது. அவளுடைய உடல் ஒரு தரம் நடுங்கிற்று. காதலின் பாடங்களில் அவள் கற்றுக்குட்டியல்ல. விஷயம் தெளிவாகிவிட்டது. ஆனால் இந்த அநுபவமற்ற வாலிபனை அவள் சரியாக அறிந்துகொள்ளவில்லையே!

''ஆட்ரியன், அருமை அட்ரியன்! நீ இத்தனை நாளும் என்னோடு பொய் நாடகமா நடித்தாய்? நிஜத்தைச் சொல்.''

நெருங்கி வந்து, அவளைக் கட்டியணைத்து அவள் காதில் தன் காதலை எல்லாம் ரகசியமாகச் சொன்னான் ஆட்ரியன். பாவம், அவளை எண்ணி ஒவ்வொரு விநாடியும் ஏங்கித் தவித்தவனன்றோ அவன்!

ஜன்னல் வழியாக மெல்கியாரும் குஸ்தாவும் தோட்டத்தில் நடந்து கொண்டிருப்பது மரியாளுக்குத் தெரிந்தது. மலர், பறவை, இன்பம், நட்சத்திரம் என்று என்னென்னவோ அவர்கள் பேசிக்கொண்டிருப்பார்கள்; இங்கே உட்கார்ந்து காதலைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தாள் இவள்!

'ஸ்திரீகளான எங்கள் இருவருக்கும் வாழ்க்கை கடினமான பாடங்களைப் போதித்துவிட்டது' என்று எண்ணி, லேசாகத் துயரச் சாயல் படர்ந்த சிரிப்புச் சிரித்தாள். 'இனி வாழ்வில் என்

களுக்கு ஆறுதல் கிட்டும். எங்களுடன் விளையாட ஆளுக்கொரு குழந்தை கிடைத்துவிட்டது.'

இப்படிப்பட்ட காதல் ஆறுதல் அளிப்பதாகத்தான் இருந்தது. தன் காதில் ஆட்ரியன் கொட்டிய காதல் பேச்சுக்களை அவள் ரஸிக்கத்தான் ரஸித்தாள். முதலில் அவன் பேசிய பணத்தைப்பற்றிய பேச்சுக்களை எண்ணி, இன்று அவன் வெட்கப்பட்டான். அவள் எப்படிப்பட்ட காந்தசக்தி பெற்றவள் என்பதை அவன் அப்போது அறிந்திருக்கவில்லை. அவளை அணுகியவர்கள் அவளைக் காதலிக்காமல், அவளுடைய அன்பை அடைய வலை வீசாமல், எப்படித் தப்ப முடியும்? முதலில் அவளுடைய சக்தியைக் கண்டு அவன் பயந்தே போய் விட்டான். பிறகுதான் கொஞ்சங் கொஞ்சமாகத் தைரியமும் தெம்பும் பெற்றான்.

இது சுகமும் அல்ல; துக்கமும் அல்ல; இரண்டுமற்ற ஓர் அமைதியான நிலை. இந்த நடுநிலையில் அவள் இந்த மனிதனின் மனைவியாக வாழத் தீர்மானித்தாள். அந்த வாழ்வு பூர்ணமானதாக, மிகவும் சாத்தியமானதாக இருக்கும் என்று நம்பினாள். அப்படிப்பட்ட வாழ்வு வாழ அவள் முயற்சி செய்யத் தயாராகவே இருந்தாள்.

இப்போதுதான் தன் மனமே அவளுக்குப் புரிபட்டுப் பிடிபடுவது போல இருந்தது. பழம்பாட்டுக்களில் ஒன்று ஞாபகம் வந்தது அவளுக்கு. மணிப் புறா என்ன பண்ணுமாம், தெரியுமா? தெளிதண்ணீரைக் கலக்கிவிட்டுத்தான், பிறகு அழுக்கை நீக்கி ஜலத்தைக் குடிக்குமாம். அதன் துயரச் சின்னம் கலங்கிய நீர். அதேபோல் தெளிவான வாழ்க்கை ஊற்றை அணுகச் சக்தியற்றவள் மரியாள். கலங்கிய நீரே அவளுக்குத் திருப்தி யளிப்பதாக இருந்தது துயரத்தின் சாயை படர்ந்த இன்பமே இன்பம் என்று அவள் எண்ணினாள்.

கந்தல் மறைந்த மாயம்

'லீயர் மன்னன்' என்ற நாடகத்தை நடிப்பதற்காக, லெஸ்லீ ஹார்ரி என்ற நிபுணர் ஏற்பாடு செய்தார். அதில் வரும் கிளஸ்டர் கோமகனின் நாலு சிப்பந்திகள் கந்தல் துணி உடுத்து வேஷம் தரிக்கவேண்டும் என்று அவர் விரும்பினார்.

ஆனால், நாடகக் கம்பெனியின் உடுப்புக்களில் கந்தல் எதுவும் இல்லை. உடுப்புத் தயாரிக்கும் நிபுணியான ஜேன் ஹெல்டர் என்பவள், கத்தரிக்கோலும் சாயமும் வைத்துக்கொண்டு வெகு நேரம் சிரமப்பட்டுக் கந்தல் தயாரித்தாள்.

அதைப் பார்த்து, ''பேஷ்'' என்று ஆமோதித்தார் நாடக கோஷ்டியின் தலைவர் ஹார்ரி.

புதிதாய்க் கத்தரித்துச் சாயம் பூசிய கந்தல், உடுப்பறையில் ஒரு புறம் காய்ந்துகொண் டிருக்கும்படி போட்டுச் சென்றார்கள்.

மறு நாள் காலையில் கந்தலைக் காணவில்லை. அது மறைந்து போயிற்று.

விசாரித்துப் பார்த்ததில், அந்தக் கந்தல் தத்ரூபமாய் இருந்ததால், சில சிப்பாய்கள் அதையும் மற்றக் கந்தல்களோடு சேர்த்து எரித்துவிட்டார்களாம்!

—'தி டெய்லி டெலிகிராஃப்,' லண்டன்.

இவ்வளவு பெரிய பிராணி, இவ்வளவு சிறிய பிராணியைக் கண்டு எப்படித்தான் அஞ்சுகிறது!

யானையும் எலியும்

ஜார்ஜ் கோல்

யானையைப்பற்றி எவ்வளவோ தவறான கருத்துக்கள் இருந்து வருகின்றன. அது மிகவும் பாரியாக இருப்பதால் முரடு, அதைத் தாக்கவே முடியாது என்று பலருக்கு எண்ணம். ஆனால் உண்மை இதற்கு நேர்மாறு; தொட்டால் சிணுங்கிபோல் அவ்வளவு உணர்ச்சி மிகுந்த பிராணி அது; மனிதர்களுக்கு இயல்பான சில அதிசயப் பண்புகள் அதனிடம் உண்டு. பல பேரிடம் காணும் உணர்ச்சி மிகுதி, பரபரப்பு, எரிச்சல் இவைகளை அதனிடமும் காணலாம். அதற்குச் சில விஷயங்கள் மிகவும் பிடித்திருக்கும்; சிலவற்றைக் கண்டால் பிடிக்கவே பிடிக்காது. மிருகக் காட்சிச்சாலைச் சிப்பந்திகளுக்கு இதெல்லாம் நன்றாகத் தெரியும். சிறு காகிதத் துண்டு ஒன்று யானை புழங்கிவரும் இடத்தில் பறந்து வந்தால் போதும்; யானைக்குக் கோபம் மூண்டுவிடும்: சுண்டெலியைக் கண்டாலோ வேறு ஒரு மூலைக்கு விழுந்தடித்துக்கொண்டு போய் விடும்!

யானைகள் எல்லாவற்றுக்குமே எலிகளையும் சுண்டெலிகளையும் கண்டால் பிடிக்கவே பிடிக்காது: ஜன்மப் பகையாகவே அவைகளை யானைகள் கருதும். இதற்கு முக்கியமான காரணம் ஒன்று உண்டு: யானைக் கொட்டடியில் இரவு வேளை அது தூங்கும்போது இப்படி எலியோ சுண்டெலியோ புகுந்துவிட்டால், உடனே அதன் பாதத்தைத் துருவி எடுக்கத் தொடங்கிவிடும். அப்போது காலிலிருந்து ரத்தம் பெருக்கெடுத்து ஓடினாலும் யானைக்குத் தெரியாது. அப்படி யானை எழுந்தாலும் ரத்தப் போக்கினால் பலவீனமாகிவிடும் என்பது எலிக்கும் சுண்டெலிக்கும் நன்றாகத் தெரியும்.

உள்ளே இருக்கும் தீனி, வைக்கோல் இவைகளில் நிம்மதியாய்த் திளைத்துச் சூறையாடுவதற்கு வசதியாக எலிகள் கையாளும் தற்காப்பு முறை இது. லண்டன் மிருகக்காட்சிச்சாலையில் ஒரு சமயம் இரவு வேளையில் எலிகள் கும்பலாக யானைக் கொட்டடியில் புகுந்து இப்படி இரண்டு யானைகளின் பாதங்களைத் துருவி எடுத்துவிட்டன. மறுநாள் காலை



காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 29-6-'58), கல்கத்தா.

இதைக் கவனித்து அவைகளைக் காப்பாற்ற அரும்பாடு பட்டும் ரத்தப் போக்குக் காரணமாக அந்த யானைகள் இறந்துவிட்டன.

நெடுங்காலமாக, இப்படி ஒரு சுண்டெலிகூடத் தனக்கு ஜன்மப் பகை என்று யானைகள் அநுபவத்தினால் தெரிந்துகொண்டிருக்கின்றன. சில யானைகள் துணிந்து எலியைக் காலால் நசுக்கிக் கொல்லப் பார்க்கும்; என்றாலும், பெரும்பாலான யானைகள் எலியைக் கண்டால் நெருங்குவதில்லை; தொலை தூரத்தில் போய்விடும். 'யானை எவ்வளவு பெரிய பிராணி, எலி எவ்வளவு சின்ன ஜந்து; அப்படி இருந்தும் யானை எலிக்கு அஞ்சுகிறதே! இது நம்பக்கூடிய சங்கதியாக இல்லையே!' என்று தோன்றலாம். ஆனால் யானை தொட்டால் சிணுங்கி ரகத்தைச் சேர்ந்தது; மிகவும் உணர்ச்சி உள்ள பிராணி அது. அதனால் தான் இப்படிச் சில்விஷமம் செய்யும் எலியைக் கண்டால் ஓடி விடுகிறது!

இந்த மாதிரி யானை - எலி விஷயத்தில் ஒரு பெண்யானை மட்டுமாவது வேறு விதமாக நடந்துகொண்டிருக்கிறது. அதன் பெயர் எல்லா. ஐக்கிய அமெரிக்க நாட்டில் உள்ள காலிஃபோர்னியா எழில் மிகுந்த நகரம்; அங்கே தான் வாழ்கிறது எல்லா. டெலிவிஷன் காட்சிகளில் நடிக்க வேண்டும் என்று எல்லாவுக்கு மிகவும் ஆசை. சுமார் அரை டஜன் சுண்டெலிகளுடன் நடிக்க வேண்டியிருந்தும் இப்படி ஓர் ஆசை என்றால் பாருங்கள்! ஆகவே, அகந்தை, தொட்டால் சிணுங்கித்தனம் இவைகளையெல்லாம் விட்டுவிட்டு ஒத்திகையின்போது பல வேடிக்கைகளைச் செய்து காட்டியது. அதில் ஒரு காட்சி, அந்த வெள்ளைச் சுண்டெலிகள் எல்லாவின் துதிக்கைமேல் வரிசையாகப் போய்த் திரும்புவது. டெலிவிஷன் மூலம் இதைப் பரப்பும் பெருநாள் வந்தது; லட்சக்கணக்கான மக்கள் டெலிவிஷனில் எல்லா செய்த தமாஷ்களைக் கண்டார்கள். இரண்டாந் தரமும் எல்லாவை டெலிவிஷன் காமிரா எதிரே நிறுத்தி இந்தத் தமாஷ்களைக் காட்டும்படி பொதுமக்களிடமிருந்து வேண்டுகோள் வந்தது. அப்போது எல்லாவுக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? மக்களும் அப்படியே இந்தக் காட்சியைக் கண்டு களித்தார்கள்.

பல பேருக்கு, 'யானை எப்போதும் கோணல் மாணலாக ஆடி அசைந்து தப்திப் என்று சத்தம் செய்துகொண்டிருக்கும் பிராணி' என்று எண்ணம். யானை வளைய வரும்போது பார்த்தால் அவ்வளவு கம்பீரமாகத் தோன்றுது என்பது உண்மைதான்; இருந்தாலும் - பார்வைக்குக் கோணல் மாணலாக அது நடப்பதாகத் தோன்றினாலும் - அப்படி ஒன்றும் விகாரமாக ஆடி அசைகிறது என்பதற்கில்லை. அப்படி நடக்கும்பட்சத்தில் சர்க்கஸில் கெட்டியான கயிற்றின் மேல் 20 கஜ தூரத்துக்கு நடந்து காட்டச் செய்கிறார்களே, அது சாத்தியமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கும். சர்க்கஸில் யானையைப் பழக்குகிறவர்களில் அநேகம் பேருக்கு இப்படிக் கயிற்றின்மேல் அதை நடத்திக் காட்ட வேண்டுமென்பதே நோக்கம். ஆனால் தரைமட்டத்துக்கு ஆறடி உயரத்தில் கட்டித் தொங்க விட்டிருக்கும் கம்பியில் அது பத்திரமாக நடக்கிறதா என்று தேர்ந்து தெளிந்துகொண்ட பிறகுதான் அதைக் கயிற்றில் நடத்திக் காட்டுகிறார்கள். இப்படிப் பழக்கப் பல ஆண்டுகள் ஆகும். இந்த வித்தையில் தேர்ச்சி பெறும்போது கீழே விழாது சமாளிக்க மனிதர் கோலைக் கையில் ஏந்திக் கயிற்றில் நடப்பது போல் யானையும் துதிக்கையில் கோலைப் பிடித்துச் செல்லும்.

யானைக்குக் கோபம் அதிகம்; என்றாலும், தமாஷை ரசிக்கவும் அதற்குத் தெரியும்; சில ஆண்டுகளுக்கு முன் ஐக்கிய அமெரிக்க நாட்டில் பல இடங்களில் வேடிக்கை காட்டிவந்த சர்க்கஸ் ஒன்றில் நார்மா என்ற ஒரு யானை இருந்தது. ஒரு சமயம் பள்ளிக்கூடம் ஒன்றின் அருகில் கூடாரம்

போட்டுத் தங்கி யிருந்தார்கள் சர்க்கஸ் கம்பெனிக்காரர்கள். குழந்தைகள் ஊஞ்சலில் ஆடுவதைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தது நார்மா; குஷி கிளம்பிவிட்டது அதற்கு. உடனே பள்ளிக்கூட விளையாட்டு மைதானத்தில் நுழைந்து குழந்தைகளை மெதுவாகத் தன் துதிக்கையினால் தூக்கி வேறு பக்கம் வைத்துத் தனக்கும் அவர்களைப்போல் ஊஞ்சலில் ஆட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது என்று தெரிவிக்கப் பார்த்தது. பிறகு ஊஞ்சலில் பின்னுக்கு நகர்ந்து உட்காரப் பார்த்தது. ஆனால் முடியவில்லை; அதற்கு எரிச்சல் வந்துவிட்டது. ஊஞ்சலைத் துதிக்கையினால் சுழற்றியடித்தது. கடைசியில் தோளை ஒரு விதமாகக் குலுக்கிக்கொண்டு மற்ற யானைகளோடு போய்ச் சேர்ந்துகொண்டது. குழந்தைகள் மறுபடியும் ஊஞ்சலில் ஆட வந்தார்கள். நார்மா அவர்கள் இப்படி ஆடுவதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. அந்தப் பார்வையிலிருந்தே, 'குழந்தைகளுக்கு இதில் ஆடும்போது இவ்வளவு குதூகலமா யிருக்கிறதே! நாமும் ஏன் ஆடக்கூடாது?' என்று அது எண்ணுவது தெரிந்தது. மறுபடியும் ஊஞ்சலண்டை போயிற்று. முன்போலவே குழந்தைகளை மெதுவாக ஒரு புறம் வைத்துவிட்டுப் பின்னுக்குப் போய் ஊஞ்சலில் உட்காரப் பார்த்தது. குழந்தைகளுக்கோ இதைப் பார்த்ததும் சிரிப்புத் தாங்கவில்லை! கடைசியில் தன் பருமனுக்கு ஏற்ற இடம் ஊஞ்சலில் இல்லை என்று கண்டுகொண்டது; தன்னை வளர்க்கும் பாகனுடன் அங்கே இருந்தபடி மெதுவாகக் குழந்தைகளை ஊஞ்சலில் துதிக்கையால் ஆட்டுவதோடு திருப்தியடைந்தது.

யானைகள் எப்போதுமே சுறுசுறுப்பாக இருக்கும்; சிரமப்பட்டும் வேலை செய்யும் இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். சிரமப்பட்டு உழைப்பவர்கள் பலர் வேலை முடிந்ததும் கள்ளோ சாராயமோ குடித்துவிட்டு நிம்மதியாக ஓய்வு எடுத்துக் கொள்ள விரும்புவார்கள்; யானைகளும் இந்த ரகத்தைச் சேர்ந்தவைதான். ஆசியாவில் உள்ள யானைகள் பச்சைத் தினையைத் தின்றுவிட்டால் போதும்; வயிற்றில் அது புளித்துவிடும். சில இடங்களில் மாலை நேரத்தில் இப்படி யானைகள் போதை கொண்டு தள்ளாடிச் செல்வதைக் காணலாம். ஆப்பிரிக்காவிலுள்ள காட்டு யானைகள் குடிவகைகளை ரசிப்பதில் தேர்ந்தவை. ஒரு வகைப் பனைமரத்தின் சாறு விரைவில் புளித்துவிடும்; இது யானைகளுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இதைக் குடித்துவிட்டால் அவைகளுக்குச் சில நிமிஷத்துக்குள் குஷி கிளம்பிவிடும்.

ஆனால் ஒன்று: தினமும் மாலை நேரம் இப்படிக் குடிக்க யானையைப் பழக்கிவிட்டு ஒரு நாள் மறந்தால் நம் பாடு சங்கடந்தான். திருச்சூரில் ஒரு சத்திரத்தில் தங்கியிருந்த ஒரு பாகன் பனங்கள் குடித்துவிட்டுத் தன் யானையண்டை வந்தான். அருகில் வந்து அவன் மூச்சு விடும்போது கள் முடை வீசவே, அன்றாடம் மாலை நேரத்தில் குடித்துப் பழகிய யானைக்கு அந்தக் கவனம் வந்துவிட்டது. இவ்வளவு நேரம் அதை மறந்திருந்த யானைக்கு உடனே கோபம் மூண்டது. பாகனை ஒரே மிதியாக மிதித்துக் கொன்றுதீர்த்துவிட்டது.

சர்க்கஸில் யானைகளைப் பழக்குகிறவர்கள் வித்தைகள் எல்லாம் செய்து காட்டியதும் அவைகளுக்கு லேசாகப் பீர் கொடுக்கவேண்டும் என்கிறார்கள். ஆனால் அமெரிக்காவில் ஓர் இடத்தில்மட்டும் இது நடக்காது. மிஸ்ஸிஸ்ஸிபி ராஜ்யத்திலே நாட்செஸ் என்ற ஊரில் யானைக்குப் பீர் கொடுப்பது சட்ட விரோதம் என்று விதித்திருக்கிறார்கள்!

EDITED PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGAMATHAN

பொறாமை

ஓர் ஊரில் ஏழை அந்தணன் ஒருவன் இருந்தான்.

''இந்த வறுமை எத்தனை நாளைக்கு? எங்காவது வெளியூருக்குப் போயாவது பணம் சம்பாதித்து வரலாகாதா?'' என்று அவனுடைய மனைவி தொணப்பினாள்.

அந்தணன் பல மாதங்கள் பயணம் செய்து, காட்டில் ஒரு முனிவரைச் சந்தித்தான். அவர் அவனிடம் இரக்கங்கொண்டு ஒரு செப்பு விளக்கைத் தந்து, ''உனக்கு ஏதாவது தேவை இருந்தால் இதைத் தேய்த்துக் கேள். வேண்டியதை இது கொடுக்கும்; ஆனால் உன் அண்டை வீட்டுக்காரனுக்கு அதே பொருள் இரண்டு மடங்கு கிடைக்கும்'' என்றார்.

அந்தணன் விளக்குடன் ஊருக்குத் திரும்பினான். ''இவ்வளவு நாள் திரிந்து இந்த அதிசயந்தானா கிடைத்தது?'' என்று கழுத்தைச் சொடுக்கினாள் அவன் மனைவி.

''கிடக்கட்டும்; எதற்காவது பயன்படும். இதன் அருமை உனக்கு என்ன தெரியும்?'' என்றான் அவன்.

அவன் மனைவி அதை ஒரு மூலையில் எறிந்தாள். வீட்டில் நாளுக்கு நாள் வறுமை வளர்ந்தது. அந்த விளக்கை விற்றால் ஏதாவது பணம் வராதா என்று அவள் யோசித்தாள்; அதை எடுத்துத் துலக்கினாள்.

''உனக்கு என்ன வேண்டும்?'' என்ற கேள்வி திடீரென்று எழுந்தது. அவள் வியப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தாள்; பிறகு, விளக்குத்தான் பேசுகிறது என்று அறிந்தாள்.

''விளக்கே, நூறு ரூபாய் வேண்டும்'' என்றாள். உடனே அந்தத் தொகை கிடைத்தது. அதே சமயத்தில் அடுத்த வீட்டுக்காரி அவளிடம் வந்து, ''அம்மா, எனக்குத் திடீரென்று இருநூறு ரூபாய் கிடைத்திருக்கின்றன'' என்றாள்.

அந்தணனின் மனைவிக்குப் பொறாமை தாங்கவில்லை. ''எனக்கு ஒன்பது அடுக்கு மாளிகை வேண்டும்'' என்றாள்.

பக்கத்து வீடு, பதினெட்டு அடுக்கு மாளிகையாக மாறியது.

அவளுக்கு வயிறு எரிந்தது. கணவனுடன் ஆலோசனை செய்தாள். ''தெய்வமே, எனக்கு ஒரு கண் போகவேண்டும்'' என்றாள். அடுத்த வீட்டுக்காரிக்கு இரண்டு கண்கள் போயின. ''எனக்கு ஒரு கை ஒடியவேண்டும்'' என்றாள். அடுத்தவளுக்கு இரண்டு கைகள் ஒடிந்தன. ''எனக்கு ஒரு கால் ஒடிய வேண்டும்'' என்றாள். அடுத்தவளுக்கு இரண்டு கால்கள் ஒடிந்தன.

'இந்தத் தண்டனை போதாது; நான் பாடுபட்டு விளக்கைக் கொண்டுவந்திருக்க, பலன் அடுத்த வீட்டுக்காரிக்கா?' என்று அந்தணன் நினைத்தான். ''விளக்கே, என் வீட்டு வாசலில் இரண்டு கிணறுகள் தோன்ற வேண்டும்'' என்றான். அடுத்த வீட்டு வாசலில் நான்கு கிணறுகள் தோன்றின. முழுக் குருடும் முழு முடமும் முழு நொண்டியுமான அடுத்த வீட்டுக்காரி வாசலில் வந்தபோது அந்தக் கிணறுகளுள் ஒன்றில் விழுந்து இறந்தாள்.

''போதுமா? விளக்கினிடம் இன்னும் ஏதாவது கேட்க வேண்டுமா?'' என்றான் அந்தணன், மனைவியைப் பார்த்து.

பாதிக் குருடும் பாதி முடமும் பாதி நொண்டியுமான மனைவி, ''வேண்டாம், இனி ஒன்றும் வேண்டாம்!'' என்றாள்.

—ராஜபுதனத்து நாடோடிக் கதை, 'ஜீவன் ஸாஹித்ய'

Manjari - Aug. '58 **Regd. No. M. 4975**

(Regd. as a Newspaper in Ceylon)

மஞ்சரி

பொருளடக்கம்

விளம்பி - ஆவணி **ஆகஸ்ட் 1958**

ஊரும் உலகமும்	..	..	1
இணையற்ற கலைத் தூதர்	..	ஹிந்துஸ்தான் டைம்ஸ்	3
எங்கும் பரவிய சணல்	..	யோஜனா	6
பெண் பார்க்க வந்தவர்	..	மாத்ருபூமி	10
பதவி பெற வழி	..	..	15
பேசும் பறவைகள்	..	பேரெண்ட்ஸ் மகஸீன்	16
மசூதி நிறைந்த பிஜாபுர்	..	தினமணி சுடர்	23
காரைமடைக் கோயில்கள்	..	சுதேசமித்திரன்	26
செலவை மதிப்பிடும் கணக்கு	..	உத்யம்	29
காகிதப் பூ	..	..	32
பாசுபதாஸ்திரம் பெற்றது	..	..	36
திபேத்தியர் வாழ்வு	..	வித்யாதனம்	41
என்னைக் கேளுங்கள்	..	என். சேஷாத்திரிநாதன்	45
மலர்ச் செல்வம்	..	ஆந்திர மகிளா	50
ஜப்பான் பண்டிகை	..	இந்தியன் ரெவ்யூ	53
புதுப் பட்டு	..	கர்மவீர்	57
பைரியின் பாட்டு (ருஷியக் கதை)	..	ஸோவியத்லாண்ட்	59
அழகி மரியாள் (நாவல் சுருக்கம்)	..	லாகர்லேவ்-க. நா. சு.	65
யானையும் எலியும்	..	அமிர்த பஜார் பத்திரிகை	86
பொறுமை	..	ஜீவன் ஸாஹித்ய (3-ஆம் அட்டை)	